உ

ஸ்ரீ மீனாக்ஷியம்மன் துணை.

---

ஸ்ரீ மதுரைவீரசுவாமி

# பராக்கிரமம்.

இஃது.

பெரம்பூர்-தி-கோவிந்தராஜுகிராமணியாரின்

விருப்பத்தின்படி

புதுக்கோட்டை அதரண அனுசந்தானி

முத்துகுமாரசுவாமிபிள்ளை மாணாக்கரில் ஒருவராகிய

அயன்புரம் வரகவி

இரத்தினகிராமணி அவர்களால்

இயற்றியதை

எழுமபூர்

பார்த்தசாரதி நாயகர்

அவர்களால்.

---

மதராஸ், என். சி.

"கோல்டன்" அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

---

1913

Registered Copy Right.

இதன் விலை அணா 8.

Q 2998:417
N13
170394

MADRAS.



ஸ்ரீ மதுரைவீர சுவாமி.

உ

மீனாம்பாள் துணை.

# சாற்றுக்கவி.

தமிழ்ப்புலவர்

தெல்லி - அப்பாசாமி வுடையார்

இயற்றிய.

## சிறப்புப்பாயிரம்.

கனமிகுங்கைலையிற் பரமசிவனருள்கணை
கதிர்வடிவேற் குமரேசனார்
கணநாதர்நவவீரர் துணைவரொடுமேவியே
கடியசுரரை வென்றநா
ளினமிகும்பூதரிலொன் றுயர்வீரவாகுமுன்
னியானுவென்றே னென்றதின்
னிகற்காந்துணிக்கவரு ளெந்தையாற்காவலா
யிருக்குமந் நந்தனத்திற்
றணமிகுமுமாதேவி யார்ப்பதியருட்செல்வி
தனதுசே டியர்கள்வந்துத்
தருணமணமலர்கொய்ய வருவதுணைமாலையோ
தங்குமிரு பூமகளிரோ
வெணமிகுமுள்ளெழுமின்பின் சரசசல்லாப
முறவிறைதன் றிருவாக்கினா
லெத்திசையுங்களிகூர விகலகெடத்தோன்றினான்
னெழில்தீர வீரவாகே.

## இதுவுமது.

காசியிற்றுளசியிறை மகனாகவோர்பூதங்
காட்டிலிட சக்கிலிசின்னான்
காதலனாய்வாழ்ந்தவன் காவனீக்கிப்பொம்மி
கனியசிறை கொண்டேகவே

யேசில்பொம்மணவரச னுடன்சேனையுரகள்ள
ரின்பயமோடெவையும் வீழ்ததிற்
யிணையிலெழிறவவெள்ளை யம்மையையும்துயிற்கொண்
டேத்தவிடர்ப் போக்கியென்றும்
வீசிபுகழ்மாமதுரை மீனாக்ஷியம்மைவர
வீரப்பசாமி சரிதம்
விளம்பினான்முன்னரா தாரகீர்த்தனை
விளங்கிடச் செப்பியுலகின்
மாசிலாவிரவிகுல கசிபரிஷிகோத்திர
வழிவந்தவப னுபுரத்தில்
வாழ்முனியப்பன்சுத னிரத்தினங்கவிவாணர்
மகிழ் [illegible] பாவலோனே.

10394

---

இ ஃ து,

முத்தமிழ்ரத்தினகரம்

## ம. தி. பானுகவி சுவாமிகள்

## இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடிலாசிரிய விருத்தம்.

சூரியகுலத்துவந்தோன் தோமில்முனியப்பன்மைந்தன்
ஆரியவயன்புரத்தா னழகியவிரத்தினப்பேர்ச்
சீரியன்மதுரைவீரன் சிறப்புறுகாதைதன்னை
ஏரியல்பாவிலாக்கி யிசைநனிநிறுவினானால்.

---

இ ஃ து.

சித்தாந்தசரபம் அஷ்டாவதானம்

## பூவை - கலியாணசுந்தர முதலியாரவர்கள்

## இயற்றியது.

எத்தேவ ரும்பணியு மறுமுகநற் சிவனார்த மிணையடிக்கீ
ழின்ப முறுமுயர்வீர வாகுவெனுமொருதீர னெழின்மாசூரன்,
இத்தரையி லவதாரஞ் செய்தனனென்றேமுன்ன வேற்றம்வாய்
ந்த விணையறுசீர் மதுரைவீரக்கடவுள் பிரபாவ மெவருங்காண,

7

உத்தமனூல் பலவகை விநோத கவியானுரைத் தானுலகம் போற்ற வொளிசூர்யவமிசங் காசிபவிருடிகோத்திரத்தி னுதித்த மேலோன், சுத்தன்முனியப்பவே ளருந்தவத்திலேவந்த சுகிர்த னகிச் சூழ்சோலை நிறையயன் புரத்தினுறை விரத்தினநற் சுகுணன்றனே.

---

இ ஃ து,

கோவளம் வித்துவான்

## குட்டிசாமி நாயகரா லியற்றிய

### சாற்றுக்கவி - குளகம்.

நலனுதவு மிமையவரை கொடுமைசெயு மசுரர்களை நாசமாற்றி
நவிலமற லிபுரமுறவுமயனுதி ககனர்சுகம் நண்ணு மாறும்
இலகுமணி விமலநுதல் விழியுதவ வருமுருக னிளவலென்ன
விமயமலை தருபுதல்வி யிருபதநூ புரமருள வின்புற்றோங்கிக்
குலவுகெட்டுருவெடுத் தடல்சூரபன்மனுறுகோயினிற்போய்
கொடுமைபலதருமசுரரொடுபாநு கோபனைக்கொன்றசால
வலனுதவுநமதரியவீரவா குப்பீனும்மகிதலத்தில்
வந்தவதரித்தரெனபலருநனி கொண்டிடவழுத்துஞ்சீர்சால்.

### வேறு.

சீர்தருங்காசியிற் றுளசிராஜன்றவச் சேயென்றுதித்துமே னுள், திருவிளையாடலாய்பொம்மிவெள்ளச்சிமைச் சிறையெடுத்திடவெதிர்த்த, ஆர்தரும்பொம்மனன் படைகளை யொழித்து திருவாலவாய் நகரம்மணி, அருள்பெற்றிவ் வுலகினர்க் கிஷ்டசித்திகளெலாமருள் செயுமெனதையனும், நீர்தருமதுரைவீரப் பனருஞ் சரிதங்களுடனிசைக்கு மாருதரநூ, லின்புறவியற்றி னனுரெனிலயன் புரத்தினி லிருடிகாசிபகோத்திரன், பேர்தரும் முனியப்பன்செய்தவப் புத்திரன்பிரபல கவிஞர்க்கு மித்திரன், பேசுரத்தினமெனு நற்பெயர்க்குரியவன் பெட்பினைப் பேச வினிதே.

---

இ ஃ து.

பிரசங்கசிந்தாமணி சங்கத்வனி சதாவதானம்.

## தெ. கிருஷ்ணசாமிப் பாவலவர்கள்

இயற்றிய

### நேரிசை வெண்பா.

நாவலர்க ளயந்தேற்க நன்மதுர வீரன்ற
னுவலுறுங் காதை யறைந்தனனற்-பூவரசர்
தங்குடிசேர் பானுகுலச் சான்றோனிரத்தினப்பேர்
தங்கு வரகவியே தான்.

---

இ ஃ து.

தமிழ்ப்புலவர் நெல்லி-அப்பாசாமி உடையார் மாணாக்கர்

## கிருஷ்ணம்பேட்டை - இராஜு கிராமணி.

இயற்றியது.

பானுவழி காசிபனின் பண்டைக் குலத்துதித்த
தேனுநிக ரத்தினன்றான் செப்பினனால்-கானுவக்குந்
தண்டார் புனைவாகன் சாமிமது ரைச்செல்வ
னெண்டரு நற்சரித மீண்டு.



அ. இரத்தின கிராமணியார்.

இப்புத்தகம் வேண்டியவர்கள், சென்னை திருமயிலாப்பூர் ராப்சன்-தோட்டம், சாலிய தெருவு. 10-வது நெம்பர் அ. இரத்தின கிராமணியார். இடம் பெற்றுக்கொள்ளலாம்.

# முகவுரை.

## ஆசிரிய விருத்தம்.

ஆதியாகிய காசிதலப்பெருமையையயன்
அருளினர்முனிவருக்கு
அரனார்தன்சடையில்வரும் கங்கையில்மூழ்கிட
அளிக்குமே மோக்ஷமதனை
ஆனந்தகானகம் மணிகர்ன்னிகை தீர்த்தம்
அஷ்டசித்திகளையீயும்
அரசன்திவோதனன் மோக்ஷமடைந்ததலம்
அதிதிதேவதைகள்பீடம்
ஆறுசாஸ்திரம் பதினெண்புராண மறுபத்துநால்
கலைஞானமும்
அருளியவ்யாச முனிகரமற்றபதியிது
அண்டர்கள்வாழும் நகரை
ஆண்டிடும்சத்தியசந்தன் துளசிமகாராஜன்
அன்பினல் விஸ்வனுத
அம்பாள்விசாலாக்ஷிதனை துதிக்கவேயிந்த
அருள்மதுரை வீரர்தானும்
ஆதியில்வீரவாகு தேவனுகியே
அசுரரைவதைத்த பின்பு
அக்கிரமமாய்பூதத்தின் கரமதைதுணிக்கநீ
ஆறுமுகர் சாபமேற்று
ஆண்டவாநந்தவனம் காக்கின்றபோதுமே
அங்குயிருபெண்களோடு
ஆவலாய்பேச பார்வதிநீங்கள்மூவரும்
அவதரியுமானிடரென
காவலாவுன்னை காசியினில்பிறக்கவும்
கன்னிகள்வெள்ளை பொம்மி
காசியில்பிறக்க நினை பூதமதெடுத்துனை
காட்டினில்போட நிகிலன்
கானகந்தனில் மானைகொன்றதால்மாமுனி
கடைசாதியாக சாபம்
காவலன்நீச்சவுருவாகியே பத்னியுடன்
கம்பளர்க் கடுமையான
மாதுவுனைகாட்டினில் யெடுத்தேவளர்த்தபின்
மைந்தனைகாக்க வைத்தார்

மாங்காளியிடத்தில்வரம்பெற்று வேட்டையாட
மந்திரியுடன் காசிராஜன்
மாற்றரசனென்றுனை கண்டுவுன் னூர்பேரும்
மர்ம்மமில் லாதுரையென
மன்னவாகாசியாள் யிறைதுளசிமைந்தனுன்
மகிபனே வீரனென்றீர்
ஆனந்தமாகியென் மைந்தநீதானென்று
அரசாள உனையழைக்க
அன்புடன்வளர்த்தவர்க்கிதஞ் சொல்லிவருவேனென
அடைந்தாய்நீ பொம்மிகாவல்
ஆனந்திசக்கம்மா சொல்போலபொம்மியை
அப்பனே விவாகம்செய்து
அர்த்தராத்திரியில்சிறை கொண்டுபடைகளைக்கொன்று
அடைந்தாய்நீ திருச்சிநகரை
தாதிகளழுதரசனிடஞ் சொல்லபொம்மணன்
தன்படை யோடுவரவே
தையல்கண்டுரைக்கநீ படைகளைவதைத்ததை
தான்பார்த்து விஜயரங்கன்
தாரேன்தினத்துக்கோர் ஆயிரம்பொன்னென
தானமர்ந் தீர்சேவகம்
தலையாரிகளைக்காண வருகையில் அப்போது
தான்கண்டு கௌரிஉன்னை
காமத்தைத்தீரெனகன்னினுன் விரதனென
கௌரிசாராயம்தந்து
கைபடந்தனிலுந்தன் வுருவமெழிதியபின்பு
கண்தெரிவிக்க நீயும்
காவலன்வாழைதரபசுங் களரதாக்கிநீ
கண்மணி யிதையறுத்து
கால்மூளைகண்யீரல்கரிகள் வெவ்வேறதாய்
கன்னியேசமைப்பாய் நானும்
மாதேசின்னுன்வீட்டில் தின்றதுயெனபொம்மி
வகைவகை சமைத்துவைத்த
மாமிசமெலாம் மரக்கரியாகச்செய்தவுனை
மாளஅன்னத்தில் விஷத்தை
மாற்றலர்ஆறுயிரம் கற்கோட்டைகள்ளரை
மன்னவா கொன்றெறிந்தீர்
மதுரைக்குதிருமலை ராயனுமழைத்திட
மடக்கரெட்ட மலைகள்ளர்கள்
வாதாடஅவரையும் வதைத்துவருவதைக்கண்டு
வந்துதிருமலை நாய்க்கனும்

வணக்கவாயுனையழைத் திளவரசுகட்டிட
வதைத்தாய் வெள்ளிமலைகள்ளரை
அணையுமென்றெதிர்கொண்ட கலந்தர்மலைகள்ளரை
அதமாக்கி தனமெடுத்து
ஆலயம்கட்டவும்யேழைகள் பிழைக்கவும்
அங்கங்குதனத்தை யீந்து
வாதிட்டுபகுதிபணம்பாக்கிகள் வசூல்செய்து
மாதுமீனாக்ஷி கோயில்
மகிழுமராசாளமால் விசாலமாய்க்கட்டியே
வந்தனை ஆயிகோயில்
ஆனந்தமாய் வெள்ளைமீனாக்ஷியைபாடும்
அதிரூபவதியைப் பார்த்து
அர்த்தராத்திரியில்சிறை யெடுத்தேகாவலர்
அறிந்தரசனிடத்திற்சொல
பாராளும்ராஜனு அழைத்தானென்றுறைத்
திடபத்தினியுடன் சென்றீர்நீரும்
பலநீதிஅரசனும் உரைக்கவேவுன்மனம்
பதைத்திடும் போதுஅப்போ
பார்வதிசாபமது விலகிவுன்வாளினல்
பகவானே நீர்பிறந்தீர்
பதிவிரதையிருவரும் குதிரையுடன்தீபாய
பகவதி மீனாக்ஷிதன்னை
தான்அடங்கிடச்செய்து ஜோனகர்தானுமே
தனதிருப்பிடத்திற்செல
தற்பரன்உன்னை சமாதிவிட்டெழுப்பியுன்தாயை
மாந்திரீகத்தால்கட்டி
தானேகினர்மலையாளம் நீசென்றுந்தன்
தாயைமீட் டவர்களுயிரை
தட்சணம்சென்றுநாசப்படுத்தென்னவே
தற்பரன்தன்னை நீரும்
மாதிருவர்குதிரையுடன்யென்றுமே யிருக்கவும்
மாற்றலர்கள் கண்டோடவும்
மந்திரம்கருவுகள் வுன்னெதிரிலாமலே
மானிடர் குறைதீர்க்கவும்
மானேந்தும்கையரிடம்வரமெலாம் வாங்கியே
மலையாள ஜோனகரைவென்றீர்
மகிபனேமினாக்ஷி கம்பத்தமர்ந்துநீ
மன்னாவுன் பூசைவாங்குன்
காதினில்கடுக்கனும் கலிக்கத்துராமுருகு
கதிரொளிபோல் எந்தமுடியும்

கண்டசரம் பாசிபந்துவிரல் மோதிரம்
கக்கத்திலிருமாதர மூகும்
காலினில்வீரகண்டாமணி வெண்புரவிநீ
கட்டும்வேஷ்டியி னொயிலும்
கைதனில்கொடுவாளும் முதுகினிலம்புராத்தூணி
கஸ்தூரிபொட்டுமிலக
பாலியர்வெண்பட்டுகுடையது பிடிக்கவும்
படைகளெக்காளமூத
பாவிகள்ளர்களுயிர் கொள்ளைகொள்வீரனே
பகைத்தபொம்மணன் சேனையை
பரதவித்திடஅவருயிரைவொரு னொடியினில்
பலிகொண்ட வீரதீரா
வாராயெனதுதுயர் தீராய்வுனதுபதம்
தாராய் தராதலமெலாம்
மாராமலனுதினமும் துதிகொள்மனத்துயர்தீர்க்கும்
மகிபனே மாரதீரா
வாராமல்யென்துயரை தீராதிருப்பதேன்
வாரணாசியிலுதித்த
வாதாடிநடமாடும் அரனாரிடத்தில்வரம்
வாங்கிகுரை தீர்ப்பதர்க்கு
ஆதாரா அருள்தாராபுகழசூரா ஆருக்கு
மடங்கா கெம்பீரவீரா
அதிகாரா அவதாரா நீரைவிராமதுரைதுரை
பணிவீர அதிதேவதா
வானத்திலுதயகுலநீதியாகிய நித்திய
னந்தனேமகாதேவனே
மைந்தன்இரத்தினம் துதிக்கவந்தருள்புரி
மதுரை வீரப்பதுரையே.

---

## ஆக்கியோன் பெயர்.

இயலும்கலியுக மைய்யாயிரம் பதிமூன்ரென்றிலகுபரிதா பியதனில், வயப்பட்ட ஆனியேழில்வியாழம் சஷ்டியாம் மக நக்ஷத்ரமர்தயோகம், நயம்படமதுரை வீரசுவாமிவல்லபம் நற் சுபந்தனில் முடித்தோன், அயன்புரம் முனியப்ப கிராமணி சுதன்ரத்தினம் அடியார்க்கு அடியேன்நானே.

உ

சிவமயம்.



# மதுரைவீர சுவாமி வல்லபம்.

## நேரிசை - வெண்பா.

அத்தி முகத்தானை அறுமுகர்க்கு மூத்தானை
பத்தியுடன் வீரன்மேல் பாபுகல - ஒத்திசையும்
மூலத் திருந்து முன்னடத்தும் பாவனையை
காலத் திலுமிதனைக் கா.

## அவையடக்கம்.

கற்றோரையெல்லாம் கைகூப்பியான்தொழுதேன்
கற்றோரைப்போல்வீரன் காதைதனையுரைத்தேன்
கற்றோர்களென்கவியின் கசடறுத்துபொறுப்பதலால்
மற்றோருமென்கவிக்கு மன்னிக்கவேண்டினனே.

## கூத்தாடும் விநாயகர் துதி.

அம்பலத்தில் ஜீவருய்ய நடமாடுமுன் னப்பனார்
நடனமதை நீர்

இம்மயிலை தனிலாட தேவர்மா லயன்போற்றிங்
கேழிடத் தினிலமர்ந்தீர்
இம்மர்மா மதுரைவீ ரப்பதுரை சரிதம
திசைக்கவே யருளுமையா
கும்பிட இம்மைமறு மையில்சுகந் தருமிந்த
கூத்தாடும் குஞ்சரனையே.

---

## கபாலீசர் துதி.

திருமயிலை நகரதனில் உரைகபா லீசரே
தேவேவு னருளைப்பெற
திருமாலும் யேழுவுரு வாகியின் னகரதனில்
தினமுனை தொழுதுநிற்க
த்ருகவரம் அவர்குறையை தீர்க்கநீ ரங்கங்கு
தானேழு யீசராகி
தற்பரா திருக்கோயில் கொண்டுகுறை தீர்த்துமே
தையலை யெரித்தெலும்பை
உருவமாய் பாட்டுக் கிரங்கி பெண்ணாக்கிநீர்
ஊமைக்கு மோக்ஷம்தந்தீர்
உமையவள் மயிலாகி புன்னைநிழ லதனி
லொழுங்குடன் பூசிக்கபெற்ற
அருமைதனை புகலாதி சேடனு லாகுமோ
அறிவிலேன் புகலயெளிதோ
அண்ணலே என்கண்ணின் மணியினுள் உரைகின்ற
ஆதியே கபாலீசனே.

---

## கற்பகவல்லி துதி.

கற்பக வல்லியெனு மற்புதப் பேர்தன்
கருத்தினை யறிந்துகொண்டேன்
கற்பக விருக்ஷத்தை போலெது கேட்கிலும்
கௌரிநீ கொடுப்பதாலே
நற்பதவி மோக்ஷமொடு துர்நடை கேட்கிலும்
நாயகி தரவாங்கியே

நவின்றநற் கற்பக மென்றுநான் மாத்திரம்
நலியொடு வறுமைபெற்று
சற்புத்தி யில்லாமல் சங்கரி நானலைய
சரியா யிருக்குதோசொல்
சரிவுண் டிலையென் றிரண்டிலொன் றெதிர்வந்து
சாம்பவி புகலாவிடில்
அற்பனென் உன்பாதம் என்மனதில் வைத்துனை
அழுத்தியே வருத்துவேன்பார்
அன்பர்கள் உய்யதிரு மயிலையில் எழுந்தருள்
அம்மைகற் பகவல்லியே.

## சிங்காரவேலர் துதி.

அருத்தி மறைபுகழ்கின்ற ஆறு முகத்தையநீ
அசுரரை வதைத்தபோது
அரக்கர் மாமிசமுண்டு காளிகள்வமுபே
ரானந்த மாகியவர்கள்
நிருத்தி தன்மனமதை வெறுத்து மற்றதையெலாம்
நின்றுமே யங்கு அங்கு
நித்தியனே உக்கிரரூ பத்தைக் கண்டேயுனது
நிரஞ்சன ரூபத்தைக்காண
வருத்தியே சரஹணபவவென நினைக்கையில்
வந்தனை மயிலின்மீது
வடிவேல் துலங்கவருள் வள்ளிதெய் வானையுடன்
வந்தவுன் அழகுகண்டோர்
வருத்தமதொழிந்துபின் வல்வினை யகன்றுமே
மறுமையில் முத்திசேர்வர்
வந்தேன் வுனதுபதந் தந்தாள் திருமயிலை
வாழுஞ் சிங்காரவேலே.

## திருமால் துதி.

கோவிந்த வைகுந்த வாசவெங்க டேச
கோபால அரிராகவா
கோபிஸ்திரி மணவாள கருடவா கனகிருஷ்ண
கோவரத்தின கிரிவிலாசா

ஆவினங் களைமேய்க்கும் நாரசிம்மா ராமா
　　ஆயர்வெண் ணெயுண்டவா
ஆலிலை துயின்றவா கேசவ பத்மநாபா
　　அனாதிரக்ஷக வராகா
தேவி தேவகி நாதா வாசுதேவா நெடுமால்
　　தேவர்தேவா வாமனா
தேர்விடும் சாரதி மச்சகூர்ம திரு
　　மாலே பரந்தாமனா
மாவிலாசா பரசுராமா பலராமா
　　மண்ணுண்ட ஆபத்பாந்தா
மாதவா வுன்மருகன் மதுரைவீரப்ப னெனை
　　மனதில்சற் றுளநினையே.

---

## நவவீரர் துதி.

விண்ணவர் மாலய நிந்திரன்கண் ணெனவந்த
　　வீரவாகு தேவருக்கும்
வீராதி வீரரா கியசூர ருக்கெமன்
　　வீரகே சரியவர்க்கும்
கண்ணா யிரமுடையோன் கஷ்டம் தீர்த்திடவந்த
　　கடவுள்விர மகேந்திரர்க்கும்
காற்றருளும் வீரமகே சுரர்வர்க்கும்
　　கடலைகா லால்கலக்கும்
பண்தவப் பயனானவீர புரந்தரர்
　　பலாட்டிய வீராருக்கருக்கும்
பாதுகாத் தருள்கின்ற வீரமார்த் தாண்டர்க்கும்
　　பலதேவ ரும்பணியும்
சண்டப்பிர சண்ட வீராநந்த அய்யர்க்கும்
　　சாமிவீர தீரருக்கும்
சதாயெனைக் காக்கவே நவவீர ரேவும்மை
　　சரணம் செய்தேனாளுவீர்.

---

## வீரவாகுதேவர் துதி.

அரிமகன் மகன்சுதன் சுதனிரவி கோபனை
　　கோபித்ததமாக்கி யவரை

பரிவுடன் அமரரைக் காற்று ரக்ஷித்தபின்
பக்ஷமது வைத்துபின்னும்
வெரித்துஅக் கிரமஞ்செயும் கள்ளரை யதமாக்க
வேந்தன் துளசிமகனைப்
மரித்தாய்நீ வொன்பது கம்பளத் தாரையும்
மதுரைவீ ரப்பதுரையாய்.

---

## மதுரைவீரசுவாமி துதி.

அங்கயர் கண்ணியுட அருளதைப்பெற்றவா
அரவம்கார்த் திடவந்தவா
அடியவர்கள் யிடர்தனை தீர்த்தாண் டருள்பவா
அவதார தேவதேவா
திங்கள் அணிந் தோனிடம் வரம்வாங்கும் வல்லவா
திகழ்கின்ற யிரவிகுலவா
தீபோட்டுக் கள்ளரிட குலத்தை யழித்தவா
திக்கெட்டும் துதிக்கின்றவா
கங்கை சூழ்கின்ற காசிநக ருதித்தவா
கண்கண்ட தெய்வமலவா
கம்பளம் வொன்பதும் தும்சம்நீ செய்தவா
கருணாகர நல்லவா
மங்களா கார மதுரைமா னகர்காத்தவா
மாது பொம்மிதுணைவா
மைந்தன் இரத்தினம் வுன்புகழை சொலநாவில்
மதுரை வீரப்பதுரைவா.

# கதையின் வரலாறு.

காற்றுலவு மதுரைநக ரரசுபுரி கௌரிகுல
காவலன் தெலுங்கரசனும்
காளைவீ ரப்பனார் யிறந்தநாள் முதற்கொண்டு
கள்ளர்கள் பயத்தைபூண்டு
தார்மேவும் திருமலை நாய்க்கனும் வோர்தினம்
தான் அரசுபுரியுநாளில்
தாங்கியே வீணைதனை மீட்டியே நாரத
தபசிவர கண்டரசனும்
சீருலவு மலரடியை திருமலை நாய்க்கனும்
தீர்க்கமா யணிந்தாசன
சேரவிருமென்ற வரசன்முகம் நோக்கிநீ
திகில்கொண் டிருப்பதேன்சொல்
ஊர்மேவீ யேகள்ளர் வுபத்திரவம் செய்வதால்
ஒருவீர னிறந்தானென்று
உள்ளமதி லெண்ணியே குன்றினே னல்லாது
வொருகுறையு மில்லையென்ன
தேர் யேர்ரசனே வீரன்முன் பிறப்புமுதல்
தெரியுமோ வெனதவசியும்
தெரியா தென்ரரசனும் ஆதியோ டந்தமாய்
தெரிவிப்பா யென்றுகேட்க
பூர்வோத் திரம்முதல் புகலுவேன் வீரனெனும்
புண்ணியவான் தன்பெருமையை
புத்தியுடன் கேட்டிதனை சித்தமதி லேயவனை
பூசிப்பா யென்றுசொல்ல
நீர்கொண்டு முனிவரிட பாதம் துலக்கியே
நிருபன்பட் டால்துவட்டி
நிருடிபா தத்திற்கு கந்தபுஷ் பங்களால்
நேமமுட னரசன்சாத்தி
பூர்வோத் திரம்முதல் யின்றளவும் பிசகாமல்
புகலுவா யெனநாரதர்
புகன்றதை சிறியேன் இரத்தினம் புகலுவதில்
பிழையிருந்தால் பொறுப்பீர்.

29

கல்லார்க்கும் கற்றவர்க்கும் என்ற நடை.

## கணபதி துணை.

ஆதிகணபதியான ஐங்கரனேசரணம்-சுவாமி
அன்புவைத்தேன்நாவதினி லமர்ந்தருளதருணம்
பண்டுபலகாரமீதோபடைத்தே நீங்குவாரும்-சுவாமி
பக்ஷணம்செய் தேயிதனைபாதுகாத்தருளும்
மதுரைவீரசுவாமி கதையிம்மானிலத்திலோங்க-ஐயா
மாதுவல்லபையுடனே மகிழ்ந்திதனைகாக்க
முத்திக்குவித்தாகிய முதல்வாயெனையாள-சுவாமி
மூஷிகத்திலேறிவந்து முன்னருளைத்தாரும்
புஷ்பத்தால்ஆசனத்தைபோட்டே னமர்ந்தருளும்-சுவாமி
புத்திசித்திசமேதாநின் பொன்னடிக்கேசரணம்.

## சரஸ்வதி துதி.

புத்தகத்தினுள்ளுரையும் பொதுசமயதேவி-அம்மா
பூவிலுரைவாணியாளே போற்றிசெய்தேன்வாரும்
நான்முகனார்நாவிலமர் நங்கையாளேயெந்தன்-தாயே
நாவதனிலேயிருந்து நவில்வாய்வீரப்பன்
பெருமைதனையிச்சிறியேன் பேசுதற்குநீயும்-அம்மா
பிழையிலாமலுலகிலிதை பெருகஅருள்சரணம்.

## சொக்கநாதர் துதி.

ஆலவாய்தனிலமர்ந்த ஐயாசொக்கேசா-ஈசா
அனுதினமும்வுனை துதிக்க அருள்புரிவாயீசா
அறுபத்துநான்குதிரு விளையாடல்புரிந்த-தேவே
அண்டர்முதல்யாவருக்கு அப்பனுகவந்த
அருமறையில்நடனமிடு மப்பாசர்வேசா-இந்த
அடியேன்சொல்பாடலுக்கு அருள்புரிவாயீசா.

## மீனாக்ஷி துதி.

மரகதமீனாக்ஷி மாதேயெனைக்காவாய்-அம்மா
மதுரைநகரரசைவிட்டு மனதுகந்துவருவாய்
கம்பத்தடிகாக்கும் காவலன்மேல்பாட-தாயே
கருணைபுரிந்தெவருமிதை களிப்புடனேநாட
அடிபணிந்துனதுதாளை அன்பில்யானும்கொண்டேன்-அம்மா
அத்துவிதவித்தகியே அமர்ந்திடவந்தனமே.

## அங்காளம்மன் துதி.

மலையனூர் அங்குகண்ணே மாதேபேரம்பாக்கம்-நீயும்
மைந்தன்குலதேவதையா யமர்ந்தயெந்தன் தாயே
கஞ்சுளியும்கப்பரையும் கரந்தனிலேயேந்தி-நீ
கட்டியசித்தாங்கத்துடன் கனநடனமாடி
பெரியாண்ட வரும்நீயும்பேய்கூத்தாடியே-அம்மா
பிரியமுடன்வீரனைபாட பித்தா அருள்புரிய
அய்யரும்நீயுமாக ஆனந்தமாடியே-இங்கு
அடியேனுக்கருள்புரிந்து அமர்வாயிப்போதே.

## பச்சையம்மன் துதி.

பச்சைமலைநாயகியே யிச்சையென்மேல்வைத்து-தாயே
கொச்சைமொழிபாடல் யீதென்றுகோடுதள்ளாமல்
மன்னுதயீசருடன் மருவியிருபேரும்-இப்போ
மாதேதிருமுல்லைவிட்டு மைந்தன்குரல்கேட்டு
தபமுனிகள்ஏழுபேரும் தாயேவுன்னுடனே-அம்மா
ததியிந்தவேளைவந்து தானமருவீரே.

## விஷ்ணு துதி.

மாயாஅவதாரா மனதுகந்துவருவாய்-ராமா
மங்கைஅலமேல்தாயுடன் மகிழ்ச்சியுடன்வருக
துளசிமாலைதரித்த துவாரகைவாசவனே-அரிகரி
துஷ்டயிரண்ணியனைக்கொல்ல தூணிலுதித்தவனே
திருப்பதிமலையைவிட்டு திரும்புங்கருடனேறி-சுவாமி
திருமாலேகோவிந்தா அரிராமாவாரும்
காசாம்புமேனியனே கண்ணுவமர்ந்தருளும்-ராமா
வாசமாகஅழைத்ததேவர்வருக அருள்சரணம்.

## முருகர் துதி.

தேன்மணக்குது தினமணக்குது யென்றவர்ணம்.

திருப்போரூர்தனில்வாழும் தீனதயாளா-முருகா-தினி
செல்வஆறுமுகத்து தேவதேவனேவாவா-முருகா
அன்புடனேஉன்பால்வரும் அடியவர்குறையை-முருகா-அடி
தெம்புபெறதீர்த்தருளும் தீனதயாளா-முருகா

வள்ளிதெய்வானையுடன் வடிவேல்யேந்தியே-முருகா-வடி
புள்ளிமயிலேறியே யிப்போதிங்கேவாவா-முருகா
அடியேன்மதுரைவீரசாமியை அன்புடன்பாட-முருகா-அன்
வடிவேலாயென்வாக்கிலிருந்து வசனிப்பாயையா-முருகா.

## அகோரவீரபத்திரர் துதி.

### அகவல்.

அங்உங்மங்ளனு மக்ஷரத்தானே
நங்மங்சிங்வங் யங்கென துதித்தேன்
திங்களணியும் தேவன்வேர்வையினல்
சிங்கம்போலுதித்து தேவரைவதைத்த
அகோரவீரபத்திர ஐயாவருக
சகோதரருடனே சுவாமிவீற்றிருந்து
அழைக்கும்தேவதைகள் அனைவரும்வருக
பிழைபொறுத்திவிடம் பிரியமாயழையும்
அஷ்டகாளியரும் அஷ்டவயிரவரும்
பக்ஷமாய்கன்னியர் பரிந்தேழுபேரும்
குட்டிகளெட்டும் குரணிகறுப்பனும்
அஷ்டயெக்ஷணியும் அடங்காதவேங்கையும்
அய்யனரப்பன் அனுமந்தராயன்
பயங்கரமான பக்ஷிகிங்கிலியன்
பாவாடைதுர்க்கை பகர்தூமாதேவி
தாவாடமுனிமாடன் தடியண்ணமாரும்
மாரிமுத்தென்னும் மகமாயிரேணுகை
பாரினுலுள்ள பலபலதேவரும்
நாற்பதெண்ணுயிரம் நலமுள்ளரிஷிகளும்
முப்பத்துமுக்கோடி முதலானதேவரும்
பதினெண்சித்தரும் பகர்கிம்புருடரும்
அதிதேவதைகள் அனைவரும்வருக
கிராமதேவதையே கிளிமொழியாளே
பராமுகம்பாராமல் பலதேவர்களையும்
அகோரவீரபத்திர ஆக்கினையாலே
தகோலுரைக்காமல் தக்ஷணம்வருக
அன்பத்தொன்றை அகமதிலிருத்தி

இன்பமாய்பஞ்சா க்ஷரமதையோதினேன்
அய்யும்கிலியும் சவ்வும்ஸ்ரீயும்ரீயும்
மெய்யாமம்பிகை பீஜத்தையோதினேன்
வருவாயகோர வய்யாவருக
வருகஞனழைத்த தேவதையெல்லாம்
உனதாக்கினையால் வொருமித்து இவ்விடம்
சினமிலாமலிச் சிறியேன்சொல்கேட்க
காக்கவேயென்னையுன் கழலடிபோற்றினேன்
தீர்க்கமாயுந்தன் திருவடிசரணம்
சரணம்சரணம் சகலதேவருக்கும்
வரவழைத்ததேவ ரமரும்ஆசனத்தே
நினைத்ததேவரும் நினைக்காததேவரும்
செத்துமடிந்தவர் சிவன்பதவிசேர்ந்தவர்
மாண்டுமடிந்தவர் மாயன்பதவிசேர்ந்தவர்
இல்லிடத்துதெய்வம் இஷ்டகுலதெய்வம்
அனைவரும்வருக அடியேன்சரணம்.

## கதையின் வரலாறு நடை.

ஆதியிலேசூரபத்மனென்றே-யொரு
அசுரன்யீசனிடத்தில்வரம்பெற்று
இநதிரனை துரத்தியவன்சுதனை-அவன்
இட்டான்சிறையினிலப்போது
தேவர்கள்கைலேயிலேசென்று-சிவனை
தெண்டனிட்டுகாக்கவேணுமென்ன
நல்லதெனபரமன்நெற்றிக்கண்ணைத்-திறக்க
நவினுமக்கினிபொரிகளுருசிந்த
அக்கினிபகவானை அரசனும்-அழைத்து
அடக்கம்செய்வாய்இதனையெனபரமன்
சகிக்கமுடியாமலக்கினிபகவான்-அதை
சரஹணபொய்கையிலேவிடுத்தான்
ஆறுகுழந்தையாகயீசன்-அதனை
அம்பிகையையெடுத்துவாருமெனவே
உமையவளெடுக்கவுடலொன்றாய்-முகம்
ஒராறுகவிளங்கஅம்மன்

பாதச்சிலம்பில்நவமணிகள்-விழவே அது
பசுமையுள்ளநவகன்னிகளானார்
அரனுடையபார்வையினால்கற்பம்-கன்னிகள்
அடைந்துநவவீரரைப்பின்றார்கள்
பார்வதியாள்நவவீரரைபார்த்து-நீங்கள்
பன்னிருகைவேலருக்கு அடிமை
என்றுசொல்லிஈஸ்பரியும்சென்றாள்
எடுத்தார்சூரனைகொல்லபடையை
கணநாதர்பூதபடையிவர்க்கு-உதவியாய்
கலந்தேசூரனைவென்றுவந்தார்
பூதமொன்றுவீரவாகுவைப்பார்த்து-நான்
போரில்வெகுசூரர்களைக்கொன்றேனென்ன
அந்தமொழிவீரவாகுகேட்டு-நான்தான
அனேகசூரர்களைக்கொன்றேனென்ன
என்றிருவர்வாதமிடவீரன்-வாளை
எடுத்துபூதம்கையதனைத்துணித்தான்
அரிந்தகையெடுத்தே அந்தபூதம்-அழுது
ஆறுமுகன்முன்புவந்துகாட்ட.

### விருத்தம்.

ஆறுமுகவித்தகனும் அழைத்துமேவீரன்தன்னை
வேறுபடகையதனை வெட்டினதால்பார்வதியாள்
காரும்நந்தவனமென்று காங்கேயர்சாபமிட
தாரும்சேவையென்றுவீரன் தாழ்ந்தடிபணிந்துசென்றான்.

### விருத்தம்.

கட்டளையின்பிரகாரம் காக்குமந்தநாளையிலே
இட்டமுடன்கன்னியர்பூ எடுக்குமொருநாளதனில்
வட்டமுலைபாதர்வீர வாகுடன்சிலநேரம்பேச
புட்பம்பூசைக்கில்லையென புறப்பட்டாள்ஈஸ்வரியாள்.

### நடை.

காந்தாளத்துடனே கவுரிவரவும்-அதை
கண்டுபணிந்தார்கள் மூவருமாய்
பரமனிடபூசை யெற்குபுட்பம்-இல்லாமல்
பண்ணினதால்பிடியும் சர்பமென்று

நல்லதுவீரவாகுவே நீயும்-இந்த
நங்கையரும்பூமியில் மானிடராய்
பிறக்கக்கடவதென்று சபித்தாள்-இவர்கள்
பிழைபொறுத்தருளும் தாயேயென்ன
என்றுயிவர் துதிக்கையி லீஸ்வரியாள்-நீங்கள்
ஈதிரொன்றும்பேசாமல் நீங்கள்மூவரும்
காசிதுளசிராஜனுக்கு புத்திர-னாக
காவலாநீபிறக்கவென்றுவுரைத்து
கம்பளசாதி பொம்மணன்தனக்கு-நீபோய்
கமலவதிபிறக்க வெனசபித்தாள்
மதுரையிலே புநிதவதிதாசி-அந்த
மங்கையர்க்கு குமுதவதிநீபிறக்க
பிள்ளையில்லாம லவர்களென்னை-தினம்
பிரியமுடன் தவமியற்றிநிற்கிறார்கள்.

## விருத்தம்.

ஆகையினால்புவியில்நீங்க ளவதரித்தபிறகேஇந்த
தோகையரைக்கூடியபின் தொல்லுலகில்பேர்விளங்கு
மாகையினலொன்றுக்கு மஞ்சவேண்டாம்தடாதகையாய்
ஈகையுடன்மதுரையிலே இஷ்டமுடன் காப்பேனென்றாள்.

## நடை.

ஈஸ்வரியும்கைலைக்கு எழுந்தாளெனநாரதரும்
திருமலைநாய்க்கனவன் தெண்டனிட்டுதபசியரே
காசியிலேவீரனுமாய் கம்பளத்தில்பொம்மியாக
மதுரையிலேவெள்ளையுமாய்-வந்தவயணமதை
எந்தனுக்குவிபரமதாய் எடுத்துரைக்கவேணுமென்றான்
நல்லதரசனேநீ நானுரைப்பேன்கேளுமென்று
கமலாபுரியில்வாழும் கம்பளத்தாரென்னும்சாதி
கருவதனல்மாந்திரீகம் அந்தகசடர்செய்யும்வேலையைகேள்
தலைச்சன்பெண்ணானவள்தான் தலைச்சன்கர்ப்பமிருக்கயிலே
ஐந்துமாதகர்ப்பமதை அழித்துதைமிறக்கி
கருங்கழுதைதைலமதில் கலந்தேதஜங்கோலமதை
மைபிடித்துசித்தாடும் மாந்திரீகர்கம்பளத்தார்
பெண்கருவையழித்ததாலே பெண்பாவமுண்டவர்க்கு

அதனலக்குலமழிய அவதரித்தாள்பொம்மியவள்
மதுரையிலேபுனிதவதி-மாதுதாசியென்பவளும்
பிள்ளையில்லாததனல் பிரதிதினம்மீனாக்ஷியை
அடிபணிந்துதெண்டனிட்டு அருந்தபசுசெய்திருந்தாள்
ஆகையினல்வெள்ளையென அவதரித்தாளவளும்
காசியில்துளசிராஜன் கடுந்தபசுசெய்தவனும்
பிள்ளையில்லாமலவர் பெருந்தபசுசெய்தேயவன்
சத்திரங்கள்சாவடிகள் சகலதோப்புகளும்
கோதானம்பூதானம் குறையொன்றுமில்லாமல்
அன்னதானம்சொர்னதானம் அந்தணர்க்குமஏழையர்க்கும்
யாகமுதல்யாக்கியங்கள் யாதொன்றுங்குறையிலாமல்
மாதமும்மாரிபெய்து மகிக்ஷியாய்குடிகளெல்லாம்
குறையொன்றுமில்லாமல் கொற்றவனரசாள
மைநதனிலாக்கவலையினல் மந்திரியைத்தானழைத்து

## விருத்தம்.

மந்திரிசர்க்குனகேன் மைநதநில்லாததால்யான்
அந்தகாரண்ணியஞ்சென்றுன்றுந்தவம்செய்யப்போரேன்
இநதநர்க்காசிதன்னை இடையூரிலாமலேநீ
சொநதமாய்குடிகள்தன்னை சுகமுடன்காப்பாநீயே.

## நடை.

மந்திரியென்மாதும் நானும்மனதறியகுற்றம்செய்தறியோம்
எங்கள்மனதறியநாங்கள் எவ்விதபாபமும்செய்தறியோம்
ஆனல்எங்கள்தலைமுறையில் ஒருஅக்கிரமம்நடந்ததப்போ
முன்னளில்நடந்தவினை முண்டதெனநினைக்கிறேன்யான்
அய்யோத்தியாளும்சத்திய அரிச்சந்திரசக்கிரவர்த்தி
பறையனுக்கடிமையாக பார்த்திருந்தார்யெங்கள்முன்னேர்
கவுசிகன்தன்சூதகனல் களவுசெய்துகொன்றபிள்ளை
சந்திரமதிகொன்றளென்று தலையைவெட்டச்சொன்னதாலே
நீதியிலாதரசன்குலம் நீடிக்காதெனசபித்தாள்
ஆதியிலேயிட்டசாபம் அடைந்திருக்குமாகையினல்
ஆகையினலென்தேவியுடன் அருநதபசுசெய்துவாரேன்
பட்டணத்தைகாப்பாயென்று பலவகையும்ஒப்பிவித்து
மன்னனும்பத்தினியுடன் மரவுரியைதானுடுத்தி
அடவியில்சென்றவரும் அருந்தபசுசெய்யவுற்றூர்

### வேறு நடை.

அரகரா சிவசிவா காசிவிஸ்வேசாயிந்த அடியாரைக்காருமையா
சர்வேசா - ஈசா.
திரிபுரதகனுவோ தேவர்தேவா - அர
தேடியும்காணுப்பொருளே தரிசினம்தா - அர
காலனையுதைத்தளங்கள் கருணுகரா - அர
கடைக்கண்வைத்தெனையாளும் காசிவாசா - அர
காமனையெரித்தளங்கள் கருணைக்கடலே - அர
கதியுனைவிடவேறிலைக் கருணைபுரிவாய் ஈசா.

### விருத்தம்.

இந்தவிதமாகஇவர் தபசுசெய்யுநாளில்
அந்தரத்திலேயீசர் அசரீரியாகசொல்வார்
மைந்தன்பிறக்குமடா மன்னுதுளசிவுந்தனுக்கு
உந்தன்பதிசேருமென்று வுரைத்தாரண்ணலுமே.

### விருத்தம்.

அந்தமொழிகேட்டு அரசனும்மாதும்போற்றி
சந்தோஷமாகச்சென்று தானிருக்கும்நாளையிலே
மைந்தன்பிறக்கமன்னனுளந் தான்மகிழ்ந்து
அந்தணரால்சாதகத்தை ஆராய்ந்து பார்க்கலுற்ருன்.

### நடை.

அந்தணரைத்தானழைத்து அரசனவனே துரைப்பான்
ஆசனம்தந்தவர்க்கு ஆண்குழந்தைபிறந்ததனுல்
நாள்களுடன்கோளதனை நடக்கும்பலமதனை
ஆராய்ந்துபார்த்தெனக்கு அந்தணரேசொல்லுமென்ருர்
நல்லதெனவேதியரும் நாள்கள்முதல்பார்க்கலானுர்
கலியுகமதனிலேதான் காளையவதரித்தநாள்
இயலும்நாலாயிரத்தி நூற்றிரண்டாமாண்டில்
ஆங்கிரீசவருடமதில் ஐப்பசிநாலாந்தேதியாம்
அமரபக்ஷத்தஷ்டமியில் ஆதித்தவாரமதில்
அர்த்தராத்திரிவேளையிலே ஐமூன்றுநாழிகையில்
கேட்டைமூன்ரும்பாதம் கண்டநாமயோகமாம்
இராசதத்தில்தாமதமும் நலஞ்சேர்பவகரணம்

இந்தவகையாக இயல்கடகராசியிலே
காசிதுரைமனைவி கற்பகவல்லியெனுமரசி
பிள்ளைபிறந்ததினம் பேர்ராசியுடன்பார்க்க
அரசன் தனக்கிதனை அறிவிக்கசோசியரும்
சக்கரத்தைக்கீறியவர் சரராசிதான்பார்த்து
வொருமையுடன்லக்கினத்தை உயிரங்கிஷம்பிரித்து
நவக்கிரகமுங்குளிகன் நடக்குமிடம்பார்த்தார்கள்
குசாதிபஞ்சக்கிரகம் கூடியிருப்பதைபார்த்து
பனிரண்டுவீடுகளில் பதிந்தவிடந்தனைப்பார்த்து
அட்டவர்க்கம்போட்டவர்கள் அவரவர்திசைகள்புத்தி
அந்தரங்கம்பிரித்து அரசனைப்பார்த்தேதுசொல்வார்.

நடை.

பிள்ளையின்சாதகத்தை பிரித்துரைப்பேன்கேளுமென்றார்
நலந்தருகர்க்கடக ராசிமூன்றுங்கூடதனில்
உதித்தானதிர்க்குருவும் உதயவுச்சனாயிருந்தான்
வாக்கிலேஇராகுநின்றான் வாய்த்தமூன்றாமிடத்தில்
புதனுச்சனாயிருக்க புகழ்சேரும்நாளதனில்
பிதுர்க்காரகன்தனில் பேசாமல்நீச்சமுற்றான்
ஐந்தாமிடம்பாவி யாகிமதிநீச்சமுற்றான்
எழாமிடமதனில் இயல்போகஸ்தானமதில்
களத்திரகாரகனும் கருதுபுகர்தானிருந்தார்
இயல்கேதுசெவ்வாயும் எட்டாமிடத்திருந்தார்
பத்தாமிடத்தில்சனி பகைவீட்டில்நீச்சமுற்றான்
வியமத்தலந்தனிலே வீற்றிருந்தானேகுளிகன்
இவ்விதமாய்கிரகங்கள் இருக்கையினால்சாதகர்க்கு
அதிஷ்டங்கள்மெத்தவுண்டு அதிகயோகமுடையான்
பிறதேசத்தில்யிவனுக்கு பெருமையதுவுண்டாகும்
சுயார்ச்சிதமானதேசம் சொந்தமிவனுக்கில்லை
அன்னியதேசத்தரசர் அடிபணியவாழ்ந்திடுவான்.
தாயார்தகப்பனுக்கு சற்றேகிலேசமுண்டு
பீடைகொஞ்சம்உண்டுமன்னா பின்னேதுமில்லையென்றார்
சாதகப்பலனைக்கேட்டு சந்தோஷங்கொண்டரசன்
தாயார்தகப்பனுக்கு தாழ்வுவந்தால்வரட்டும்
பிள்ளையாயுசுடனே பிரபலமாய்வாழ்ந்தால்போதும்

என்றரசன்சொல்லி எதுசெய்தானப்போது
வேதியர்க்குப்பொருள்கொடுத்து வேந்தனனுப்பிவைக்க
வாங்கியே அந்தணரும் வாழ்த்தியேசென்றார்கள்
பட்டணத்திலுள்ள பலதேவஸ்தானங்கட்கும்
பூசைதிருவிழாவும் புகழுடனேசெய்துவைத்தார்
ஏழைமுதல்யாவருக்கும் இட்டார்களன்னமதை
சர்க்கரைவழங்கியே சகலருக்மாடை பொருளீந்து
பட்டணத்தார்கொண்டாட பாலனுக்குத்தீட்டுகழித்து
இவ்விதமாகிஇவர் இருக்குமந்தநாளதனில்.

## விருத்தம்.

பத்தாநாளிரவில் பதினைந்துநாழிகையில்
மற்றோரறியாமல் மாயமாய்பூதம்வந்து
இத்தரணியாள இவனைகாதெனவெடுத்து
மெத்ததுலைவின்வனத்தில் வைத்துபூதம்போயினதே.

## நையாண்டி.

காசிநாதாவுன்செயலோ - என்கண்மணிதன்னைக்
காணேமென் செய்குவேன். காசி
பக்கத்தில்படுக்க வைத்தேனே எந்தன்-பாலனையெங்கும்
பார்த்துங் காணேனே
சக்கித்தாள் பூட்டியகதவு அது-சாத்தின பிறகாரம்
தானிருக்கிறதே. காசி
உந்தன்மகிமையல்லாதே கதவை-யொருவருமில்லை
எனைவிடவோ திறக்க
மைந்தன்மாயமாய் போனதாலே ஈசா-மர்மம்
உனையன்றி மனிதராரிலையே. காசி
கதவைதிறந்தவள் வந்து தன்-கணவனை
யழைத்திவள் கதரியழுது
மதலையைகாணே மென்றுரைக்க-யரசன்
மைந்தனை பக்கம் பக்கம் யெங்கும் தேடி. காசி
காவலர்தன்னை யழைத்து மைந்தனை-காசி முழுதும்
தேடிகண்டு பிடி என்ன
காவலனுரைபடி யெங்கும் தேடி-காணேமென்று
காசிராஜனோ டுரைக்க. காசி

31

இனியென்ன செய்வோமென்றரசன்-காசி
ஈசன் தந்தவர மில்லைகையானால்
அநியாயமாய்விசாலாட்சி நீ-அளித்தவரமிப்போ
அவலமாய் போச்சு. காசி
என்னுயிர்வைத்திருந்தாலே-புவியில் எல்லாரும் உன்னாலே
எளிதம் செய்வாரே-என்றரசனு மனைவி இவர்கள்
இருவரும் கங்கையில் விழவே போனார்கள். காசி

## விருத்தம்.

அசரீரியாகயீசன் அரசனேவிசனம்வேண்டாம்
நிசமாகசொல்வேன்உன்பேர் நீடுலகுள்ளநாளும்
வசனிக்கபேரெடுப்பான் மானிலத்துள்ளோர்போற்ற
அசல்தேயம்சென்றான்நீயும் அறிகுவாய்கொஞ்சநாளில்.

## நடை.

என்றுஈசன்சொல்லையிலே யிருப்போர்மனமகிழ்ந்து
அன்னைவிசாலாக்ஷிதாயே ஆள்வாயென்றேகைதொழுதார்
அரசனும்மனைவியரும் அகமகிழ்ந்துதேறியவர்
அரகராசிவமேஎன்னை யாளவேணுமெனத்துதித்தார்
இவ்விதமாகயிவர் இருக்குமந்தநாளையிலே
சவுராஷ்டம்நகராளும் சக்கிரவர்த்திநிகிலனுக்கு
எழுரைநாட்சனியும் இன்பமுடன்பிடித்தவனும்
காதலிதிலகியுடன் காட்டில்சென்றுவேட்டையாட
கன்றுடனேபெட்டைமானைக் கண்டுதிலகியவள்
மான்கன்றைபிடித்துதாரும் மன்னாவெனகேட்கையிலே
நிகிலசக்கிரவர்த்தியவன் நினைவினிலென்னகொண்டான்
பெரியமானைகொன்றுவிட்டால் பிள்ளையகப்படுமென்று
மான்பேரிலம்புயெய்ய மான்கதறியோடியது
தவம்செயுமுனிவர்மீது தான்வீழ்ந்திறந்ததுகாண்
கன்றுதாயைசுற்றிசுற்றி கதறியழுகிறதை
மறையவர்தவம்குலைந்து மான்கன்றைப்பார்த்தவரும்
மனதில்வருத்தங்கொண்டு மறையவரிருக்கும்போது
மன்னனும்தேவியுமாய் மானைத்தேடிவந்தார்கள்
இந்தமானைக்கொன்றவன் இவன்தானென்றுரிஷியவரும்
கோபமாகிமுனியவரும் கொற்றவாபெண்மானைக்கொன்றாய்

கன்றுதாய்மானைச்சுற்றி கதறியழுங்கோரத்தைபார்
சிசுவைபார்த்துகொஞ்சமேனு முன்சித்தமிதங்காததினல்
நீயுமுன்மனைவியுமாய் நீச்சராகக்கடவதென்ருர்
அரசனும்தேவியுமாய் அடிபணிந்துதெண்டனிட்டார்
மறையவரேஎங்கள்பிழையை மன்னிக்கவேணுமென்றும்
நீரிட்டசாபமது நீங்கும்வகைசொல்லுமென்ருர்
கோபந்தணிந்துரிஷி கொற்றவனைப்பார்த்துசொல்வார்
நீச்சத்தொழில்புரிந்துநீங்கள் நிகழுமந்தநாளையிலே
கானகத்தில்பிள்ளையைநீர் கண்டெடுத்துவளப்பீர்நீர்
அந்தபிள்ளையுங்களைவிட் டகலும்கொஞ்சநாளையிலே
என்னுடையசாபமும் எகுமுங்களைவிட்டு
உன்னுடையநாடுவந்து உலகாள்வாய்நீயுமென்ருர்
முனிவரும்சொல்லயிலே மூண்டதுசாபமது
நீச்சதேகமாகியவர் நினைவதுமாறியப்போ
கானகமெலாந்திரிந்து கமலாபுரியடைந்தார்
பொம்மணராசனண்டை போயமர்ந்தார்சேவகமாய்
சின்னனெனப்பேர்வைத்து சேவித்துவரும்நாளையிலே
ஆவாரம்பட்டைவெட்ட அடவிசெல்லசெல்லியவள்.

## கும்மி.

சின்னனுக்குகஞ்சி வார்த்தனுப்பியபின்-அந்த
சீமாட்டி சொல்லியும் தான் புசித்து
வன்னபுடவையை தானுடுத்தி செல்லி
வருகுவாளாவாரம்பட்டை வெட்ட.

கத்தியும்கூடையும் தானெடுத்து இந்த
கன்னியும்கோணக் கொண்டையிட்டு
பத்தினியடவி வருகையிலே சகுனம்
பார்த்துமனதில் சந்தோஷங்கொண்டாள்.

ஆவாரம்பட்டை சீக்கிரத்தி லின்றைக்
ககப்படுமென்றிவள் தானினைத்து
நாவால்குலதேவதையை யிந்தமாது
நங்கையும் துதித்தடவி சென்ருள்.

காட்டிலிருக்கும் கனிவருக்கம் இந்தக்
கனியும்பறித்துத் தின்றுகொண்டு

வோட்டநடையுமாய் மாமரத்தோப்புக்குள் திலகி
வுத்தமி செல்லக் குழந்தை குரல்.

ஆருமற்றயிந்த கானகத்தில் பாலன்
அழுகுரலேதென்று பார்க்கையிலே
ஆறுமுகவேலர் பாம்பாகி படத்தால்
அருணன்சுடர்நீக்கி குடைபிடித்தார்.

மாதிகச்சிதன்னை கண்டு இந்த அரி
மாயமாய் புதருக்குள்ளே நுழைய
ஓதிடும்சூரியனைப் போலொத்த பிள்ளையை
ஓகோஎறிந்தவராரோ வென்று.

மைந்தனில்லாத மாதிகச்சி இந்த
மைந்தனைக்கண்டு மனதுபொங்கி
சிந்தைமகிழ்ந்து தானெடுத்து யிவள்
சிசுவின் முகத்தோடு முகத்தை வைத்து

முத்தமிட்டுக்கொச்சை வார்த்தைபேசி குழந்தை
முகத்தைநோக்கி யானந்தம்பொங்கி
சித்தமகிழ்ந்து கூத்தாடியே-மிக
சிசுவைபெற்றோர் வந்தால் வைகுவாரே.

அச்சங்கொண்டிருந்த குழந்தைதானிருந்த அந்த
அடியிலேவைப்போமென நினைப்பாள்
இச்சையால்குழந்தையை விடமனமில்லாமல்-இவள்
இருகண்ணிலொத்தியே முத்தமீவாள்.

பிள்ளையில்லாத பேராசையினு-லிந்தப்
பிள்ளையழுவே முலைகொடுத்தாள்
வெள்ளைவிடை யோனருளால்-பால்சொறிய
வெகுசந்தோஷமாகவே பால்கொடுத்தாள்.

## விருத்தம்.

மங்கையேகேளாயிந்த மைந்தனை எடுத்தேசெல்வாய்
திங்களையணிந்தோனிந்த செல்வனையளிக்கவந்தான்
மங்களமாகவேபேர் வைப்பாய்வீரப்பனென்றே
அங்கேஆகாயவாணி அசரீரியாகச்சொன்னாள்.

## நடை.

ஆகாயவாணிசொல்ல ஆனந்தமாகியவள்
பிள்ளையையெடுத்திவளும் பேதையவள்கொஞ்சியேதான்
மைந்தனையெடுத்தாடி மகாசந்தோஷமாகவாரள்
இந்தவிதமாகயிவள் இருக்கச்சின்னான்வோடிவாரான்
பட்டைவெட்டபோனமாதை பகலவன்வுச்சிவந்துங்காணேன்
என்றுசின்னான்கோபமாகி எடுத்தான்தடியதனை
கானகமெல்லாம்சுற்றி காதலியைத்தேடிவாரான்
மனைவியைகண்டவனும் மகாகோபமுடன்வருகிறதை
மைந்தனையெடுத்திவளும் மன்னாபிள்ளைபாருமென்றாள்
பெண்ணேயிந்தபிள்ளையேது பேதையேநானறியவுரை
அடவிதனில்இப்பிள்ளை அகப்படயெடுத்தேனான்
ஆர்பெற்றசுதனோவென்று அச்சங்கொண்டுயான்பயந்தேன்
ஆகாயவாணியப்போ அன்பாகவளர்ப்பாயென்றாள் [ள்
என்றுசொல்லிவீரனென்று இக்குழந்தைக்குபேர்வையுமென்று
குழந்தையையெடுக்கும்போது எந்தன்கொங்கையில்பால்சொறி [ந்ததென
சின்னானிதைக்கேட்டவனும் சிசுவைவாங்கிமுத்தமிட்டான்
சந்தோஷமாயிவர்கள் சாமியைமிகத்தொழுதார்
மைந்தனையெடுத்திவர்கள் மகாசந்தோஷமாகவளர்த்தார்.

## தாலாட்டு.

ஆராரோ ஆரரிரோ ஆரரிரோ ஆராரோ
சீரார்தவக்கொழுந்தே சிவனார்தந்தமைந்தனே நீ
கண்ணேவுறங்குறங்கு கண்ணிதாண்மணிவுறங்கு
விண்ணவனோதேவனோதான் விளங்குகின்றபொன்மணியோ
சந்திரனோசூரியனோ சாமிகுருநாதனோநீ
இந்திரனோவானவனோ யிளையபெருமாளோநீதான்
ஆறுமுகசுவாமியோநீ ஆதரிக்கவந்தவனோ
வேறுபிலாச்சுனையோ வேந்தரிடமைந்தனோநீ
வாசவனோமாலயனோ வனத்தில்வாழும்தேவனோநீ
நேசம்வைத்துஎங்கள்குறை நிறைவேற்றவந்தவனோ
கற்கண்டோசர்க்கரையோ கதலிபழச்சுவையோ
பத்தரைமாற்றுள்ள பசுமையுள்ளதங்கமோநீ
கொல்லிமலைகானகத்தில் குழந்தையாகவந்தவனோ

35

அல்லலைநீக்கியெந்தன் ஆசைதீர்க்கவந்தவனே
அப்பனேகண்ணுறங்கு அமுர்தமேகண்ணுறங்கு
ஒப்பொன்றுமில்லாத உத்தமனே கண்ணுறங்கு.

நடை.

அல்லும்பகலுமிவர் அப்பாவீராவெனவிவர்கள்
காலுக்குதண்டையிட்டு கைகளுக்குபாசிபந்து
அறைக்குச்சலங்கைகட்டிபொன் ஆபரணம்கழுத்திலிட்டு
கடுக்கன்முருகுமிட்டு கைக்குகாப்புகொலுசுமிட்டு
நாளொருமேனியாக நலமுடனேவளர்த்துவந்தார்
ஐந்துவயதில்பள்ளி அமைத்துசகலமும்கற்று
பத்துவயதிலிவர் பலசாஸ்திரமுங்கற்றுவந்தார்
ஆறுவேதம்நாலுசாஸ்திரம் அறுபத்துநாலுகலைக்கியானம்
மநுநீதிமல்யுத்தமுதல் மைந்தன்கற்றேயுணர்ந்து
விளையாடபால்யருடன் வீரன்வளர்ப்புபிள்ளையென
வீரப்பன்தன்மனதில் விசனங்கொண்டுவீடுவந்து
தாய்தகப்பனைப்பணிந்து தன்னைவளர்ப்புபிள்ளையென்றுசொன்ன
உண்மையைவுரைத்தாலாச்சு உயிர்விடுவேனென்றான்வீரன்
பொய்யைவுரைத்தால்நீங்கள்போக்கிக்கொள்வேனென்னுயிரை.

அகவல்.

அப்பனேவீரா அன்புடன்சொல்வாய்
இப்போதுவுன்னை எளிதமாக
ஆறனைச்சொன்னவர் அறிவிப்பாயென்ன
வேறுதாய்நீயென்று விளம்பினாரதனை
உள்ளசங்கதியை உரைப்பீரில்லாவிடில்
கள்ளமாயுரைத்தாலெனைக் காணவேமாட்டீர்
என்றுவீரனும் இயம்பித்தனால்
அப்பனேநானும் அறிந்தமட்டிற்கும்
தப்பிதமிலாமலே தானுரைப்பேன்கேள்
ஆவாரம்பட்டைக்கு அடவியில்சென்றேன்
கூவுங்குரல்கேட்டு குழந்தையேதென்றுயான்
பார்க்கையில்வுன்னையும் பாலகாகண்டேன்
யார்பெற்றபிள்ளையை அடவியில்போட்டார்
என்றுமேவுன்னையும் யெடுத்துமேகொஞ்சி
பின்புனைபெற்றவர் பேசுவாரென்றுயான்

கருத்தினிலெண்ணியக் காட்டினுனைவிடயான்
வெறுத்துனைவிடவே விரும்பிடும்போது
ஆகாயவாணியும் அச்சமேவேண்டாம்
நீ-காப்பாத்தெனவே நிச்சயமாய்சொல்லி
வீரப்பனென்றுபேர் வையும்பேரென்றாள்
வீரமாங்காளிமே லாணையாய்ச்சொன்னேன்
இதுதானறிந்ததுனை யின்றோரையறியேன்
எதுவும்செய்யாதெனை யெழுந்திடும்சாப்பிட
என்றுமாதிகச்சி இயம்பியவார்த்தையால்
பின்பிதையறிகுவோம் பிசகில்லையென்று
ஊர்காக்கும்பிடாரி உக்கிரமாங்காளியை
நேராகசென்றுநாம் நிசமறிவோமென்றிவன்
உண்டுறங்கியபின் உருமராத்திரியில்
கண்டிக்கும்வாளையும் கையினிலெடுத்து.

## விருத்தம்.

வீரமாங்காளிகோயில் வீரப்பன்போகலுற்றான்
தூரமாமடவிக்குள்ளே துரிதமாய்ச்செல்லும்போது
கோரமாய்புலிகள்வர கொன்றுஅப்புறத்தில்செல்ல
சூரத்துவமாகபூதம் சூழ்ந்ததுவீரன்தன்னை.

## நடை.

கண்டானேபூதந்தன்னை காளைவீரப்பனவன்
அடங்காதகோபத்துடன் ஆரடாவென்றுவீரன்
பூதங்களப்போவுன்னை பிடித்துதின்னவந்தேனென்ன
சொன்னவாயைமூடுமுன்னே சுற்றிசுற்றிவெட்டுகிறான்
பார்க்கபயந்திடவேபூதம் பலபலரூபங்கொள்ள
கண்மூடிதிறக்குமுன்னே கண்டதுண்டம்செய்துவாரான்
செத்துசெத்துபிழைத்துபூதம் சேர்ந்ததுவொன்றாக
இவனைவெல்லநம்மாலே ஏலாதுயென்றுபூதம்
வீரமாங்காளியிடம் விரைவிலோடிவொருபூதம்
ஆரோஒருசிறுபிள்ளை அஞ்சாதநெஞ்சுடையான்
எங்களாலின்றமட்டும் யெதிர்த்துபோர்செய்துபார்த்தோம்
ஆங்காரியாகுமம்மா யடக்குமம்மாயென்றுரைக்க
மாணிடனல்லனவன் மடையபூதங்களேகேள்

தேவாம்சமுள்ள அந்த சிறுவனைவெல்லாரெவரும்
னனைக்காணவருகிறுன் ஏதொன்றும்செய்யாதீர்
பூதங்கள்மாயமாக போனதின்பின்வீரனவர்
காடுமலைகடந்து காளிகோயில்முன்புவந்து
வீரமாங்காளிதன்னை வீரப்பன் துதிக்கலுற்ருன்.

## விருத்தம்.

ஓம்நமோபகவதி வோங்காரி ஸ்ரீங்காரி
வுலகதனை காக்கும்நீலி
ஆமெனுமக்ஷரிசூலி ஐயும்கிலியு
மானந்தி துர்க்கிவாமி
ஊமென்னும்உக்கிர வீரமாங்காளிநீ
ஓம் நமசிவாயி ஆயி
றீம்யென்னும் மக்ஷரி சொரூபிசிம்மவாகனி
நிரநதரி என்முன் வருக.

## நடை-உனக்கும் எனக்கும்.

வீரமாங்காளிதன்னையிவர் வெகுவாய்தோத்தரித்தும்
சூரன்மனமின்னமறிவோமென் றிவள்சும்மாவேயிருந்தாள்
பலவாருககாளியையிவன் பணிந்துமேதொழுதும்
பாலன்மனதறிவோமென்றிவள் பதுங்கியேயிருந்தாள்
காளைவீரனுக்குகோபமாகி கண்கள்ரெண்டும்சிவந்து
வாளையுருவும்போதே காளியும்வந்ததுகேடென்ருள்
கதவையுடைத்துனைகண்டதுண்டம் செய்வேன்காளியரே என்
உதட்டைகடித்துவுக்கிரத்துடன்வரும் உண்மைனைக்கண்டு
கடுகனவேயோடி கதவைதிறந்து காளியருமோடி
அடுக்குமோவுனக்கித்தனையாத்திரம் அப்பனேயெங்கேவந்தாய்
மைந்தனேவீரனே மனவருத்தத்தோடேவந்தவயணமென்ன
உன்சிந்தையிலுள்ளதை யெந்தனோடுரையுமெந்தனற்கண்மணி
என்னையீன்ரூர்கள்யின்னுரென என்னிடவர்க்கமதை [யே
எனதாயேஎனக்கறிவிக்க வேணுமென்றடியைதொழுதான்
அப்பனேவுந்தன்பிறப்புமுதல்யாவும் அறிவிப்பேன்கேளுமென்
முப்புரனருளால்வந்தாய்வுனக்கீடு மூவுலகிலில்லையாரும் [று
காசிநகராளும்கதிரின்குலத்தவன் கனதுளசிராஜன்
பூசித்துயீசனை பிள்ளையில்லாமலே பெருந்தவமேபுரிய

பரமசிவன்வரப்பிரசாதத்தாலே பாலகாயீபிறந்தாய்
பழயகரம்வைத்துபூதமெடுத்து வுந்தனை காட்டினிலேவளர்த்த
ஆவாரம்பட்டைவெட்டமாதிகச்சி அடவிதனில்வந்தாள் [ள்
கூவுங்குரலோசைகுழந்தையேதென்று கொம்பனையும்பார்த்தா
வந்துவுனைகண்டுயெடுத்துமேயவள் மனவாட்டங்கொண்டாள்
அந்தரத்திவாகாயவாணியும் அஞ்சாமலேவளர்ப்பாய் [ய்
வீரப்பனென்றுபேர்வைத்துமேபிள்ளையைவிளங்கவேவளர்ப்பா
பரமனருளாலிப்பிள்ளையவர்தொழுபா ரெங்கும்பேரெடுப்பான்
இதுதானுன்பிறப்பென்னவேகாளியும் ஏக்கம்கொண்டேவீர [னும்
எதுசெய்வேனென்னையீனசாதி யென்றேஏளிதப்பேரெடுத் [தேன்.

விருத்தம்.

அரசன்வயற்றினில்பிறந்தும் ஆளாமல்உலகத்தையான்
பறையனெனபேர்வகித்து பலசாதிக்கடிமையாக
அானார்யென்தலையதனில் அன்றெழுதிவிட்டதற்கு
புரந்தரியேஅரசனைக பிறந்தென்னபலனைக்கண்டேன்.

நடை.

வீரப்பனைகாளியரும்பார்த்து
விசனம்வேண்டாம் காப்பேனுனையென்றாள்
வீராதிவீரனைவுன்னால்
வெகுபேர்மாளப்போகிறார்கள் யென்றாள்
அரசரெல்லாம்உனக்கடிமையாகி
அடங்கிதொழில் செய்வாறனைக்கண்டால்
என்றுசொல்லும் காளியரைநோக்கி
எவ்விதமரசரை வெல்வேனென்றாய்
தாயாரேபோர்புரியயானும்
தனுர்சாஸ்திரங்க ளொன்றுமறியேனே
என்றுசொல்லவீரனுக்கு காளி
யீந்தாள் அம்புராத்தூணியுடன் வில்லும்
அஸ்திரங்கள் விடுவதற்கு மந்திரம்
தானும் வீரனுக்கு வுபதேசித்தாள்
வாட்போர்செய்வதற்குகாளி
வகையாவும் கற்பித்தாள் வீரனுக்கு

நாவினில்சரஸ்வதி யக்ஷரத்தை
எழுதிநங்கை இவளேகாக்ஷரத்தைச்சொல்லி
கவசமுடி யாடையாபரணம்
காளிதந்து இவைகளெல்லாம் எனக்கு
வேண்டும்போது இவைகளெல்லாம்
உனக்கு விரும்பிவந்து நானளிப்பேனென்றாள்
காளியரைதெண்டனிட்டு வீரன்
உன் கைவாளை தருவதல்லால் எனக்கு
எதிராளி கைதனிலேயானும்
இறக்காவரம் தருகவேணுமென்றான்
அப்படியேதந்தேனடா நீயும்
எனை அழைக்கும்போது வந்து காப்பேனென்றாள்
ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம் நீயும்
உன வீடுபோய் சேருமெனவீரன்
தெண்டனிட்டடிபணிந்து காளியை
வீரன்தேறுதலாய் வீடுவந்தே இவனும்
எப்போதும்போலவேதான் இவனும்
இனிதாக சிறிதுகால மிருந்தான்.

## விருத்தம்.

இந்தவிதமாக இவனிருக்குமந்த நாளையிலே
அந்தவூரரசன்முதல் அவரவர்களாயுதத்தை
சுந்தரிநவராத்திரியில் சொகுசுடன்கொலுநிறுத்தி
ஐந்தாநாள்காவுதந்து ஆயுதம்கலைப்பதாலே.

## நடை.

அப்போதுவீரனவர் ஆலோசனைகள்செய்தார்
அவரவர்களாயுதத்தை அன்புடன்கொலுநிறுத்தி
காவுமுதல்கொடுத்தவர்கள் கலைப்பதைபோலொழும்
வீரமாங்காளியான விமலிஆயுதந்தனக்கு
கொலுநிறுத்திகாவுதர கொற்றவனும்தானினைத்து
அடவியிலேசென்றிவரும் ஆத்தாளைநினைக்கையிலே
வீரப்பன்நினைக்கையிலே வீரமாங்காளிவந்தாள்
அடிபணிந்துதெண்டனிட்டு ஆயுதங்கட்குபூசை
கொலுநிறுத்திகாவுதர கொம்பனையேவுத்தாரம்தாரும்

ஆடுபலிவுனக்குதர ஆகாதுயென்றுலிப்போ
கானகத்தில்வேட்டையாடி காவுமெத்ததருவேனம்மா
அடவிதனில்வேட்டையாட ஆபரணஆயுதமும்
தாயாரேதருகவென்று தான்பணிந்துதெண்டனிட்டான்
நல்லதுகண்மணியேஎன்று நங்கையுமாயுதமீந்தாள்
கச்சையுடன்சல்லடமும் கவசமதுதந்திவளும்
கோணகொண்டைமுடியதுதான் குவலயமெல்லாம்மதிக்கும்
நவரத்தினமிழைத்த நல்லமுத்துசரங்கள்தொங்க
கலிக்கதுராபாஜிபந்து கழுத்துகெண்டிபதக்கம்
வீரகண்டாமணிகாலில் வீரனையணியச்சொல்லி
மைந்தனேஉன்மர்ம்மதை மற்றவற்குரையர்மலே
கொஞ்சநாள்மனம்பொறுத்து கொற்றவனேநீயிருப்பாய்
காளியரும்சொல்லயிலே காசிபுத்திரனடிபணிந்து
கானகத்தில்வேட்டையாட காளைவீரன்தானடந்தான்
காடுவனந்தாண்டி காடிபுலிவாழும்வனம்
அடவியெல்லாம்சுற்றியெங்கும் அகப்படவில்லையெங்கும்
துலைவிலொருபாரைமீது தூங்குதறுபதடிவேங்கை
கண்டுவீரப்பனுமே காளியற்குகாவுதர
இதைவிடவேறுநமக்கு இவ்விடத்தில்கிட்டாதென்று
தூங்கும்வேங்கைதன்கழுத்தை துள்ளுகாளைதான்பிடித்தான்
கண்விழித்துவேங்கையப்போ கதும்பியேவீரனைக்கொல்ல
கையைவோங்கவேங்கையது கன்னத்திலடித்தார்வீரன்
கன்னத்திலடிபடவே கலங்கிவேங்கைதான்பயந்து
விடுவித்துவோடிடவே வீரன்கையைத்திமிறியது
வீரனும்கண்டேஅதன்மேல் யேறியேஅப்போது
அடிவயிற்றிலுதைக்கவீரன் அலறிவேங்கைகதும்பி
காற்றுய்பறக்குதப்போ கதும்பியேகாடெல்லாம்சுற்றி
வேங்கையின்மீதேறி வீரன்சவாரிசெய்தான்
அறுபதடிவேங்கையது அனேகவனமெல்லாம்சுற்றி

## நடை கல்லார்க்கும்.

காசிராஜன்மந்திரியும் கலிங்கநாடதற்கு-அப்போ
காவலன்குதிரையேறி காட்டினவழிசெல்ல
வீரன்சவாரிசெய்யும் வேங்கைதரும்சப்தம்-இவர்கள்
வேந்தனும்மந்திரிகேட்டு வெகுண்டுபயம்கொண்டு

குதிரையைவிட்டிறங்கி குதித்துமரமேறி-அரசன்
கோஷ்டமிட்டுவேங்கைநம்மை கொல்லவருதென்று
அரசன்மரத்திலேறி அடவியைபார்க்கையிலே-பால்யன்
அறுபதடிவேங்கைமீதில் அரசன்வரக்கண்டு
மந்திரியீதென்னபாரும் மனிதரவனல்ல-இவன்
மகிமைதனைபாரும்வேங்கை மனிதருக்கடங்குமோ
கானகமெலாம்சுற்றி காலசைந்துவேங்கை-அது
களைத்துபூமியில்விழவே கண்டதைவீரப்பன்
கச்சையவிழ்த்தேவேங்கையின் கழுத்ததனைக்கட்டி-வீரன்
கட்டிமரத்தினிலிவர்களை யாரறிவோமென்று
ஆலவிருக்ஷநிழ லடிதனிலிவர்செல்ல-அங்கு
அசுவம்தன்னைக்கண்டுவீரன் ஆச்சரியங்கொண்டு
நல்லதிளைப்பாறியபின் நாமறிவோமென்று-அங்கு
நாதன்மரத்தடியில் நலமாகவுட்கார்ந்தார்
வீரப்பன்தன்னைகாசி வேந்தன்மந்திரிகண்டு-இவன்
விண்ணவனோவேந்தனோ தான்வென்றுஅச்சங்கொண்டு
மன்னவனுமந்திரியுமாய் மரத்தைவிட்டிறங்கி-வீரனை
மந்திரிபார்த்துமன்னு இந்த மைந்தன்வுன்னைப்போல
அஞ்செழுத்தும்பாவனையு மரசேவுனை போல-மைந்தன்
அமைந்திருக்குமதனைகண்டா லதிசயமாமென்றான்
வல்லமையில்சிறந்தஅந்த வாலிபனைமந்திரி-நீயும்
வணக்கமாகஅவனூர்பேர் அறியவேணுமென்ன
வீரனிடம்இவர்கள்சென்று வினயமாகஇவர்கள்-பால்ய
வேந்தேஇங்குதனியாய் வந்தவிதமுரையுமென்ன
வீரப்பனிவரைக்கண்டு வேந்தராகுமென்று-நான்
வேங்கைதனைபிடிக்கஇங்குவேட்டையாடவந்தேன்

## விருத்தம்.

அப்பனேவுனதூர்பேரும் அறிந்திடவேணும்நானும்
செப்புமுன்தகப்பன்பேரும் செல்வனேஇந்தவேங்கை
எப்படிக்கொண்டுபோவாய் எதற்காகஇதுதான்வேண்டும்
தப்பிலாமலேவுரைப்பாய் தாக்ஷிகமானபாலா.

## விருத்தம்.

அய்யனேயெனதூர்காசி அப்பன்பேர்துளசிராசன்
வையகமாளவென்னை வைக்காமல்பூதமொன்று

மெய்யாககாட்டில்போட மேன்மையாய்மறுதேசத்தில்
பொய்யல்லவளர்ந்தேன்வேங்கை பூசைகாளியூர்க்குபோட.

வெண்ணிலா வர்னம்

அருந்தவம்செய்துபெற்றேன் மைந்தாநானும்-உனை
ஆசைக்கேனும்பார்த்தறியேன் மைந்தாநானும்
கட்டியணைத்தேஅரசன் மைந்தாவுனை-நானும்
காணக்கிடைத்ததேபோதும் மைந்தாவுனை
முத்தமிட்டுமுகத்தைப்பார்த்து மைந்தனேஎந்தன்
மொழியைத்தள்ளாமல்கேட்பாய் மைந்தனேஎந்தன்
இப்போதேயென்பட்டங்கட்டி மைந்தனேஎந்தன்நீயும்
ஏகசக்கிராதிபாயாள்வாய் மைந்தனேஎந்தன்
உனைபிரிந்தபோதேயானும் மைந்தனேயானும்
உயிரைபோக்கிக்கொள்ளபோறேன் மைந்தனேயானும்
ஆகாயவாணியப்போ மைந்தனேகேளும்
அஞ்சாதேவுன்பிள்ளைவரும் அரசனேஎன்றாள்
அசரீரிசொல்படியே மைந்தனேநீயும் இப்போ
அரசாளவேவருவாய் மைந்தனேநீயும்
காசிநகர்நீயுமாள மைந்தனேநானும் என்
கண்குளிரப் பார்க்கவேணும் மைந்தனே நானும்.

விருத்தம்.

காசியா ளரசன்சொல் யாவும் வீரப்பனர்
கருத்துடன் கேட்டுப் பின்னும்
காளிநம தூர்பேரை காட்டாதெனச் சொன்ன
கருத்தையும் மறந்து சொன்னேம்
யோசிக்கில் இவர்நம்மை விடார்போனுங் காணுது
வுருக்கமாய் வளர்த்தவர்கள் தான்
வொரு நாளெனைபிரிந் தாலுயிர்விடுவார் இந்த
வொருவினைக் கென்செய்வது
ஆசித்தவர்தனை மோசம்நான் செய்வது
அழகல்ல இவர்களுக்கு
ஆறுதலை வார்த்தைகள் சொல்லியே இவர்களை
அனுப்பவே மனதிலெண்ணி
பூசித்து தந்தையை அடிபணிந்தே வீரன்
புகலுவா னவர்களுக்கு

புண்ணியனே எனையீன்ற கண்யனே என்சொல்லை
பொறுமையாய்க் கேளுமென்றே.

௩ டை.

அண்ணலேகேளருந்தவம் நீர்செய்து எனை
அரனருளால் பிள்ளையாகப்பெற்றும்
அரசுக்குடையோன் வயிற்றில்பிறந்தும் நான்
அலைச்சல்படயென் தலையினெழுத்து
கரத்தாலெனை யெடுத்தணைத்துமுத்தம் கொடுக்கா
கசடனைநீர்பிள்ளையென மதித்து
பிள்ளையென்றெந்தனை நினைக்காதேநீர் நானோ
பெரும்பாவியிலும் பாவியானேனன்
இருப்பிடமும்யென்பேரு முரையேன் எனை
இன்பமுடன்வளர்த்தோர் தங்களுக்கு
அன்பானவார்த்தைகள் நான்சொல்லி பின்பு
அண்ணலே வுன்னிருப்பிடமே வருவேன்
வீரன்சொல் காசிராஜன்கேட்டு உனை
விடமாட்டேன் உன்னுடனே வந்து
வளர்த்தோரை கண்டவர்க்குவேண்டும் பொருள்
மனமகிழகொள்ளை கொள்ளயீந்து
அழைத்தும்போவேனல்லாது உனைவிட்டு நானும்
அரைக்ஷணமேனு முனைப்பிரியேன்
காசிராஜன் சொல்லயிலேவீரன்-எனை
காணமாட்டீர் என்னுடனே வந்தால்
இருவரும்பேசயிலே மந்திரி-பிள்ளை
இஷ்டப்படியே வரட்டுமென்றான்
காசிராஜன் தன்மகனை நோக்கி-என்
கண்மணியேவருவாயோநிச்சயமாய்
தந்தையைவணங்கியேவீரப்பன்-மனம்
தளராதீர்வருகுவேன்நிச்சயமாய்
கட்டியணைத்துமுத்தமிட்டுமைந்தா-நான்
காசிநகர்போறேமென்றுசென்றார்
காவலர்கள்மூலமாக இவனை-தேடி
கண்டுபிடித்தழைத்துபோவோமென்று
மந்திரியுமரசனுமாய்பேசி-இவர்கள்
மகிழ்ச்சியுடன்சென்றார்கள்-காசி

நடை.

தந்தையருஞ்சென்றபின்பு தனஞ்சயன்மகிழ்ச்சியுடன்
ஆயுதங்கள்தான்கழட்டி அலம்பினார்சலமதனில்
பொய்கையிலேநீராடி புண்ணியனும்வந்துநின்று
பரமனைதான்நினைத்து பஞ்சாக்ஷரமணிந்தான்
ஆலமரத்தடியில் ஆயுதங்கள்தானிறுத்தி
வீரமாங்காளியரை வீரப்பன்தானினைத்து
வேங்கைதனைபிடித்துவந்து விமலியர்க்குகாவுதந்தான்
மாங்காளியைகைதொழுது மன்னவனுமாயுதத்தை
ஆடைகளைந்துவீரன் யாவும்காளிகையில்தந்து
வேண்டும்போதுதாவெனவே விமலியுமறைந்தபின்பு
காடுவனந்தாண்டி காளையும்வீடுவந்தான்
இப்படியாகஇவர் இருக்குமந்தநாளையிலே
கமலாபுரிஅரசன் கம்பளகுலாதிபதி
பொல்லாதகம்பளத்தான் பொம்மணராசேந்திரன்
தவத்திலுதித்தவளாம் சாற்றவொண்ணுபேரழகி
மயிலினைபெண்ணரசி மாதுபொம்மியென்னுமின்னாள்
அன்னநடையழகி அழகில்சிறந்தவளாம்
இவளழகைபோலவேதான் எங்குமில்லைவையகத்தில்
ஆணுமவள்பெண்ணுமவள் அரசுக்குடையவளாம்
பெதும்பைபருவமதில் புத்தியவள்தானறிந்தாள்
பொம்மிருதுவானாளென்று போகவிட்டார்வோலையெங்கும்
சாதிமுறையிலுள்ள சாஸ்திரபடியவர்கள்
பலவிதமேளத்துடன் பாவையையலங்கரித்து
ஊருக்குமேற்காக உள்ளசிங்காரவனம்
பச்சிலையால்குடிசையிட்டு பாவையையதற்குள் இருத்தி
சாதிவழக்கப்படி சக்கிலிசின்னானையழைத்து
அல்லும்பகலுமிங்கே ஆண்காற்றுவீசாமல்நீ
காக்கவேணும்பிசகுவந்தால் கண்டதுண்டம்செய்திடுவேன்
நல்லதென்றுசின்னானும் நலமுடனேகாத்திருந்தான்
ராசனுத்தாரப்படி ராப்பகலும்காத்திருந்தான்
வொருநாள்சின்னானவனும் வுற்றமனைதனக்கேகி
சாப்பிட்டுவருவோமென்று சாயரட்சைவேளைசென்றான்
ஆகாசமெங்குமொன்றாய் அடர்ந்ததுமேகமப்போ

சூழுறல்மின்னலுடனே கோடையிடியிடித்துமழை
கறுக்கலிருட்டுடனே காற்றுமழைதானடிக்க
சின்னானுமப்போது சித்தங்கலங்கியவன்
எப்படிபொம்மிகாவல் ஏகுவேனென்றழுதான்
துணையொருவரில்லாமல் தோகையரைவிட்டுவந்தேன்
அரசனிதையறிந்தால் ஆக்கினைகள்செய்திடுவான்
பொல்லாதராசனுச்சே பொம்மணராசேந்திரன்
சின்னான்பெண்சாதியுடன் சிலமொழிகள்தான்புகல.

## வீரன் விருத்தம்.

எவ்விடத்தில்இம்மழையில்எங்கேபோகவெண்ணங்கொண்டீர்
வொவ்வுமோநீபோவதற்கு வுலகோரென்னையேசாரோதான்
செவ்வையாகபொம்மிகாவல் சேவித்துகாத்துவாரேனுன்
நாவதனுத்தாரம் நவிலுமெனவீரன்கேட்க.

## நடை.

காற்றுமழைதனிலே என் கண்மணியே போவாயோடா
அறியாதபிள்ளைநீயும்-காட்டில்-அஞ்சாமல்போவாயோடா
நீபோகவேண்டாமடா-காவல்-நின்தகப்பன்போகட்டுமென்றாள்
நானிருக்ககிழவன்போக-நல்ல-ஞாயம்சொன்னாய்தாயேயென் [றான்
தாய்தகப்பன்கேட்பதனை-இருவர்-தான்மகிழ்ந்தேதுரைப்பார்
அப்பனேநீபோனாயானால்-அந்த-அணங்குகாவல்காப்பாயோடா
பயபக்தியுடனேமைந்தா-அந்த-பாவைகாவல்காக்கவேணும்
பாலகாநீவாலிபண்டா-அந்த-பாவையும் வாலிபபெண்
கண்டவர்கள்நத்துவார்கள்-அந்த-கன்னியுடஅழகைகண்டால்
பார்த்தவர்கள்நத்துவார்கள்-அந்த-பாவையுடனழகைகண்டால்
தூஷணமாயுனைபேசுவாள்-நீயும்-துர்ப்புத்தியாலெதிர்த்திடுவாய்
அரசனிதையறிந்தால்-நம்மை-ஆக்கினைகள்செய்திடுவான்
வேண்டாமடாவுன்தகப்பன்-போகவேணுமென்றுதாயார்சொல் [ல
என்னையும்மூடனாக-நீயும்-எண்ணியோசொன்னாய்தாயே
அரசனிடகாவலாச்சே-நான்-அசட்டையாககாப்பேனோதான்
அகமகிழ்ந்துசின்னானும்-ஆனல்-அப்பனேநான் சொல்வதைக்கேள்
பொம்மியுடகாவலுக்கு-நீ-போய் பயபக்தியுடன் [கு
நூரத்திலேவோர்குடிசை-அங்கே-துண்டாய்போட்டிருக்கு தங்

அதற்குள்ளேநீயிருந்து-அங்கே-ஆண்காற்றுவீசாமலே [ள்
காத்துக்கொண்டிருக்கும்போது-அந்த-கன்னியும்வேலையிடுவா
ளதிட்டுபோர்க்காமலே-நீயும்-எதிரொன்றும்பேசாமலே
வாய்புதைத்துகைகட்டி-நீ-வணக்கமாயிருக்கவேணும்
வாலிபசேஷ்டையினல்-நீ-வம்புக்கிழுக்காதே
பத்திரமாய்காப்பாயென்று-சின்னன்-பகர்ந்தானேபுத்திதனை
தந்தையின்வுத்தரவுபெற்று-வீரன் தானுமப்போளதுசெய்தான்
நீராடிபட்டுடுத்திவீரன் நீலிபூசையறைக்குள்சென்றான்

## கும்மி.

சங்கராசம்போ சதாசிவாவென்று-சாமியும்
வெண்ணீற்றை தானெடுத்து
சங்கரிவோம்நம சிவாயஎன்றிவர்
சடாக்ஷரமோதி தானணிந்தார்

சந்தனமிட்டு சவ்வாதுபூசி-யிவர்
சங்கரிகுங்குமம் தானுமிட்டு
கந்தகளபங்கள் கஸ்தூரியணிந்து
கட்டினர்வேஷ்டியை சோமக்கட்டாய்

முண்டாசுகட்டி முருகுமிட்டு-எழில்
முகத்துக்கேற்ற கடுக்கனிட்டு
கண்டசரம்பாசி பந்துகட்டி-வீசு
கைதனில்பவுத்திரம் தான்தரித்து

காலுக்குவீரகண்டாமணி-போட்டிவர்
கட்டினரிடுப்பில் பட்டாகத்தி
மேனுக்குருமால் போர்த்துதலைக்கு
மேலானமல்லிகை தான்முடித்து

கைதனில்கோராங் குச்சியைக்கொளுத்தியே
கன்னியின்காவல் தனக்குப்போக
மெய்தனில்கந்த களம்பங்கள்வீசவே
மேவினர்பொம்மியின் காவலுக்கே

மழையுமிருட்டு மானதி-னலந்த
மங்கைபயந்தே சின்னனவனை
அழைத்துஅழைத்து காணமலேஇவள்
அச்சமேகொண்டிவளேதுரைப்பாள்

நல்லதுலெண்டியாய் விட்டுப்போன-அந்த
நாசக்காலன்சின் னான்தனை நான்.
கொல்லும்படிசெய்வே னென்றேயந்தக்
கோதையும்வழியைப் பார்த்திருந்தாள்
பந்தம்பிடித்துவரும் ரூபத்தை-இந்த
பாவைபொம்மி பார்த்தேபயந்து
அந்தரவாசியோமாடன் கறுப்பனோ
ஐயனாரப்பன் குறளியோதான்
அரசன்புத்திரியா யிருந்தும்நாம்
அச்சங்கொள்ளுவ தழகல்லவே
வரட்டும்பதிலுரையா விட்டாலிந்த
வாளுக்கிரையாக் கொடுப்பேனென்றாள்
ஆரப்பா இவ்விடம் வரவேகாரண
அதுவலென்னமோ சொல்லுமுந்தன்
ஊரென்னபேரென்ன வுரைப்பாயில்லாவிடில்
உந்தனுயிர்போகுமென்று சொன்னாள்
இவ்விடம்காவல்புரி சின்னான்மகன்
என்பேரோவீரப்ப னென்றுரைத்து
செவ்வையாய்காவல்புரியவே நான்வந்தேன்
சேதம்வுனக்கொன்றும் வாராமலே.

## விருத்தம்.

சின்னான் மகனென்று சிகிர்துகள் பேசி
சிறியவளை யேமாற்றவந்த
வன்னமாகியவுந்தன் வடிவையான் நோக்கிலோ
வானவர் போற்றொணாது
கன்னிதன்காவலைக் காக்கவந்தேனென்ற
கபடவார்த்தைகளை விட்டு
இன்னகாரணத்தினாலிங்கு வந்தேனென்
றியம்புவாய் சத்தியமாக.

## அகவல்.

அன்னத்தின்நடையதை அழிக்கவேவந்த
கன்னலாகியசிறுகன்னியே கேட்பாய்
முன்சென்னப்பழி மூண்டதோவறியேன்

என்பிறப்பைச்சொல எவருமேஅழுவார்
காசிலையஆண்டிடும் கனதுளசிராசன்
நேசித்தீசனை நெடுந்தவம்புரிய
காதலைத்தீர்க்க காளையான்பிறந்தேன்
பூதமெடுத்தென்னை போட்டதுகானகத்தில்
அடவிமாதிகச்சி ஆவாரம்பட்டைக்கு
நடந்தனளென்னை நாயகிகண்டு
வாட்டமாய்நிற்க ஆகாயவாணியும்
கேட்பாயிப்பிள்ளையை கிளிமொழிவளர்ப்பாய்
வீரப்பனென்று விளங்குபேரென்ன
ஆரவாரத்துட னவர்களும்வளர்த்தார்
குளத்திற்குளிக்க கூட்டொருபையன்
வளர்ப்புபிள்ளையென வைதனன்என்னை
அன்னைமாதிகச்சியை அடிபணிந்தேநான்
என்னையீன்றோர்யார் இயம்புவாயென்ன
கண்மணிஉன்னைக் காட்டில்கண்டெடுத்தேன்
பெண்மணியீன்றிடும் பேதையைஅறியேன்
என்றுமாதிகச்சி இயம்பிடயானும்
உன்னூரிலுள்ள உக்கிரமாங்காளியை
கேட்டிடச்சென்றேன் கிளிமொழியாளே
கூட்டமாய்ப்பூதம் கொடும்போர்செய்ய
வதைத்துநான்சென்று வணங்கினேன்காளியை
பதைக்கயென்பிறப்பின் பகுப்பதைச்சொல்லி
அளவற்றவரமும் ஆயுதமுந்தந்து
களங்கம்வையாதுனைக் காப்பேனென்றாள்
வரமதுபெற்று வந்ததின்பிறகு
புரட்டாசிமாதம் புவனையாள்கொலுவா
ஆயுதபூசைக் கடவியில்சென்று
பாயும்புலியதை பற்றியான்பிடித்தேன்
அவ்வழிகாசி அரசன்மந்திரியுடன்
செவ்வையாய்க்கண்டேனை சேயிவனோரோ
என்றெனையவர்கள் யாரெனக்கேட்க
மன்னனும்காசி மகிபாதுளசிராசன்
தவத்தினிலுதித்த தார்வேந்தன்யானும்
நவமணியாமென நவின்றனனென்னை

கட்டியணைத்தெனைக் காதலைத்தீர்க்கவே
அட்டிசெய்யாமலே அரசுக்குவாவென
பலாத்காரம்செய்ய பாதுகாத்தோர் தனை
அலையவிடுவது அழகல்லவென்றே
மாங்காளியுமெனை மர்ம்மமாய்ச்சிலநாள்
ஈங்கிருப்பாயென இயம்பியவார்த்தையால்
தந்தையைவணங்கி தயவாகயானும்
எந்தனைகாத்தோர்க் கிதமாகச்சொல்லி
வருவேன்சீக்கிரத்தில் வருந்தாதீர்யென்று
உருக்கமாயவர்க்கு உண்மையாய்ச்சொன்னபின்
நல்லதென்றவர் நடந்தனர்பிறகு
சொல்லியபூசையை சுந்தரிக்கிசைந்தபின்
மழையானதால்யான் மாதிகற்குப்பதில்
பிழைவராமலே பேதையேகாத்திட
வந்தனனென்தன் வரலாறுதனைப்போல்
எந்தமனிதர்க்கும் இருக்காதிக்கதியே

## விருத்தம்.

ஆதியிலரிச்சந்திரன் புரூரவ அரசனும்
அரிவைதன் மைந்தனுரை
ஆகாதசனியினால்விட்டு வேறுருவமாய்
அலைச்சல்பட் டிருக்கவிலையா
நீதியாகியநளச் சக்கிரவர்த்தியவர்
நெடியகானகத்தில் பெண்டை
நிறுத்திவிட்டோடி சேவகத்தொழில்செய்ததை
நீகேட்டறிந்த திலையா
ஓதிடும்ஸ்ரீராமர் லட்சுமணர்சீதையும்
வொருமித்து கானகத்தில்
ஒருத்தியாஞ்சீதையைவிட்டு பன்னிரெண்டாண்
டுளங்கலைந்தலைய விலையா
நீதிலாபஞ்சபாண்டவர் திரௌபதியுடன்
திரிந்ததைக் கேட்டிருந்தும்
நீரத்தைவிடுவது வீரருக்கழகல்ல
திரிபுவனஞ் சாடுங்கரனே.

### விருத்தம்.

பொம்மியவள் இவ்வாறு புகன்றிடும்போதெவரும்
புகழொணு ரூபவதியாய்ப்
பொதுவாக இருவர்தம் நடுவினிற்ருேன்றியே
புகலுவா ளிருவருக்கும்
நம்பியேதினந்தொழு முங்கள்குலதேவதை
நான்தான் சக்கம்மாதேவி
நற்குணமுடையசிறு நங்கையேயிப்புருடன்
நவில்புருட னாமுனக்குச்
செம்மையாய்க்காந்தர்வவிவாக நீர்செய்துமேல்
செகமெலாம்புகழ வாழ்வீர்
செருக்களத்தினிலிவனை வெற்றிபெற்றிடவொருவர்
செகமதிலில்லை யாகும்
நம்பியென்சொல்போல் நடப்பீர்களென்னவே
நல்லதென்றிவர் பணிந்தார்
நான்மறைபுகழ் சக்காதேவியும்போனபின்
நவிலுவான் வீரன்தானே.

### வர்னமெட்டு-புருடன்.

பொம்மியெனுமாதர்க்கரசே பூவுலகிலுன்போல்
பொருந்தசொல்ல வொருவரில்லையே
நம்பிவுங்கள்குலந்தொழும் நாயகிசக்காதேவியாள்
அம்மைசொல்படிநடக்க நாயகியின்னம்தடையா. (பொம்மி)

### பெண்.

மன்மதனழகைபழிக்கும் மன்னனே யிந்த
மாதுசொல்ல எதுயில்லையே
இன்னகரெல்லாம்துதிக்கும் எங்கள்குலசக்காதேவி
சொன்னசொல்மறுத்தேயெங்கள் குலத்தில்நடப்பதில்லை (மன்)

### புருடன்.

காந்தர்வவிவாக மாசர்க்காருமாமதை
மாந்துளிராளே செய்குவோம்
முந்தியகணபதி ஐயமும்மூர்த்தி தேவர்களை
அந்தரவாசிகளை யடிபணிந்திடுவாய்மாதே.

## பெண்.

மும்மூர்த்திதேவர்களையும் மூஷிகனையும்
முருககடவுளையானும்
நம்பினேனெங்களை நாதாகாத்தருளுமென்று
செம்மையாகவேயிதோ சேவித்துநின்றேனேநானும். (மன்)

## விருத்தம்.

வீரனே மஞ்சள்கொம் பெடுத்து நூலில்
விரும்பவேமுடியிட்டு பொம்மியற்கு
நீரணிந்து தேவர்களுக்காணை யிட்டு
நிமிஷமெனும் விட்டும்மைப்பிரியேனென்று
வாரணியுமுலைநல்லாள் கழுத்திலேதா
னணிந்தனனப்போ தாகாயத்தில்
ஆரவாரத்துடன் துந்துமிமுழங்க
அந்தரவாசிகள் புஷ்பமாரி பெய்தார்.

## வர்ணம்.

பஞ்சவர்ணக்கிளிகள் கொஞ்சுமொழியினளே
வஞ்சிக்கொடியிடையாளே - எந்தன்
நெஞ்சமவறளுதுந்தன் இன்சொல்வா யிதழ்பானம்
அஞ்சுகமே தருவாயே.
கண்ணாளனே எந்தன் காமக்கனிரசத்தைபெண்ணால்
பொறுக்கமுடியா தென்னை
நண்ணையிறுகக்கட்டி வெண்ணைகாமரசத்தை
பண்ணத்தாமத மேனையா
இந்தவையகந்தனி லுந்தனைபோலேபெண்கள்
எங்கும்நான் கண்டதில்லையே-உன்னை
அந்தப்பிரமன்தானும் யெந்தபிரதிமைகண்டு
அளவெடுத் தெழுதினனோ
ஆறுமுகசுவாமியை பார்க்கவேணுமென்று
அபேக்ஷைவைத்தவர்கள் வந்து
பாருக்குளுன்னைபார்க்கவேணு மல்லாலிந்த
பாரினிலில்லை யாருமே.

## விருத்தம்.

இந்தவிதமாக யிருவரும்கைகலந்து
அந்தரங்கள்பேசி ஆனந்தமாககூடி
தொந்தமாயிருக்கையிலே தோகையும்வீடுபோக
வந்ததுநாளுமென்று வஞ்சியருமேதுரைப்பாள்.

## வர்ணம் - பாட்டு.

என்னசெய்வேன் எனையழைத்தால்-எந்தன்நாயகா
உன்னைவிட்டெப்படிசெல்வேன்-பிராணநாயகா
அன்னமேவுனை விட்டுயானும்-எந்தன்நாயகி
அரைக்ஷணமே னும்பிரியேன்-பொம்மிநாயகி
கோட்டைசுற்றி தாளைப்பூட்டி-எந்தன்நாயகா
கோடிபேர்கள் காவலுண்டு-பிராணநாயகா
எத்தனைதாள் பூட்டியிருந்தாலும்-எந்தன்நாயகி
எத்தனைபேரிருந் தாலும்யென்ன-பொம்மிநாயகி
இப்படியே நாமிருவரும்-எந்தன்நாயகி
எங்கேயாகிலும் போய்விடலாம்-பிராணநாயகா
இப்படியே போய்விட்டால்-பொம்மியாளே
எளிதமாயெனைச்சொல்வார்-பிராணநாயகி
காவலதி காரமெத்த-எந்தன்நாயகா
காணயென்னை முடியாதுன்னால்-பிராணநாயகா
அப்பெரிய காவலில்நான்-பொம்மியாளே
அஞ்சாமல்சிறையெடுத்தால் பேரு-எந்தன்நாயகி
நாளையிரவுமுழுதும் பார்ப்பேன்-எந்தன்நாயகா
நாதனேயென் னுயிரைவிடுவேன்-பிராணநாயகா

## நடை.

இந்தவிதமாகவே தானிவர்கள்
இருக்குமந்த நாளையிலே-அப்போ
பொம்மண ராசேந்திர ராஜன்
பொம்மியரைத் தானழைக்க-அவனும்
புல்லக்கை சிங்காரிக்கசொல்லி
பலவிதமேளத்துட-னவனும்
பட்டணத்துள்ளோர்கள் படைசூழ
பாராளும் ராசனும்-வந்தவனும்

53

பொம்பியரை பல்லக்கினிலேற்றி-போனார்
ஆடம்ப மாயவர்கள்
சடங்குமுதல் பொம்மியர்க்குசெய்ய
சகலருக்கும் வெகுமதிகள்செய்தார்
சின்னானுக்கு வெகுமதிகள் கொடுத்து
செய்தனுப்பும் வேளையிலே-வீரன்
அரண்மனைக்குபோகும் வழியெல்லாம்
அப்போதே பார்த்துகொண்டான்-வீரன்
நல்லதிந்த ராத்திரிக்கு வந்து
நங்கையை சிறையெடுப்பேன்-என்று
அக்கோட்டை மதில்களெல்லாம்-சுற்றி
ஆராய்ந்து பார்த்துக்கொண்டானும்
போசனம் பலகாரம்வாங்கி
போனார்கள்சின்னானும் வீரனுமாய்
கணவனும்போனபின்பு பொம்மி
கன்னிமுகம்வாடி ஏக்கங்கொண்டாள்.
பலகாரமன்னமுதல் பட்சணம் செய்யாமலிவள்
பாங்கியோடும்
கலகமற்றுபேசாமல்கன்னியன்று பகல்யுகமாய்
கழித்தாளல்லால்
வலதுக்குசொன்னவீரன் வருவாரோயின்றிரவு
வாரானோவென்றே
வலையிலகப்படுமான்போல் வஞ்சியரும்பஞ்சணையில்
வாட்டங்கொண்டாள்.

## விருத்தம்.

பொம்மியரை விட்டுவீரன் போனதின்பின் அந்திநேரம்
செம்மைவானம் நீங்கி சேருமிருட் காலம்வந்தால்
தெம்புடனன் போய்ப்பொம்மியரசியைச்சிறையெடுக்க
கம்பளத்தார்சேவகத்தை காண்போமெனக்கருதினனே.

## நையாண்டி.

வீரமாங்காளியை தொழுதான்-அந்த
வீரனும்பொம்மியைசிறைதான் யெடுக்க (வீரமாங்)

அசுரமுதலெவர்களு மஞ்ச: அந்த
சுந்தரியாள்தந்தாடை யாபரணங்கள்

வரத்தால்வாங்கிய வாயுதமும்-வீரன்
வரிசையாய்கட்டியே ஆனந்தங்கொண்டு (வீரமாங்)

பதினைந்துநாழியிரவில்-வீரன்
பஞ்சாட்சரமெடுத்து பகவதிதன்னை
துதித்தெல்லாமுறங்கியபின்பு-இவர்
துணைவியிருக்கு மிடத்தைநாடியே (வீரமாங்)

கோட்டைமதில்களைசுற்றி-காவலர்
கூட்டமாயிருப்பதை குருநாதன்கண்டு
போட்டார் விபூதியையள்ளி-அவர்கள்
பொத்தென்றெல்லோரும் கீழேவிழுந்தார் (வீரமாங்)

தாளைதரித்துள்ளேசெல்ல-நால்வர்
தாங்கியேபட்டாவை வோங்கியேவரவே
வாளையுருவியெ அவரை இவரும்வதைத்து
அப்பால்செல்ல பட்டத்துயானை (வீரமாங்)

வீரிட்டுவருவதைக்கண்டு-வீரன்
வீசியேதுதிக்கையை நாசப்படுத்தி
எரிடும்பட்டக்குதிரை-கண்டு
யிருக்கட்டும் வரும்போதேறி செல்வோ,மென்று (வீரமா)

நாய்குலைத்து வரப்பார்த்து-அதை
நாசப்படுத்தி நங்கையரமனைக்கு
போய்கதவை தான்திறக்க-இவர்
போட்டவிபூதி தாப்பாள்திறக்க (வீரமாங்)

தாதியர்வீணையைமீட்டி-அப்போ
தன்னியாசிராகம்பாட வீரன்கேட்டு
ஓதினன்விபூதியள்ளி-அவர்கள்
வுறங்கினர்வுள்ளே நுழைந்து (வீரமாங்)

## விருத்தம்.

பஞ்சணையின் மேல்படுத்து பாம்பாகபுறண்டிருந்த
பாவைபொம்மி
நெஞ்சமது தான்கலங்கி நித்திரையில்லாமல் இவள்
நினைவும்வேறாய்

55

வஞ்சகமாய்வருவேனென்று பொய்யுரைத்தவார்த்தைதனை
யறிந்தால் யானும்
கொஞ்சநேரமாகிலும்நான் அவரைவிட்டுப்பிரியாமல்
கூடச்செல்வேன்.

## கும்மி.

பொம்மியைக்கண்டு எழுப்புதற்கு - அங்கு
போகையிலேயவளோடி வந்து
கும்பத்தனமிவர் மார்பழுந்த - அந்த
கோதையுங்கட்டியே முத்தமிட்டாள்

காலதாமதங்கள் செய்யாதே - எந்தன்
கண்ணே புறப்படு மென்றுரைக்க
நீலவிழியாளும் பலகார - மற்ற
நிதியாடையாவுமே தானெடுத்தாள்

இருவரும்பட்டக்குதிரையிடம்வந்து-இவர்
ஏறும்குதிரை சாமானும்போட்டு
வரும்வழிதன்னில்நாய் சேனையை-நான்
வதைத்ததைபொம்மி நீபாருமென்று

கோட்டைராஜவீதி தன்னைவிட்டு - ஏறும்
குதிரையைதட்டியே விட்டுவிட்டார்
ஒட்டமாகபட்டணம்தாண்டி-அவர்
ஒருநொடியினில் கம்பளத்தைவிட்டு

நயினமலைதனைக்கடந்து - இவர்
நடத்தினர்சேந்த மங்கலதடம்
ஐயனரப்பன்தனைதொழுதே - துரை
அப்போதேநாமக்கல்லைக் கடந்தார்.

வேப்பணத்தம்புதுப்பட்டியைத் தாண்டி - இந்த
வேந்தன்வளையல்பட்டியாகச் சென்று
ராப்பாராஜயன்சத்ரத்தின் - வழியாக
ராஜனும்மேட்டுப்பட்டிக்குள் சென்றார்.

தொட்டியன்பட்டணத்தைக்கடந்து - அப்போ
துரையும்முசலிகிராமம் விட்டு

மட்டுபடா அய்யம்பாளையம் வழியாய்
மன்னன்குதிரையை விட்டுவிட்டார்

மண்மேடுஎன்னும் கிராமவழியா-யாவர்
மன்னனும்கீழா நெல்லூர்கடந்து
அண்ணனும்ஐயாருதான்கடந்து - எங்கள்
அப்பனும்கொள்ளிடம் தாண்டிவிட்டார்

பாராய்திருச்சினுப் பள்ளியென்று-இவர்
பத்தினியோடும் ஆற்றங்கரையிறங்கி
பாராக்காரனை தானழைத்து-எங்கள்
பாராளும்ராசாவிடத்தில் நீபோய்

காசிமகாராஜன் புத்திரனு-மவர்
காதலியோடிங்கு தானமர்ந்து
பூசிக்கயீசனை சிலதுநாளிங்கு - நான்
பொருந்தவேணுமென்றுரையு மென்றார்

காவலனேடிராசனைக்கண்டிங்கு-அவன்
காசிராஜன்புத்திரன் தேவியுடன்
ஆவனுடன்தாயு மானசுவாமியை - அவர்
அடிதொழவே சிலநாளிருக்க

உங்கள்அரசனேடுரையு மென்றுரென்ன
ஊராளும்விஜய ரங்கன்கேட்டு
இங்குதனியாகவந்ததால்சூது - அது
இருக்குதுபின்னல் அறிவோமென்று

அமைச்சனையழைத்து ஆற்றங்கரை - தன்னில்
அடித்துடேராமுதல் ஆட்களையும்
சமைத்துஅவர்மனம் சந்துஷ்டியாகும்படி
சகலமும்அமைத்து தாவெனவே

**விருத்தம்.**

அரசனவர்சொற்படி யாற்றங்கரைதனில்
அடித்துடேரா யெவைக்குங்
குறையதில்லாமலே குதிரைமுதலியவர்கட்கும்
கொற்றவனுரைப்படிசெய

வீரனும்பொம்மியு மிணைபிரியாமலே
மிக்க சந்தோஷமாக
மாரனையெரித்தவர் மலரடிதொழுது
மறவாதிருக்கும் போது.

### எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சின்னான் தன் மனைவியும் செல்வனைங் காணமல்
திகைத்துமே எழுந்திருந்து
சித்தங்கலங்கியே அக்கம்பக்கந்தேடி
சேயினைக்காணததால்
மன்னவா வீரப்பனெங்கே யென்றெழுப்பிட
மாதிகன் கண்விழித்தாற்
மாமுனிசாபமது விலகியே பழையபடி
மன்னவனாகியப்போ
அன்னமேநாமிந்த குடிசைதனி லிருப்பதேன்
அறிவிப்பாயென்று கேட்க
அடவியில்சென்றுமே மானைநாம் கொன்றபின்
அங்குமுனி சாபமிடவே
இன்னாள்நாம்நீச்சராய் இவ்விடந்தன்னிலே
இருந்தோம் போற்றோணுது
இறைவனேநாமிங் கிருக்கவொண்ணாதென்று
யேகினாரவர் பதிக்கே.

### உலகேலாம்.

அருணனுதைய மாகியபின்தோழி
அலறியெழுந்து அரிவைபொம்மிதன்னை
வெருண்டு அக்கம் பக்கமெல்லாம் - தேடியே
வெட்டுபட்டிறந்த நாயைக்கண்டிவள்
திருடனாரோவந்து பொம்மிதன்னையே
தெரிவையை எடுத்தேகினானென்றிவள்
வருகுவாளரசனிடத்தில் சொல்ல
வானைசேனை இறந்ததை கண்டபின்
உருவினகத்தியோடுமே சேவகர்
உயிர்நீங்கியிருப்பதைக் கண்டேயவள்

கருத்துமாரிகலங்கி யழுதுமே
கதவுகள்உடைபட்டு இருப்பதும்
செருக்களம்போல் சேனைகள் மயக்கமாய்
செத்தவர்போல்கிடப்பதைக் கண்டவள்
வருத்தப்பட்டரசனிடஞ் சென்றிவள்
அழுதுகண்ணீரொழுகவே சொல்லுவாள்

## நாமாவளி.

### கல்லாருக்கும் கற்றவர்க்கும்.

அரசனே கேளுமிந்த அனியாயந்தன்னை
அருங்கிளியாள்பொம்மிதனை யாரோகொண்டுபோனார்
காவலானநாய்கள்தம்மை கண்டதுண்டஞ்செய்தார்
காவலர்தனையும்வெட்டி கட்டில்லாமல்சென்றார்
பட்டத்துயானைதன்னை பதைக்கவேவெட்டி
படைகளெல்லாம்மயக்கமாகி பாரில்விழுந்தார்கள்
பாங்கியவள்சொல்லையிலே பதைபதைத்தரசன்
பஞ்சணையைவிட்டரசன் பாங்கியவளோடும்
ஆனைசேனை இறந்திருக்கும் அதிசயத்தைக்கண்டு
அடங்காதகோபத்துட னடித்தான்காவலரை
மயக்கமாகவெழுந்தவரும் மன்னவனைக்கண்டு
மதிமயங்கிதிகிலடைந்து மருளமருளவிழித்தார்
என்னடாசேவகரே எல்லாருமொன்றாய்
இப்படிதூங்குவதற்கு ஏதுவென்னசொல்வீர்
மன்னவனே எங்களுக்கு மயக்கந்தலைக்கேறி
மதிகெட்டிருக்குமிந்த மர்மமேதோவறியோம்
மந்திரியுமோடிவந்து மன்னவனைப்பணிந்தான்
மற்றுமுள்ளபிரதானிகள் மகாசபையைக்கூட்டி
பட்டத்துக்குதிரையுடன் பாவைபொம்மிதனையும்
படைகளையுங்கொன்றுபோன பலமுள்ளோனரோ.

### விருத்தம்.

பெரிம்மணன்சிமையென்றால் பிறந்திடும்குழந்தைதானும்
அம்மாடியென்றுவாயை அடைத்திடுமரசரெல்லாம்

கம்பளத்தரசரென்றால் கலங்கியேபிதுர்கொள்வார்கள்
வம்பனையிருக்கவேணும் வந்ததோர்கள்ளன்தானே.

### விருத்தம்.

நல்லதுகுடுமிதன்னை நானழைத்தேனென்றோதி
செல்வியைத்திருடிப்போன சேதியையறியவேண்டும்
வல்லாளன்தன்னை இப்போ வஞ்சினமையெடுத்துவரச்
சொல்லுவாய்சீக்கிரத்தில் துரிதமாய்ஓடிநீயும்

### நொண்டி சிந்து.

கம்பளஜாதியரில் இவன் கைதேர்ந்த மாந்திரிகனுகுமிவன்
அம்மணிசக்காதேவியாளவளாடிடும்அறுபத்துநாலுசித்துக்கும்
மையதைச்சொல்லுவேன் கேளுமிந்த
மானிலந்தனிலுள்ள மாந்திரிகருக்கும்
பையவேகரும்பூனை கண்ணுடனே பழகினநாய்
கறுப்புகண்ணையும்சேர்த்து கறுங்கழுதையின்பிச்சும்
அதனுடனே கறுங்குருமான்கண் பிச்சையும்சேர்த்து
வருவதுரைக்குமாந்தை வலதுகண்ணும் வலியினுலிறந்தவன்
மண்டையோடும் கோட்டானிடதுகண்ணும் கறுப்பு
கோவேறுகழுதையின் பல்லையுங்கூட்டி
வாட்டமாங்தேவாங்கின் கண்ணுடனே வலியனுடையயீரல்
தன்னையுஞ்சேர்த்து தலைச்சன் பிள்ளையின்கறுவும்
ஐங்கோலத்தைலத்துடனேசேர்த்து
மண்டையோட்டினில், நிலையாகமையைப்பிடித்து
சித்துகள்நினைத்திடு மறுமத்து நாலுகருமாடும்
தெந்தினம் தினதினனம்.

### நடை.

வெற்றிலைபைத்தானெடுத்து விளங்கமையில் பொட்டுவைத்து
வைத்தானெருரு பொட்டுமையை
சக்காதேவிதனைநினைத்து சகலமும் சொல்லலுற்றான்
அரசனேகேளுமையா ஆளானதால் மொம்மியற்கு
குடிசையிட்டுகாவலாக கொம்பனையைக்கார்க்கும்படி
வைத்தவன்தன் மகனொருவன் மாதுபொம்மிதனையெடுத்து
கொம்பனையை தானெடுத்து குதிரையின்மேலேறியவன்

தெற்குமுகமாகியவன் தெரிவையோடுபோயினன்காண்
ஐயாவேவெகுதுலவில் ஆற்றங்கரைதனிலே அவர்
கூடாரமடித்திவர்க்கு கொற்றவனிவர்க்குந்தான்
ஆள்கள்முதல்வைத்திவர்க்கு அவ்வரசனுதரிக்க
கோட்டைமுதலரமனைகள் கொற்றவனேதோணுதையா
ஈஸ்பரனுராலயமும் இருக்குதுமலையின்மீது
இராசாவேநதியொன்று இதமாகத்தோணுதங்கு
ஸ்ரீரங்கராலயமும் செவ்வையாகத்தோணுதையா
முக்கண்ணராலயமொன்று முக்கியமாய்தோணுதென்பான்
என்றுஇவன்சொல்லையிலே ஏதுசெய்தான்பொம்மணனும்
சின்னனைப்பிடித்தே நீங்கள் சீக்கிரத்தில்வாருமென்ன
காவலர்சின்னனைத்தேடி காணோமென்று வந்துரைத்தார்.

விருத்தம்.

அரசனுங்காவலர் தன்னையே யழைத்து நீர்
அடித்திடும் ரணபேரிகை
அனைவருஞ்சண்டைக்கு ஆயுதபாணியாய்
அவரவர்கள் வாகனத்தில்
வரப்பட்டசேனைகள் யாவற்று மானர்க்கு
அன்ன ஆகாராதிகள்
வகையுடனே ஒருமாதசிலவுக்குக் குறையாமல்
வண்டிகள் ஒட்டைமீதும்
திரமுடனே மாந்திரீக மதனில்மாரணம் செய்து
தேவதைக ளுச்சரித்து
தேவர்களைக் கொல்லும்படியான கருவுடன்
தேர்முத லலங்கரித்து
சேரவேவொன்பது கம்பளத்தா ரெல்லாம்
செருக்கோலங்கொண்டு வரவே
சேதிதனைய றிவிக்க வேணுமென் றரசன் மனை
சென்றபோர்கோலங் கொண்டு

நடை.

பொம்மணராஜேந்திரன் போர்க்கோலங் கொண்டவனும்
சக்கம்மாள்கோவில்சென்று சங்கரியே எம்முடைய
குலதெய்வநாயகியே கொம்பனையே நானுமிப்போ

பொம்மியைத்திருடிப்போன பொல்லாதபையல்தன்னை
சக்கிலிபையலையான் சங்கரித்துவருவதற்கு
வாக்குகொடுக்கவேணும் வடிவழகிளந்தனுக்கு
என்றரசன்கேட்கையிலே ஏதும்பேசாதிருந்தாள்
இன்னேரம்தாமதமா யெனக்குபதில்சொல்வதற்கு
தாமதங்கள்செய்யாமல் தாருமுத்தரமென்ன
பதிலொன்றும்சொல்லாமல் பகவதியும் தானிருந்தாள்
உத்திரவளிக்காவிட்டால் உத்தமியே சக்கம்மா
விட்டுவிடுவேனென்று விமலியே நினைக்கிறையோ
கண்டதுண்டம்செய்தவளை கழுகளுக்கிறைகொடுப்பேன்
கோபத்துடனரசன் கும்பிட்டுதான்திரும்பி
படைமுகத்தில்வந்தவனும் பயணபேரியடியுமென்றான்
ஒம்பதுகம்பளத்தாரும் ஒருமிக்கக்கூடினார்கள்
மூன்றுலட்சம்கம்பளத்தார் மூர்க்கமுடனே அவர்கள்
ஈட்டியம்புகத்திகளை யெடுத்துபயணமாகி
ஆனைபதினாயிரமும் அன்பதினாயிரம்குதிரை
ஒட்டகங்களாயிரமாம் உணவாதிகள்வண்டியினில்
பயணபேரியடித்துபட்டாளம் புறப்பட்டது
செந்தூளெழும்பவேதான் சேனைகள்போகும்போது
ஆகாசகுணமெல்லாம் ஆகிறதைராஜன்கண்டு
மனதில்சந்தோஷங்கொண்டு மன்னனும்போகலுற்றான்
வாய்வேகமனோவேகமாய் வருகிறார்படைகளோடே
மாட்டிடையன்தனைக்கண்டு மன்னவனுங்கேட்கலுற்றான்
ஒற்றைகுதிரையுடன் ஒருபெண்ணொருபுருஷன்
இந்தவழிசென்றாரா எனக்கறியசொல்லுமென்றார்
வெள்ளைகுதிரையேறிவேந்தனவர் பத்தினியுடன்
ஆண்டவாசென்றாரென அந்தயிடையனுரைத்தான்
வீரனங்கேசென்றவழி விசாரித்துக்கொண்டேகினார்கள்
அங்கங்குலுங்கியவர் ஆரவாரத்துடனே
செந்தூளெழும்பவே சேர்ந்தார்களெட்டாநாளில்
அரசன்படையுடனேயடைந்தான் திருச்சினாப்பள்ளி
தலையாரிதன்னைக்கண்டு தார்வேந்தன்கேட்கலானான்
ஒண்டிகுதிரையுடன் வொருபெண்ணுடனேவந்தான்
என்றுபொம்மணன்கேட்க யேதுசொல்வான்தலையாரி

ஆரோ ஒருபெண்ணுடனே ஆற்றங்கரை தன்னிலே
கூடாரமடித்தவர்கள் கொற்றவா அதோ யிருக்கிறார்கள்
என்றுதலையாரிசொல்ல எழுந்தது பாளயங்கள்

**விருத்தம்.**

பொம்மியவளப்போது வெளியேவந்து
போர்க்குவரும் தன்தகப்பன் படையைப்பார்த்து
அம்மையவளலறியே கணவன்தன்னை
அணைத்தேளந்தன் தந்தைபடையோடுவந்தான்
நம்மிருவர் தனை இந்த ஆற்றில்தானே
நாயகாவெட்டிடுவான் என்றழுதாளப்போ
வெம்மியழுகாதே யென்றுரைத்து
வீரன்வெளியில்வந்துபடைகளைப்பார்த்தேதுரைப்பான்

**விருத்தம்.**

படைகளைக்கண்டுவீரன் பதைத்துமே ஏதுசொல்வான்
அடைக்கலமாக இந்த அரிவையைகாக்கஉங்கள்
கொடையுடைஅரசனுக்கே உரையிந்தபடையையானும்
உடைத்தெதிர்த்தோரைவெட்டிவொரு முகூர்த்தத்தில்வாரேன்

**நடை.**

விஜயரங்கராஜனுக்கு வேவுகாரனையனுப்பி
கூடாரமுள்புகுந்து கொற்றவனுமேதுசெய்தான்
சரிகைபட்டில்வேலைசெய்த ஜல்லடத்தைதானுடுத்தி
கச்சைவரிந்துகட்டி கவசமதைமேலுடுத்தி
அம்புராதூணியதனை அணிந்தாரேதோளதனில்
கலிக்கத்துராமுடியும் கனவாகு வலயம்டால்
காளிதருங்கையரிவாள் கையதனில்வில்லெடுத்து
வீரமாங்காளிதன்னை வீரனும்தான்தியானித்து
வலதுபுஜம்தானிருந்து வடிவழகிகாருமம்மா
படைகளைசம்மாரஞ்செய்ய பத்தினிவுத்தாரம்தாரும்
தானுய்வளர்ந்தஅந்த தாயுமானசுவாமிதன்னை
அடிவணங்கிதெண்டனிட்டு அரகரா கார்க்கவென்று
பொம்மியரைத்தான்பார்த்து புகலுவானுக்ரவீரன்
உன்தகப்பன்சேனைகளை வொருமுகூர்த்தத்தில்கொன்றே
கண்ணேவருகுவேன் கலங்காதேபெண்ணேயென்ன

என்தகப்பன்தன்னைமாத்திரம் இதமாகவிட்டுவிடும்
படுகளத்திலொப்பாரி பட்சம்வைக்கலாகாதென்றே
குதிரையலங்கரித்து கொற்றவனுமேதுசெய்வான்
சுற்றிவந்துகுதிரைதன்னை சூரியனைத்தெண்டனிட்டு
வீரமாங்காளிதன்னைவெகுவாய் தோத்திரஞ்செய்தே
எறினார்குதிரையின்மேல் ஏந்திழையாளப்போது
தாம்பூலங்கொடுத்தவளும் தார்வேந்தாஜெயித்துவாரும்
என்றுசொல்லபொம்மியரும் ஏந்திழையேநல்லதென்று

நடை.

குதிரையைத்தட்டிவிட்டார் குவலயம்தானதிர
கனைத்துவருகிறதைக் கண்டான்பொம்மணராஜன்
ஒற்றைகுதிரையுடன் ஒருவனுமாய்வருகிறதை
சுத்தவீரனிவன்தானென்று சொல்லுவான்தன்படைகளுக்கு
சாமர்த்தியமாகநீங்கள் சமர்செய்யவேணுமென்றான்
யானைபடைகள்வேறே யணியணியாய்த்தான்பிரித்து
குதிரைபடைகள்வேறே கொற்றவனும்தான்வகுத்து
சுற்றிலும்காலாள்படைகள் சூழ்ந்திருக்கும்படியமைத்து
அணியணியாய்த்தன்படையை அரசனும்பிரிக்கச்சொன்னான்
இப்படியாகஇவ ரிருக்குமந்தவேளையிலே
விஜயரங்கராஜனிடம் வேவுகாரன்போயுரைத்தான்
ஆற்றங்கரைதனிலே யாரோதெரியாது
செந்தூளெழும்பவே சேனைகள்வந்திருக்கிறது
காளைகாசிமன்னனுக்கு கண்சிவந்துகோபமாகி
யுத்தம்செய்யப்போகிறேன்யான் உங்கள்ராசாதன்னை இந்த
பொம்மியைக்காக்கச்சொல் போர்புரியசென்றானென்றே.

விருத்தம்.

மன்னவன்கேட்டுமந்திரி மாற்றலர்படைகளோடும்
இன்னகர்தன்னில்வந்தார் யெதிர்த்துப்போர்செய்வதற்கு
கன்னியைக்காக்கச்சொல்லி காசிமன்னன்சென்றானும்
முன்னதாய்ப்படையனுப்பி மொய்குழல்காக்கச்சொல்லும்.

விருத்தம்.

இன்னகர்படையைக்கூட்டி யேகிநீசண்டைசெய்யும்
மன்னனுக்குதவியாக மற்றலர்தன்னைவெல்லும்

என்றுதன் அரசன்சொல்ல இயன்றதன்படைகளோடும்
கன்னியைக்காக்கவிட்டு காசிமன்னற்குதவியானான்.

## கும்மி.

வீரன்குதிரையின் மேல்வரு-வேடிக்கை
விந்தையைக்கண்டு பொம்மணராசன்
சூரத்வானென்று மனதிலெண்ணி-யவன்
சொல்லுவான் தன்படை யாவருக்கும்.

அதோவருவ னொருவனென்று-நீங்கள்
அலட்சியமாயெண்ணி பாராமலே
உருவினகத்தி கேடய-மம்புடனே
ஒருமித்து அவனைக் கொல்லுமென்றான்.

பொம்மணனுத்தாரப் படிதன்-சேனைகள்
போய்வீரன் தன்னையே சூழ்ந்துகொண்டு
அம்புயெறிசட்டி கொண்டு-ஆர்ப்பரித்து
அசையவொட்டாமல் மடக்கிக்கொண்டார்.

அம்புவில்லெடுத்து வீர-னந்த
அம்மணிசொல்மந்திர மும்செபித்து
கும்பல்கும்பலாய்ச் சேனைகள்-மீது
கோடிகணக்காக அம்பைஎய்தான்.

வருகிறஅம்பை அறுத்துத்தள்ளி-வீரன்
ஆனைசேனைமுதல் யாவுங்கொன்றான்
உருவியேகத்திசை சேனையுட்-புகுந்து
ஒருமுகூர்த்தநேரம் சண்டைசெய்தான்.

பொம்மணன்சேனைகளல்லோல-கோலத்துடன்
போரில்மடிவதைப் பார்த்தவர்கள்
அம்மாடிஎன்றோடும் படைகளை-எல்லாம்
அறிந்துவிஜய ரங்கன்சேனை.

கம்பளச்சேனைக ளோடுவதைக்-கண்டு
கடுகவேவிஜய ரங்கன்மந்திரி
தம்படைகளோடு இவனொரு-புறம்
தானுமஞ்சாமலே போர்புரிந்தான்.

கம்பளப்படைகளோடுவதை-எல்லாம்
கண்டதுண்டமாக வெட்டுகையில்
பொம்மணன்சேனைகள் மாளுவதைக்-கண்டு
போய்ப்புகுந்தான சேனாதிபதி.

ஓடிடும்தன் படைகளையெல்லாங்-கூட்டி
ஒருமிக்ககட்டப்ப னாய்க்கனவன்
வாடிடும்படிக்கு வீரனைபோரினில்-மிக
வலுவாகச்சண்டைசெய்தா னவனும்.

படைகளொருமுக மாகவரவே-அதை
பார்த்துவீரன் மிகக்கோபமாகி
அடைக்கலமாக எமபுரத்தில்சேர-வீரன்
அறுத்தான்சேனைக ளெல்லாமாளவே.

கண்டானே கம்பளராஜனும்-தன்படை
கால்வேறுகைவேறு ஆகிறதை
சண்டையிலிவனை வெல்லலாகாதென்றே
சண்டாளகருவினால் கொல்லநினைத்தான்.

## விருத்தம்.

பொம்மணன்சேனையெல்லாம் போரினில்மடிந்ததாலே
நம்மிடகுடுமியேநீர் நல்லதோர்கருவெடுத்து
வம்பனைக்கொல்லவேணும் வலுவானதேவதையால்
உம்மிடமாந்திரீகத்தி லவனுயிர்வாங்கும்பார்ப்போம்.

## விருத்தம்.

நல்லதென்றடிபணிந்து நாற்றிசைநடுங்குமாறு
வல்லமையுடையஎழ்பேர் வராகிதுராகிதுர்க்கி
கொல்லவேகருவெடுத்து கூறிடும்பொம்மக்காமாடன்
கல்லெறிகுட்டிசக்காதேவிகாட் டேரிகிங்கில்யன்விட்டான்.

## நடை.

உச்சரிக்கதேவதைகள் உறுமிஎழுந்ததுகள்
ஆகாயம்பூமிக்கும் அகோரரூபத்தைக்கொண்டு
அக்கினியைகக்கிக்கொண்டும் ஆயுதங்கள்வீசிக்கொண்டும்
அண்டமிடிந்துவிழுந்தாற்போல ஆஆவெனக்கர்ச்சித்து

வருவதைக்கண்டுதேவர் அச்சங்கொண்டுஏதுரைப்பார்
வீரனைக்கொல்லுமென்று வெண்ணிமனம்நொந்துநின்றார்
மாளிகையின்மீதிருந்து மன்னன்விஜயரங்கராஜன்
காசிமன்னன் இறந்தானென்றுகண்ணிரண்டும்மூடிக்கொண்டார்
நம்முடையபட்டணமின்று நாசமாகிப்போச்சுதென்று
எல்லோரும்தானிறந்து எமலோகம்சேர்வோமென்றே
குண்டிகலங்கிராஜன் குப்புறப்படுத்துக்கொண்டான்
ஆகாயம்பூமிக்குமொன்றாய் அகோரரூபமாகவரும்
தேவதைகள்தன்னைக்கண்டு திடமுடனேவீரனுந்தான்
குதிரையைவிட்டிரங்கி கொற்றவனுமேதுசெய்தான்
ஆற்றுமணல்பரப்பி அம்மனைதான்நினைந்து
நாற்பத்துமுக்கோணத்தை நலமாகசிரியேதான்
சரஹணபவவெனும் சடாக்ஷரமதைஎழுதி
ஆக்கிரிஷணமாக அன்பத்தொன்றையுமாறி
சத்தியுடபீஜத்தை சுவாமியவர்தான்மாறி
ஏகாக்ஷரமதனைஏந்தலும் சுற்றிநாட்டி
வீரமாங்காளிதன்னை வீரப்பன்தான்நினைத்து
பத்தியுடனுச்சரித்து பகவான்மணலையள்ளி
உத்தமியேகாருமென ஓங்காரமிட்டிசைக்க
சுழல்காற்றுண்டாகி சுழட்டிஅடித்தாப்போல்
அக்கினியைப்போல்அதுவும் அனலாயெரிக்குதப்போ
கம்பளத்தார்உச்சரித்த கடூரமுள்ளதேவதைகள்
பத்தியெரிந்தப்போதே பரமாகப்போச்சுதெல்லாம்.

## விருத்தம்.

செந்தணல்காற்றுமாகச்சுழற்றியே அடித்ததாலே
வந்திடும்தேவதைகள் வாடியேஓடிப்போக
மாந்திரிகரேழுபேரும் மாண்டார்கள்கண்பிதுங்கி
சிந்தையும்கலங்கியப்போ சீரினன்பொம்மணன்தான்.

## நடை.

மாண்டிருக்கும்சேனைதன்னை மன்னவனும்பார்த்து-அப்போ
இருக்கும்படையைக்கூட்டிஎல்லோருமொருமுகமாய்
கூட்டியேபொம்மணனும் கோபத்துடனேதுசொல்வான்
வெட்டிஜெயங்கொண்டவர்க்கு வேண்டும்பொருளீவேனென்ன

நாடுநகருங்களுக்கு நானளிப்பேனென்றுசொல்ல
இக்ஷணமவனைக்கொல்வோமென்றுசொல்லிபடைகளெல்லாம்
கம்பளச்சேனைவரும் காந்தாளத்தைக்கண்டுவீரன்
குதிரையின்மேலேறி கோபத்துடன்வாளெடுத்து
ஆத்தாளைத்தான்தொழுது அதட்டியேகுதிரைதன்னை
சிங்கக்குட்டிப்போல்வீரன் சீரிகம்பளச்சேனைகளை
வீச்சுக்கோர்ஆயிரம்பேர் வெட்டியெறிந்தானப்போ
மூன்றுலட்சம்சேனையொரு முகூர்த்தத்தில்கொன்றுவிட்டார்
பொம்மணன்சேனையெல்லாம் போனதைப்பார்த்தவனும்
கைதனிலேவாளெடுத்து கண்கள்ரெண்டும்சிவந்து அவன்
ஒருவரையொருவரெதிர்த்து உகாந்தம்போல்கெர்ச்சித்து
இருவரும்சில்துநேரம் எதிர்த்துபோர்செய்கையிலே
வீரன்தன்வாளதனால் வீசிவிட்டான்பொம்மணை
விஜயரங்கன்மந்திரியுடன் வீரனைவந்துபணிந்தார்
மந்திரியைசேனையுடன் மகிழ்ச்சியுடனேபார்த்து
விஜயரங்கஅரசனிடம் மேவுமென்றுசொல்லிவிட்டு
குதிரைக்குநீர்காட்டி கொடுவாளைசுத்திசெய்து
ஓடுகிறநீரதனில் வுத்தமனும்ஸ்நானஞ்செய்து
காளியரைத்தோத்தரித்து கன்னிகூடாரம்வந்தான்
ஆயுதத்தைவாங்கிஎந்தன் அப்பனெங்கேஎன்றுகேட்டாள்
உன்னப்பனிறந்தானென்றுரைக்கையிலே பொம்மியவள்.

## விருத்தம்.

அரகராசிவனே இந்த அரும்பாவிபோலப்பெண்கள்
தரணியிலுண்டோஎந்தன் தகப்பனும்சேனையோடு
உறவினருற்றார்பெற்றார் ஒருமித்துஎன்னால்மாள
பரமனேவுலகிலுள்ளோர் பழித்திடப்பிறந்தேன்பாவி

## அகவல்.

அப்பாவேயென்னை அன்புடன்வளர்த்தீர்
இப்பாவியாலே இறந்தாயிப்பாவியை
பிள்ளையில்லாமல்நீர் பெருந்தவம்புரிந்தீர்
கொள்ளியாகவேவுன் குலமழிக்கப்பிறந்தேன்
எமனைகவுனக்கு எடுத்தேனிந்ததேகம்
உமக்கிப்படிவருமென்று வொருகாலமறிந்திலேன்

பாவிநான்போனல் படைகளைக்கூட்டிநீ
ஏவியேன்வந்தாய் இறந்திடுவதற்கோ
பஞ்சணைமீதில் படுத்துமேநீயும்
கொஞ்சியென்தாயுடன் குலாவியிருக்கும்நீ
ஆற்றுமணலில் அப்பாவுன்தேகம்
காத்திரமாய்ச்சுதே களிப்புடன்படுத்தாயோ
தாதியர்விசிறவும் தாதிகள்பாடவும்
நீதியாயாண்டனின் கொலுவதைவிட்டு
எப்படிவுன்னுயிர் இறந்ததோபதைத்து
அப்பாவுன்குலத்துக்கு அரும்பாவிபிறந்தேன்
கும்பிளரியுதே கொடும்பாவியென்னுயிரை
கம்பளப்பெண்ணனதால் கசடியானிருக்கிறேன்
எனக்காகவுன்னுயிரை ஏன்விட்டாய்புகல்
உனக்காயென்னுயிரை ஊரார்பார்க்கவிடுகிலேன்
முகத்தினிலடித்தே மோதியேதலைதனை
மகளல்லவென்று மண்ணில்வீழ்ந்தழுதாள்.

### விருத்தம்.

பொம்மியவளழுகிறதை வீரன்பார்த்து பொற்கொடியே
போரிலிறந்தோர்கள்தானும்
கெம்பீரத்துடனவர்கள் வீரசொர்க்கம் கிளிமொழியே
சேருவரென்றறிந்திருந்தும்
வெம்பிநீயழுகுவதும்நீதிதானே வேந்தனிடப்புதல்விப்
யிருந்துநீயும்
செம்மையுடன்வுனையீன்ற தகப்பனுர்க்கு சேயிழையே
தகனமதுசெய்வோம் நாமே.

### கலி விருத்தம்.

அந்தவீரனும் ஆள்களின்மூலமாய்
சந்தனக்கட்டை சாமான்வரச்சொல்லி
பைந்தொடியாளை படுகளத்தழைத்துப்போய்
உந்தன்தகப்பனிறந்ததைப் பாரென்றான்.

தகப்பனைக்கண்டு தையல்பொம்மியாளும்
அகமுருகியே அப்பன்மேல்வீழ்ந்தவள்

முகத்தோடுமுகம் வைத்தழுங்கோலத்தை
ககனவாசிகளும் கண்டழுதார்கள்.

குரல்கம்மியழுங் கோதையைத்-தேற்றியே
அரசனைக்கட்டை மீதில்மர்த்தியே
கரத்தால்பொம்மியின் கடனைக்கழித்துமேல்
வான்முறைப்படி வைத்தெரித்தானபின்.

ஆற்றுநீரிலரிவை ஸ்நான்ம்செய்தபின்
கோத்திரத்தையழித்த கோடாலிநான்
நேர்த்தியாமிந்த நேர்மையைக்கண்டவர்
தூற்றியெனைத்தூஷிப் பாரென்றழுதனள்.

வீரண்சாப்பிட்டு விளங்கிழையாள்தன்னை
நீரருந்தும் நீள்விழியாயென்றுதான்
தீரதுயரம் தேறுதல்சொன்னபின்
வாரணிமுலையா மகிழ்ந்துண்டனள்.

## விருத்தம்.

விஜயரங்கரசனிடம் விவேகியெனுமந்திரியவன்
வீழ்ந்தடிபணிந்துசொல்வான்
புஜபலபராக்கிரம சாலியாம்வீரனவர்
போர்இன்றுபுரிந்தவகையை
அசதியாய்தேவரும் எண்ணிடிலவருயிரை
அனுப்புவான் எமபுறத்தே
நிஜமாகஅவனுக்கு மரியாதைசெய்யாவிடில்
நிலையாதுநமதுலகமே.

## நடை.

உனக்கும் எனக்கும்.

மந்திரிவிவேயேகிநான்மாளிகைமேலிருந்து
அந்தகாசிமன்னன்சண்டையைநான் அறிந்தேன்யாவற்[றும்
இந்திராதிதேவர்வந் தெதிர்த்தாலவருயிறை
அந்தயேமனுலகத்துக் கனுப்புவானேவோலே
நமதுபட்டத்தானையைநீ நன்றாயலங்கரித்து
நங்கைக்குமுத்துபல்லக்கு நால்விதமேளத்துடன்

நல்லதென்றடிபணிந்து நால்வகைசேனையுடன்
வல்லவர்போற்றும்வீரனை வந்துவணங்கினான்மந்திரி
விஜயரங்கராசனுன்னை விரைவாகவழைத்தார்
வேந்தனேவரவேணுமென்று வினவினான்மந்திரி
நல்லதென்றுவீரனும் நாயகியாளுடனே
உல்லாசமாய்ஆடையாபரணம்உடுத்தியேஇவர்கள்
பல்லக்கின்மேல்பொம்மியரும் பட்டத்துஆனைமீது
எல்லாப்படையும்தன்னைசூழ வீரப்பன்தானேறி
வாத்தியங்கள்முழங்க ராஜவீரப்பன்தானேறி
நால்திசையுமலங்கரித்து நங்கையராடபாட
ஆலாத்திகர்ப்பூரங்கள் அவரவர்கள்தான்சுழற்றி
அந்தரவாசியோஇந்திரனோவென ஆச்சரித்தாரெல்லாம்
கன்னியர்களிந்த வீரனழகைகண்டாசைமீறி
கலைகளவிழ வளையல்கயிள கருத்துமாறினார்கள்
மாதுபொம்மியழகைகண்டு மங்கையர்களெல்லாம்
மனதிலச்சங்கொண்டு வெட்கிமதிமயங்கிநின்றார்
பட்டணத்திலுள்ளோர்சூழ பவனிவந்துவீரன்
படைகளுடன்வருகுவதை கண்டுபார்த்துவிஜயரங்கன்

## விருத்தம்.

அரசனும்எதிரேசென்று அன்புடன்வீரன்தன்னைக்
கரமதுகொடுத்திறக்கி களிப்புடன்வாருமென்றே
அரமனைதனைக்கழைந்து போகவேபொம்மிதன்னை
பாவசமாகிராஜன் பலவிதமாகச்சொல்வான்

## ஓடி வாரும்.

வாரும்வாரும் காசிராஜே வந்துஎம்மைக்காருமென்று
பாரு முனதடைக்கலம்நான் பக்ஷமுடன்காருமென
ஆசனத்திலிருமெனவே அன்புகொண்டுவீரன்தானும்
பாசமுடன்ஆசனத்தில் பகலவன்போல்தானிருந்தான்
விஜயரங்கராஜமன்னன் வீரனவர்க்கேதுரைப்பான்
பிசகுயானும்செய்ததெல்லாம் பிழைபொறுத்தருளுமென
என்னைவேராகவேயுன் எண்ணமதிலெண்ணவேண்டாம்
உன்னுடையபிள்ளையைப்போல் உண்மையாகப்பாருமென
உன்னுடையஅரசதுபோல் நீருள்ளநாளளவும்ஆண்டு

## விருத்தம்.

இன்னகரெல்லாமாளும் இறைவனேவிஜயரங்க
தன்மவானனவன்போல் தரணியிலொருவரில்லை
அன்புஎன்மீதில்வைத்தா தரித்திடுமென்தன்கோனே
இன்பமாயின்னகரிதன்னி லிருக்கவேசிலவுதாரீர்.

## விருத்தம்.

தையலுநீயுமாக தனியாகவந்தீர் இன்னும்
வையகம்நடுங்கப்போரில் வதைத்தீரே அவர்கன்யாவர்
மெய்யருக்குதவிசெய்யும் மேன்மையாமுன்னார்பேரும்
ஐயரேவுரையுமென்று அரசனுங்கேட்டதற்கே.

## அகவல்.

ஊர்பேர் தன்னை உரையெனக்கேட்ட
பாராள்அரசனே பகருவேன்கேளும்
காசியாள்அரசன் காளையில்லாததால்
பூசிக்கஈசனை புத்திரனாய்பிறந்தேன்
வீரனென்றெவரும் விளம்புவார்என்பேர்
தாரணிமார்பனே தற்பரனருளால்
அமருதலாகவே அன்னியரிடத்தில்
கமலாபுரியில் காளையான்வளர்ந்தேன்
பொம்மணராஜன் புதல்வியாமிவளும்
பொம்மியாமிவளை போய்சிறையெடுத்து
இருவரும்உன்னக ரிருப்பதைக்கண்டு
பெரும்படையுடன்வந்து போர்புரிந்தார்கள்
ஒன்பதுகம்பளம் வொருமிக்கஅவரை
கொன்றேன்மூன்றுலட்சம் கொடும்பாவிகளை
மாந்திரீகத்தில் வல்லமையுள்ள
ஏந்தலேஇந்த கம்பளத்தார்கள்
வீரத்தைசொல்ல விஜயரங்கன்எழுந்து
கரமதைபிடித்துநீ காவலாயின்னகர்
இளவரசாகவே இன்னகர்தன்னை
களங்கமில்லாமல் காசியரசரேயிருப்பாய்
கடைவீதிமாளிகை, காதலியோடும்
படைமுதல்யாவரையும் பாதுகாரெனவே

சொல்படிநடக்க சுத்தவீரன்தான்
நல்லதூஅரசே நாளுக்காயிரம்பொன்
சம்பளந்தந்தால் சம்மதிப்பேன்நான்
உம்மிடஅலுவலே உறுதியாய்கார்ப்பேன்
என்றுவீரன்தான் இயம்பியசொற்படி
நன்றுநான்ஈவேன் நகரத்தைகாவென
கடைவீதிமாளிகையில் காவலாயிருந்து
படைகளையழைத்து பந்தோபஸ்துகள்செய்து
தேசவிசாரணை திரமுடன்பார்த்து
ஈசராலயமுதல் இருக்குமாலயங்களெலாம்
சரியாககாலபூசை சாமியேற்படுத்திபின்
அறியாமலெவரும் அர்த்தராத்திரியில்சென்று
வரும்கள்ளர்தம்மை வகையுடன்பிடித்துஅடித்து
கருவருத்திந்த கர்த்தனுமிருக்கையிலே.

## விருத்தம்.

திண்டுக்கல்கோட்டைகள்ளர் திடசாலிஆறுபேர்க்கு
முண்டாசுகட்டிநின்ற முதலாளிகளாறுபேராம்
மிண்டனும்வீரன்தன்னை மெதுவாயிங்குவரவழைத்து
கண்டதுண்டமசெய்வோமென்று காவலன்வீடுவந்தார்

## நடை.

அர்த்தராத்திரிவேளையிலே ஆறுகள்ளர்தானும்வந்து
வீரனார்மனைக்கு வெளிதனிலேவந்துநின்றே
கதவைதட்டித்திறவுமென்று கள்ளர்கள்கூப்பிடவே
பொம்மிஇந்தசப்தம்கேட்டு புருஷனையெழுப்பிவிட்டாள்
கதவைத்திறந்துவீரன் கள்ளரையாரடாவென்ன
திண்டுக்கல்கோட்டைவாழும் தீராமாராயிரம்பேர்கள்
ஆராயிரம்கள்ளருக்கும் அதிபதிநாங்களாறுபேர்தான்
உம்மிடவல்லமையறிந்து உமையழைத்துமரியாதைசெய்ய
எண்ணமதுகொண்டுவந்தோம் எங்கள்மேல்தயைபுரிந்து
கல்கோட்டைதாங்கள்வர காலில்விழுந்தார்கள்ளரவர்
நல்லதப்படிவருவேன் ஞாயிற்றுக்கிழமைதனில்
என்றுவீரன்சொல்லையிலே எத்தனைபேரோடு வருவீர்
தயைபுரிந்துரையுமென தனியாகவருவேனென்றான்

காலில்வீழ்ந்தேபணிந்துகள்ளர் இருப்பிடஞ்சென்றார்
ஆராயிரம்கள்ளர்களும் ஆயுதபாணியர்கி
கோட்டையலங்கரித்து குவித்தார்தனத்தையெல்லாம்
தலைமுறையாய்திருடிவைத்த தனத்தைகுப்பல்குப்பலாக
அன்னத்தில்விஷத்தைவைத்து ஆர்ப்பரித்துபார்த்திருந்தார்

## விருத்தம்.

வீரனுங்கற்கோட்டை ஏவுதற்கு
விரைவாகயலங்காரஞ் செய்துகொண்டு
வீரமாங்காளிதனை நினைக்கவந்தாள்
விஷமிட்டே அன்னத்திலுன்னைக்கொல்ல
ஆரவாரத்துட னிருக்கிறார்கள்
அஜாக்கிரதையாய் அன்னத்தை யுண்ணவேண்டாம்
வீரனேநாய்க்கிட்டு பார்ப்பாய்உன்னை
விடமாட்டேன் காப்பேனென்றுரைத்தாள்காளி

## விருத்தம்.

அன்னையவள்சொல்கையிலே அடிபணிந்து
ஆகட்டும்கள்ளர் சாமர்த்தியம்பார்ப்போம்
முன்கோபங்கொண்டுமே குதிரை தன்னை
முடுக்கியேகல்கோட்டைசென்றபோது
முன்னமேஎதிர்பார்த்திருந்த கள்ளர்
முகமலர்ச்சியோடு எதிர்வந்தழைத்து
பண்முறையாய்வணங்கியே யழைத்துப்போய்
பணம் நகை பொன் குவியல்தனைகாட்டினாரே.

## நடை.

வீரனார்தன்னை விரைவிலழைத்துமே
தீரமாய்கள்ளர் திரவியங்களையெலாம்
பாருமெங்கள்முன்னோர் தலைமுறையிதைக்
கூருவோம்கொள்ளை யடித்தபொருளிது
என்றுகாட்டி யிதந்தனில்மகிழ்ந்தே
கொன்றுபோடுவோ மென்றுஇவர்களும்
அன்புடன்பேசி அழைத்துஆசனத்தில்
இன்பமாகயிருக்கச் செய்தவரும்

சுந்தரனூர்பாதம் துலக்கியே
கந்தகதம்பம் பூசினார்கள்ளரும்
செந்தாமரையும் செண்பகமல்லியும்
தந்துசாப்பிட தார்வேந்தாவாவென
நல்லதென்றிவர் நாற்கதவைசாத்தி
எல்லோரும் புசிப்போம்வாருமென்றிட
கள்ளர்யாவரும் களிப்புடனுட்கார்ந்து
உள்ளமகிழ்ந்து சந்தோஷமானார்.

## விருத்தம்.

வீரனார்தனக்குதான் விஷமிட்டஅன்னமிட்டார்
வேரதாயுள்ளசாதம் வெகுபேரும்படைத்துக்கொண்டார்
வீரனார்சாதந்தன்னை வைத்தாரேநாய்தனக்கு
பாரதில்வீழ்ந்துநாயும் பதபதைத்திரந்ததப்போ

சம்மங்கிகி யெண்ணெ என்ரமெட்டு.

கண்டாரேவீரர்நாயை கண்களிரண்டும்சிவந்து
எண்ணிகாளியையவர் எடுத்தார்கோடறிவாளை
கள்ளர்இதனைக்கண்டு காந்தாளமாயவரும்
துள்ளியவரவர்கள் துதித்துகருப்பண்ணனை
ஈட்டியெரியம்புடனே எதிர்த்துவீரனையவர்
போட்டார்பெரும்போரவர் பொல்லாதகள்ளர்களும்
ஒருவீரன்மேல்கள்ளர்கள் ஓராறுயிரம்பேராம்
வருகிரகள்ளதம்மை வாளுக்கிரைகொடுத்து
சிங்கத்தைபோலேவீரர் சீரியிவர்வெட்டுகையில்
எங்கேஓடுவோமென்று ஏங்கிகள்ளர்ஓடுகையில்
வழிதனில்மடக்கியே வாளால்வெட்டியெரிய
முழித்தார்கள்ளர்கள்வோட முடியாமல்சாகிறார்கள்
துள்ளுகடாக்களைபோல் துண்டதுண்டமாகவெட்டி
கள்ளர்கூட்டத்தைஎல்லாம் கருவறுத்தார்வீரதுரை
ஆராயிரம்கள்ளர்தம்மை அறுத்தார்பேரில்லாமலே
வீராதிவீரர்தானும் கள்ளரைவெட்டிஜெயங்கொண்டாரப்போ.

## விருத்தம்.

காந்தாளமாய்வீரன் கற்கோட்டைகள்ளரை
கருவறுத்தானபின்பு

காராளனாயகி வேலாயுதன் தன்னை
கர்த்தனுமழைத்துரைப்பார்
தீங்தொழில்கள்ளரிட தேகத்தடக்கஞ்செய்
தீர்வைமுதல்வாங்கியேநீ
திரமுடனே திண்டுக்கல் கோட்டைநீயாண்டுமே
திருச்சிநகர் தனக்குப்பகுதி
ஈந்துநீவாவென்று ஏற்பாடுசெய்துமே
ஏற்றினார்பொருளையெல்லாம்
இரண்டுவண்டித்தனம் ஏகுமென திருச்சிநகர்
ஏறினார்புரவிமீது
எந்தவேளையெமைகாக்க வேணுமென வூராரும்
ஏதுக்குமஞ்சாதென்று
ஏழைக்குடிகளுக்குப் பொருளிந்துதிருச்சிநகர்
ஏகினார்வாத்தியம்முழங்க.

## விருத்தம்.

விஜயரங்கரசனும் வீரனார்வருகிறதை
வேவுகாரால‌றிந்து
எதிர்கொடுபடைகளுடன் குதிரைமே
லிருப்பவர்க்குகைகொடுத்திறக்கி
புஜபலகள்ளரை யடக்கயிப்புவியினில்
புலியுனைவிடவேறில்லை
பொருளெலாம்வுனதுசம் மதப்படிஏழைக்கும்
புரிகுவாய்ஈசருக்கும்
எஜமானாயிருந்துநீயாளுவாயுலகெலாம்
எனக்குஞ்சுகந்தருவாய்
என்றரசன்போனபின் போர்தினத்தில்நகர்
சோதனைக்கெழுந்தார்வீரர்
நிஜமாகுமிதுநடு ராத்திரியென்றுமே
நித்திரைவிட்டெழுந்து
நிர்ம்மலனாயுத பாணியாய்நகர்சுத்தி
நிலவினில்வருகும்போது.

## கல்லாருக்கும் கற்றவர்க்கும்.

கஸ்துரிகிஷ்டப்பநாய்க்கன் கன்னியெனுங்கௌரி
காளைவீரன்மீதில்மோகங் கன்னியவள்கொண்டு

நித்திரையில்லாமலவள் நினைவதுவும்வேறாய்
நிலவினில்மாளிகையில் நினைத்தேவீரன் தன்னை
உள்ளமதிலெண்ணிகௌரி உலாவுகையிலப்போ
ஒருவனாகவீரன்வர வுத்தமியுங்கண்டு
மாதுமாடிவிட்டிறங்கி மகிழ்ந்தேதாள்பணிந்து
மன்னன்வீரன்கைபிடித்தே மறுமொழிபேசாதீர்
என்றுமாடிதனிலழைத்தே இணங்குமெனக்கேட்க
ஏகபத்னிவிரதனானும் ஏமைவிடுவாயென்ன
நல்லதுபலகாரத்தை நாயகாதள்ளாமல்
நங்கைகொடுப்பதைப்புசித்து நாயகரேசெல்லும்
மங்கையரேதாருமென்று மன்னவனும்பொசித்தாங்
மாதுசாராயந்தந்து மன்னாநல்லதென்றாள்
என்றுகௌரிதர அதனையெலாங்குடித்திவற்கு
ஏறதலைக்குமயக்கம் இட்டாள்சயனத்தை.

**விருத்தம்.**

அப்போதுகௌரிஇந்த ஆணழகன் தன்னுருவை
எப்போதும்பார்த்தே இருக்கப்படந்தனிலே
தப்பிதமணுவளவிலாமல் தையலும்யெழிதினதை
இப்புருடன்பார்க்கவென்று எதிராகமாட்டிவைத்தாள்.

**நடை.**

போதைதெளிந்தேவீரன்தானும்-அந்த
புண்ணியனும்கண் விழித்தாரப்போ
விடியகாலமாச்சுதென்றாள் கௌரி - இவரும்
வெருண்டுபார்க்கத்தன் உருவைகண்டான்
சித்திரமெழுதுவதில் கௌரிநீயும்
சிமாட்டியாகையினால் கேளும்
உனக்குஇடர்வரும்போது தன்னுருவை - நீயும்
ஒழுக்கமுடன் தொழுவாயானால் காளி
உன்மனதிலுள்ளதுயர்போக்கி - அம்பாள்
உண்மையாகக்காப்பாள் சத்தியமென்றே
கௌரியேநான்போக வுத்தாரம்நீயும்
கடுகத்தரவேண்டுமென வீரன்
நல்லதுநீபோய் வாருமென்று - அந்த
நங்கையரும்கைதொழுது நின்றாள்

77

கன்னிகாமாடம் விட்டுவீரன் - வந்து
கள்ளர்பயமில்லாமலே ஊரைக்கார்த்தான்.

## விருத்தம்.

திருச்சினுப்பள்ளியாந் தேசத்திருப்பவர்க்கு
திருடர்பயமில்லையென தெரிந்தார்மதுரையிலே
மறுதேசவீரன்வந்து மட்டடக்கிகள்ள்ர்தனே
பெருமைமிகபெற்றுனென பேசதிருமலைநாய்க்கன்.

## விருத்தம்.

நல்லதுதிருச்சி நகராளுமன்னனெந்தன்
சொல்லதுபோலஅந்த சுத்தவீரனர்தம்மை
அல்லலைநீக்கஇங்கு அனுப்பவேலிகிதம்தன்னல்
நல்லதோர்மொழியினலே நானழைத்திடுவேனென்றன்.

## விருத்தம்.

கார்மேவும்திருச்சிநகர் மலைவாழும்கர்த்தாம்
கன்னிகற் பினிக்குதாயாம்
தாரணியுதரயுமா னவரடியைமறவாத
தனவிஜயரங்கபூபா
பார்துதிமதுரைநகர் கள்ளரால்படுந்துன்பம்
பகரஎன்னல் முடியுமோ
போர்வீரனென்றெரு புண்ணியவானுன்னிடம்
புலியொன்றிருக்கையாலே
வீர்கொள்ளகள்ளக் கிடாக்களைத்தருகிறேன்
வேந்தனே தயைபுரிந்து
கூர்கொண்டவாளுக் கிறைகொள்ளகள்ளர்கள்
குறைவிலா திருக்கிறதுந்தன்
பேர்சொல்லிஎன்னுடு முழுமையும்சுகித்திடும்
பெருமையுமக்கேயதாகும்
சீர்விடும்லிகிதமதைகண்டுன் சேனதிபதியை
நிறுத்தாம லனுப்புவாயே.

## நடை.

சுருளோலைதானெழுதி சொக்கநாதரைத்துதித்து
வேவுகாரன்தன்கைகொடுத்து விட்டார்திருச்சிநகர்

ஊர்கள்வனந்தாண்டி உள்ள ஆற்றின்பதிகடந்து
காடும்மலைதாண்டி கானருவழிகடந்து
திருச்சினப்பள்ளிவந்து ஜெயவிஜயரங்கனிடம்
கொலுமுகம்தன்னில்வந்து கொடுத்தான்சுருளோலை
ஓலையதைவாங்கி உள்ளதைவாசித்துப்பார்த்து
ஆனந்தமாகவேதான். அப்போதுவிஜயரங்கன்
வேவுகாரன் தந்தவோலை வீரன்கையில்தான்கொடுத்து
வாசித்துவோலைதனை மனமகிழ்ந்துவீரப்பன்
உத்தரவளித்தால்தானும் உண்மையாகபோய்வருவேன்
போனல்சீக்கிரத்தில் புண்ணியாவருகுவாயோ
கள்ளரைகருவறுத்து காவலனேயான்வருவேன்
என்றுவீரன்சொல்கையிலே எதுசொல்வான் விஜயரங்கன்
தாசியர்க்குபொருளாசை தானென்றுசொல்வதுபோல்
வீரர்க்குபோரிலாசை வென்றமொழியுன்னல்கண்டேன்
போகமாட்டாயென்றுநீயும் புண்ணியனேநானினைத்தேன்
உன்னைவிட்டுபிரியஎந்தன் உள்ளம்துணியவில்லை
ஆத்தாள்மீனட்சியையும் அப்பன்சொக்கநாதரையும்
கண்டால்நீவருவாயென்று கருத்தில்நினைக்கவில்லை
என்றுசொல்லஅரசனுமே எதுசொல்வான்வீரப்பன்
கள்ளரைகருவறுத்து கடுகவேவருவேனிங்கே
என்றுசொல்லும்வீரனுக்கு எதுசொல்வான்விஜயரங்கன்.

## விருத்தம்.

திங்கட்கிழமையன்றுதினம் நன்ருயிருப்பதினல்
மங்களமாய்மதுரைபோக மந்திரியேநீகேளும்
இங்கிருந்திவர்கள்போக எதுங்குறையில்லாமலே
பொங்கமுடன்ஆள்கள்சாமான்போதுமானதுதயார்நீசெய்வாய்.

## நடை.

என்றரசன்சொல்லியபின் எழுந்ததேசபைகலைந்து
வீரரும்விடுதிசென்றே விரும்பியெண்ணங்கொண்டாரப்போ
தெற்கேகாம்போவதினல் தேவிகுணமறியவேணும்
என்றேயிவரெண்ணங்கொண்டு எகினருற்றங்கரைக்கு
வாழைதோப்பில்சென்றிவரும் ஆடாயிங்குகாவலென்ன
கண்ணிரண்டுந்தெரியாத காவல்காரனையாவென

ஈனுதவாழையொன்று இளவாழைதாடாவென
அந்தகனுச்சுதேனுன் அளிக்கயென்னுலாகாதென்முன்
என்றுஇவன்சொல்லையிலே யேதுசொல்வார் துரைவீரன்
கண்ணுனக்குநான் தருவேன் வாழைக்கண் தாடாவென்றிவரும்
அப்படியேநல்லதென்று அடிதொழுதானந்தகனும்
காளியைத்தொழுதேவீரன் கண்ணினில்விபூதிபோட
காவலன்கண்தெரிந்திடவே களிப்புடனடிதொழுது
செவ்வாழைக்கன்றொன்று செழிப்பானதாய்த்தோண்டி
எதிரில்வைத்தடிபணிந்து எந்தலேகாக்கவேணுமென
அம்பாவுந்தனைக்காத்து ஆதரிப்பாளென்றுரைத்து
வாழைக்கன்றெடுத்து அவன்ஆற்றுநீரில்வந்துவீரன்
கால்கைகள்சுத்திசெய்து காளியரைத்தான்நினைந்து
பகவதிஇவ்வாழையை பசுங்கன்றுக்கித்தருவாய்
நீரையள்ளிமேல்தெளித்து நினைக்கையிலேவாழைக்கன்று
பசுங்கன்றைபோலஅது பகவதியருளாலாயிற்று.
கழுத்தில்கயிற்றைக்கட்டி கன்றைவீட்டிற்குக்கொடுபோய்
தாழ்வாரத்தில்கட்டியவர் தையல்பொம்மியையழைத்தார்
என்னசுவாமிஎன்றுவந்து இளங்கொடியாளடிபணிந்தாள்.

## விருத்தம்.

அன்னமேகேளாய்நானும் அநேகனாளாயிற்றிந்த
சின்னதோர்பசுவின்மாமிசம் சின்னன்வீட்டினில்யான்தின்றேன்
இன்னிமிஷந்தன்னில் இக்கன்றின்கழுத்தறுத்து
முன்னதாய்ஈரல்மூளை முழுமாம்சம்வெவ்வேர்செய்யே.

## கும்மி.

கணவன்சொல்லையில் பொம்மியரும்-மிக
காதலோடுகத்தி தானெடுத்து
பிணக்குமனதில் சற்றுமில்லாமல்-இளம்
பேதையுங்கன்றின் கழுத்தறுத்தாள்.

மூளைதனையிவள் தான்வறுத்து-இரு
முழிகளிரண்டையும் தான்பிறட்டி
காலைநறுக்கியே சூப்புசெய்து-கொஞ்சம்
கறிகளைகுழம்பாக வேசெய்தாள்.

ஈரலில்தேங்காய் முந்திரிபருப்பிட்டு-தனி
இதைவேறேசிவக்கத்தான்வறுத்து
வேரவேகொஞ்சம் கொந்தியே-யதனை
விட்டனள்புட்டதை போலநெய்யில்.

ஏலம்கிறாம்பு கசகசாதேங்காய்
எலுமிச்சம்சோம்பு உடைத்தகடலை
நீலவிழியாளும் தயிர்சேர்த்து-மாமிசம்
நெய்சேர்த்துகுழம்பாக வேசெய்தாள்.

ஒருநாழிகையில் சமைத்துவைத்து-பொம்மி
வொழுக்கத்துடன் கணவன்தனையழைத்து
வருகுவாய்சாப்பிட யென்ன-வீரதுரை
ஆனந்தத்தோடு ஸ்நானஞ்செய்து.

பூசைமுடித்து வீரன்உட்கார - மாது
போட்டாள் வாழையிலையதனை
ஆசையாக அரியல் பொரியலுடனே - மிக
அது அதுகளை வெவ்வேறாய் படைத்தாள்.

மாதரசே யென்னுடன் வுட்கார்ந்து - நீயும்
மாட்டிறச்சியைமுன்னால் புசித்தால்
பேதமின்றிநானும் புசிப்பேன் - என்று
பெண்மயிலென்னவே பொம்மியவள்.

பத்தாவுடனிவள் வுட்கார்ந்து - இந்த
பதிவிரதையாளும் புசிக்கையிலே
கைத்தல்புளித்தல் காய் கரி-பதார்த்தமாய்
கண்டனள் சைவபதார்த்தமதாய்

மாட்டிறச்சி வாழைக்காய் தண்டுபூ-வான
மன்னாஇவ்வதிசயம் புகலுமென
வாட்டங்கொள்ளாதே வாழையுன்கண்ணுக்கு - ஓர்
மாட்டின்கண்ணாக்கினேன் பெண்ணேயென.

## விருத்தம்.

மதுரைநகராளுமன்னன் மட்டடக்க கள்ளர்தன்னை
இதுசமயம்வந்தாலுப காரமெனயெனக்குவோலை
பெதும்பையேதாதுவன்தந்தான் பெற்றிடமீனாட்சிபதம்
பதுமநாபன்துதி மகேசரடிதனைதொழுவதற்கே.

## விருத்தம்.

என்றேவீரன்சொல்லேயிலே ஏதுசொல்வாள்பொம்மியவள்
மன்னவாமீனாட்சிசொக்கர் மலரடியைத்தொழவேயானும்
உன்னுடன்வருவேனென்ன வுத்தமியேவாருமென்று
மன்னனும்விஜயரங்கன் மதுரைக்கோலே எழுதலானான்.

## விருத்தம்.

மாதுருமதுரைநக ருரைகௌரிமனோன்மணி
மகிடசங்காரி வாலே
மாதுசட்கோணமதி லுரைகின்றதிரிபுரை
மரகதமீனாட்சி சொக்கர்
பாதுகாத்திடப்பூ மண்டலமெலா மாண்டிடும்
பாக்கியதிருமலே ராஜரே
பகலவன்வழிகாசி மன்னனிட்மைந்தனிவர்
பகைத்தவர் மார்புக்காளி
தீதுசெய்வோர்குலம் தீபோட்டெரிப்பவர்
தீரர்சூராதி சூரர்
தினதினமவரிடம் வெகுமரியாதையாய்
திட்டமுட னிருப்பாய்தவறில்
ஏதுஉன்னுலகம திருக்குமென யெண்ணிலேன்
இடையூறு செய்யுங்கள்ளர்
வந்தலேவொழிந்தபின் இவ்விடம் வீரரை
வேந்தனேயனுப்பி வைப்பீர்.

## நடை.

என்றெழுதிவோலேதனை ஏகவிட்டான்மதுரைநகர்
பட்டணமலங்கரித்து பலவிதவாத்தியமுடன்
முத்துபல்லக்கின்மீது மொய்க்குழல்பொம்மியரும்
ஆடைஅலங்கரித்து ஆபரணந்தான்பூண்டு
வீராயுதபாணியாய் வெளிதனிலேவந்தாரப்போ
பொம்மியுமலங்கரித்து பொற்கொடிபோல்வந்துநின்றாள்
தாதியர்கள்சூழ்ந்திடவே தையலும்பல்லக்கேற
வீரரும்குதிரையின்மேல் ஏறிநரப்பொழுது
வாத்தியங்கள்தான்முழங்க வந்தாரிராசனிடம்
அரசனுமிவர்களுக்கு ஆசீர்வாதங்கள்செய்து

சிக்கிரத்தில்வாருமென்று சேனையுடன்செல்லுமென
பட்டணத்தோர்சூழ்ந்துவர பலவாத்தியங்கள்முழங்க
தாயுமானசுவாமியை தான்வணங்கிதெண்டனிட்டு
ஆற்றைக்கடந்தவரும் அப்புலிங்கம்தன்னைக்காண
திருவானைக்காவல்சென்று தேவதேவனைவணங்கி
ஸ்ரீரங்கம்சென்றவரும் ஸ்ரீராமாவெனத்தொழுது
பட்டணத்திலுள்ளவரை படைகளையும்தானிறுத்தி
சாலைவழிக்கடந்து சதுரக்கள்ளிவனத்தைவிட்டு
விராலிமலைக்குசென்று வேலவரைத்தான்பணிந்து
மேலூர்துவரங்குரிச்சி வழியாகசென்றவரும்
லெக்கய்யநாய்க்கனிடம் லேசாவொருநாளில்தங்கி
அழகர்மலைவழிநடந்து அடவிகள்கடந்துஅப்பால்
மலைவளங்களெலாம்பார்த்து மலையருவிக்கேகியவர்
அஞ்சனைதேவிமைந்தன் அனுமந்தர்தீர்த்தமாடி
பதினெட்டாம்படியேறி பத்தியுடனேதுதிப்பார்
அழகர்மலையதனை அசையாமல்காக்குமெங்கள்
கார்மேகவண்ணமுள்ள கருப்பண்ணசாமியென்னை
முன்னின்றுகாத்தருளும் மூர்க்கமுள்ளதேவதையே
பாதுகாத்தருள்உந்தன்பாதம் பணிந்தேன்சுவாமி
கள்ளரைகருவறுக்க கர்த்தாவரந்தரவேணும்
அடிபணிந்தப்புரஞ்சென்று அழகரைவணங்கியவர்
இரட்டைமலைவழியாக இவர்வரும்வதந்திகேட்டு
இரட்டைமலையதனில்இருக்கும் நாலாயிரங்கள்ளர்
கூட்டம்கூட்டிஎல்லோரும் கொல்லவேணும்தன்னை
கல்கோட்டைகள்ளர்தனை கருவறுத்தபாவிவாரான்
சண்டாளனைக்கொல்லவேணும் ஜாக்கிரதையாயிருங்களென்று
ஒன்றுகூடியங்கவர்கள் உக்கிரமுடன்காத்திருந்தார்.

வேறு நடை.

வீரனும்மலையருகில்சென்றேதான்
விளங்கவேகூடாரம்போட்டார்கள்
பொம்மியும்கூடாரந்தனிலிருந்தாள்
புரவிவிட்டிரங்கி வீரன்
சமையல்செய்தார்களிருந்தார்கள்
சாமியும்அம்மலையைபார்ப்போமென்று

கள்ளர்களிருக்குமூரைவீரன்
காசிமன்னன்பார்ப்போமென்றுசென்றூர்
தனியாகசெல்லுகையிலப்போ
சாராயகடைவிற்கும்துலுக்கச்சி
அமீர்பியென்னும்மங்தகிழவி
அழைத்துவீரப்பனழகைப்பார்த்து
கண்ணே வுன்னேகொல்லயின்றுகள்ளர்
காத்திருக்கிறூர்கள்நாலாயிரம்பேர்
சாராயம்தருவேன்நீசாப்பிட்டு
சாமிவந்தவழிவோடிபிழையென்றூள்
ஆர்பெற்றபுத்திரனேநீயும்
அழகரைபோல்விளங்குதுந்தன்வடிவு
எவர்பெற்றபுத்திரனேநீயும்
என்பேச்சைதள்ளாமல்காப்பாய்நீயும்
பூபியவள்சொல்லேயில்வீரன்
புன்சிரிப்புகொண்டுதலையையசைத்து
நல்லதுசாராயம்தாரும்பாட்டி
நானிப்படியேஒடிப்போறேனென்று
சாப்பிடுமென்றுபீபிதரவும்
சாராயம்குடித்தபின்புசாமி
எங்கிருக்கிறூர்கள்கள்ளர்பாட்டி
எனக்கறியசொல்லுமெனகேட்க
இதோயிருக்கும் மலையடிவாரத்தில்
இருக்கிறூர்கள் சாராயம்குடித்து
பாட்டியேநான் போய்வாரேனென்று
பகவானும் காளியனைநினைக்க
அம்பாளும்வந்தாளிவர் பணிந்து
ஆதரிப்பாயென்னை கொல்லவேகள்ளர்
இருக்கிறூர்களென்று சொல்லவீரன்
ஏதுக்குமஞ்சாதே யென்றூள்காளி.

## விருத்தம்.

அப்பனேவீராநான்தான் அளிசுருள்கத்தியால்நீ
இப்பெருங்கள்ளர்தன்னை இக்ஷணமேவதைப்பாய்

செப்பியேகாளிதந்து சென்றனள்வீரர்தானும்
இப்படிகள்ளர்கூட்டம் இருப்பிடந்தேடிசென்ருர்.

## விருத்தம்.

கள்ளர்களெல்லால்கூடி கள்சாராயங்குடித்து
தள்ளவேமயக்கமேறி தடிகத்திகெவுண்டைகொண்டே
துள்ளியேவீரர்தானும் தோகையுடன்வந்தானென்று
கொள்ளைநாமடிப்போமென்று கும்புகூடியேவருவார்.

## நையாண்டி.

கள்ளர்களெல்லாம்கூடி அவரவர்கள்-கைதனில்
கழிகத்திகவுண்டையும் கொண்டு
துள்ளுகடாக்கள்போல்குதித்து-வீரனை
துரத்தியடிப்போமென்று மனதிலெண்ணி. (கள்)

வந்துசூழ்ந்துகொண்டார்வீரனை - அப்போது
அம்பாள்கொடுத்த சுருள்கத்தியைக்கொண்டு
முந்தியேபடையில்புகுந்து - கள்ளரை
முன்பின்பாராமலிவர் விசுவதைக்கண்டு (கள்)

கடிகத்திகவுண்டுகல்லால் - கள்ளர்கள்
தாக்கயிவர்க்குவெகு கோபம்பிறந்து
அடிக்குமடிகளை தட்டியே - வீரரும்
அரைநொடியினி லவராவிகள் தன்னை. (கள்)

எமபுரத்துக்கனுப்பியே - இவரும்
எறிட்டுபார்க்கும்போது எதிர்த்தமலையில்
குமுருதல்போல்கூவியே-கையதனில்
கூடைமுறம்வுலக்கை கொண்டுமேவந்து. (கள்)

கள்ளரிடபெண்சாதிமார் - வெகு
காந்தாளமாய்வருவதை கண்ணினல்பார்த்து
மெள்ளவேஅங்கிவர்சென்று-கள்ளச்சிகளை
மேவபுருஷருடன் கூவவுமில்லாமல். (கள்)

ஆண்மலைபெண்மலை இதுவென்று-வீரன்
அடித்துக்கள்ளர்களின் பொருளையெடுத்து

வேண்டும்ஏழைகட்களித்து-மீந்தப்பொருளை
வேவுகாரராலெடுத்து பூபிக்களித்து. (கள்)

போய்வாரென்மாட்டியென்று-பூபியுடன்
பொம்மியிருக்கும் கூடாரத்திற்சென்று
பொய்கையில்நீராடி - பொம்மிக்கு
போர்நடந்தவித மனைத்தும்-சொல்லி. (கள்)

## விருத்தம்.

வரும்வழி தன்னிலேஅந்தந்த ஊரார்கள்வந்துமேதான்
உருக்கமுடன்உபசரித்துண்மையாக கள்ளர் தம்மால்
இருக்குமாடையாபரணம் இல்லினுள்ள தானியங்கள்
வெருட்டியெடுத்தேகுவதால் ஏழையானோம்மன்னாவென்றார்.

## நடை.

குடிகளழும்கோரமதை கண்டுமே
சடுதியிலுங்கள் சங்கடம்தீர்க்கிறேன்
துடிக்கும்கள்ளரைத் துண்டுதுண்டாக்குகிறேன்
கொடிபூண்டில்லாமல் கொல்வேனுங்களெதிர்
என்றுசொல்லி ஏழைகுடிகளுக்கு
சென்றார்நாமக் கல்பாதைவழியாக
மன்னுமணப்பாரை கடந்தபின்
சென்றார்சாவடி சத்திரங்களில்தங்கி
திருப்பரங்குன்றமலைதனை கண்டிவர்
வருத்தங்கள்தீரவடிவேலரைக்காண
வருகுவாய்பெண்ணேவானவர்கோனை நாம்
திருத்தமாய்த்தரிசனைசெய்யவருவாய்

முருகாவுனைத்

திருப்பரங்குன்றமதனினுரைகின்றதேவர்தேவனே-முருகா-என்
வருத்தம்தீரவுன்னடிதொழவேவந்தேனே-முருகா
அறுமறைதனில்நடமிடுகின்றஆறுமுகத்தையாமுருகா-வுனை
அருததியுந்தனடிதொழவே அன்புவைப்பாய்முருகா
வள்ளிதெய்வயானையுடன் அடியேன்முன்பாகமுருகா-நீயும்
புள்ளிமயிலுடன்தரிசனம்தரப்போற்றினேன்முருகா

அரசன்வயிற்றில்பிறந்துயானும்ஆளாமலுலகை-முருகா-நான்
அலைச்சல்பட என்தலையில்எழிதியமைத்தாயோ-முருகா
எத்தனைநாளுனைபிரிந்துநான் இப்புவிதனிலே-முருகா-அடியேன்
பித்தனைபோலலைவதுனக்குபெருமையோ-முருகா [இந்த
அல்லும்பகலுமுன்னடிதனையான் அன்புடன் துதிக்க-முருகா-
புல்லனுக்கருள்புரியபோற்றினேனே முருகா.

## விருத்தம்.

திருப்பரங்குன்ரமதை தரிசித்துயாவரும்
திரும்பியேவைகையதனில்
இருக்கவேகூடாரமடித்தவர் இதயத்தி
லிருத்தியேசொக்கேசரை
திருமலைராஜரிடம் தான்வந்தசெய்தியை
தெரிவிக்கவே அரசனும்
வருவித்துமந்திரியை ஆனந்தம்கொண்டவர்
அறிவிப்பான் யாவருக்கும்.

## விருத்தம்.

மந்திரிசாம்பசிவ ஐயரே இம்மதுரை
மறையவர் மற்றவர்க்கும்
மகரதோரணங்கள்முதல்கட்டியே அங்கங்கு
மஹாவினோதமாயமைத்து
இந்தநகர்தனிலுள்ள தாசிகளலங்காரமாய்
யாவரும் இங்குவரவே
ஈசராலயங்கள்முதல்இருக்கும் கோயில்களெலாம்
இட்டுதீபங்கள் பூசை
வந்திடவைகைக்குவர எனச்சொல்லியே
யலங்காரமாகி இவரும்
வாத்தியங்கள்கோஷ்டிக்க சதுரங்கசேனையுடன்
வந்தனர் வைகையாற்றில்
சந்தோஷமாகவே வீரரையழைத்துமே
சகலவாத்தியம் முழங்க
சங்கரிமீனாக்ஷி சொக்கரைவணங்கியே
சார்ந்தார் அரண்மனைக்கே.

87

## விருத்தம்.

அரசனுடன்கொலுசமுகம் யாவரும்வந்தனர்
அந்தர்ப்புரம் பொம்மிசென்றாள்
தர்ணியையாளவே இளவரசுபட்டமும்
தரித்துநீ இன்றுமுதலாய்
வரவுமுதல்செலவுகள்யாவற்றும் பார்த்துக்கொள்
வகுத்திட்டேன் இன்றுமுதலாய்
சுரர்முதல்மதுரைவீரப்பனென வுன்பேரும்
ஜெகமெலாம் சொல்லவேண்டும்.

## நடை-ஆனந்தமே.

இளவரசுபட்டம்கட்டி அரசனும்தான் - இவர்க்கு
இருக்கவேமேலண்டை யரமனையதை
ஏற்பாடுசெய்தான்பின்பு அரசுகலைந்து - இவர்கள்
எல்லோரும்விடுதிசென்றார் மறுநாளதனில்
காலைக்கடன்முடித்துவீரன் தானும் - கசானு
கணக்கனையழைத்து கணக்கைபார்க்கவேயானர்
பதினெட்டுவருஷபாக்கி ஜமீன்மிராசுதார் - அவர்க்கு
பைசல்செய்யவேணுமென்று வோலையெழுதி
பாக்கிமுதல்வசூல்செய்து கஜானாவில்சேர்த்து - இருக்கும்
பாராக்கார்படைகளையும் வீரனழைத்து
குதிரைபடையானைபடைகாளால் படையும் - அவர்களை
கொற்றவன்சீர்திருத்தியே தலையாரிமாரை
பகல்பாரா இராப்பாராபகுத்து வைத்திவர் - காவலாக
படைகளைமூலைக்குமூலை பந்தோபஸ்தாக
அணியணியாய் அங்குஅங்குகாக்க வைத்திவர் - திருடி
அகப்பட்டகள்ளர்களை முக்கோணங்கட்டி
கட்டியடித்தவர்களை காவலில்வைத்து - அதிலும்
கனத்தகுற்றம்செய்தவரை கழுவினிலேற்றிதி
பகலிலுமிராவிலும் வீரனுந்தானே - சென்று
படைகளிடம்நகர்சோதனை பார்த்திவரும்
இவ்விதமாகஇவர் அரசுபுரிந்து - ஊரில்
எங்குங்கள்ளர்பயமில்லாம லொழிக்க
மதுரையிலிருப்போரும் மற்றவர்களும் - குடிகள்
மகிழ்ச்சியாய் மதுரைவீரனைபோற்றினர்.

## விருத்தம்.

பகுதிவரிபணமுதற் பாக்கிகளிலாமலே
பைசலாய் கணக்குபார்த்து
பணமெலாம்வாங்கியே கஜானுநிரப்பிதான்
பற்றுவரவுகள் எழுதி
தருமானசெலவுகள் சிவாலயங்களுக்கும்
தர்மசதாவர்த்தி சத்திரம்
தருணமதறிந்துசமயோசிதப் பிரகாரம்
தான்நேரில் பார்த்தறிந்து
தருமிந்தநீதியெனஎவர்களும் புகழ்ந்திடச்
சற்றேனும் பிசகில்லாமல்
தானஎக்கியயோமயாகங்கள் செய்திட
தனம்மறையோர்க் களித்து
வெகுஏழைகட்காடை எருதுகள்உழவுசெய
எந்தனுமுதவிசெய்து
ஏழைகளெலாம்மஹாராஜராய் மகிழுற்று
இருந்தார்கள் மதுரைமுழுதும்.

## விருத்தம்.

மாதுமையாள்நகர்முழுவதும் மகிழ்ச்சியாய்குடிகள்வாழ்ந்தார்
தீதுசெயும்கள்ளர்எல்லாம் திகிலடைந்துஒன்றுகூடி
ஏதுசெய்வோம்என்று கள்ளர்இருக்குமிடங்களுக்கெல்லாம்
தூதுவனுல்வோலையனுப்பி ஒருமித்துகூடினர்கள்.

## நடை.

கள்ளர்களெல்லாம்கூடி கலந்தர்மலையடிவாரத்தில்
எல்லோரும்கூடியேதான் இருபதினுயிரம்பேர்
காசிராஜன்புத்திரனும் காளைவீரனென்றொருவன்
விஜயரங்கராஜனிடம் வேலைக்கமர்ந்தவனும்
திண்டுக்கல்கோட்டைக்கள்ளர் திடசாலிஆருயிரம்பேர்
அனைவரையும்கொன்றுமே அழித்தவனை இவ்விடத்தில்
நம்மைஎல்லாம்பேரில்லாமல் நாசப்படுத்தஎண்ணி
திருமலைநாய்க்கனுக் திருமுகமெழுதியேதான்
வரவழைக்கவீரனவன் வருமந்தவழிதனிலே
இரட்டமலைக்கள்ளரையும் யிருக்கும்பெண்டுபிள்ளையுடன்

அனைவரையும்கொன்றந்த ஆங்காரிவந்தேதான்
நம்மகுலத்தாரையெல்லாம் நாசப்படுத்துகிறன்
கள்ளசாதியென்றுலவன் கழுவினிலேற்றுவானும்
முக்கோணம்கட்டி அவன் முதுகிலடிக்கிறுனும்
சிறைதனில்வைத்தே அவன் சித்திரவதைசெய்கிறுனும்
பராமுகமாய்நாமிருந்தால் படைகளுடன்வந்துகொல்வான்
வாராதகள்ளருக்கும் வரைந்தாரவர்களோலை
வோலைகண்டநாழிகைக்கு ஓடிவந்தார்கள்ளரெல்லாம்
அவரவர்கள்கையதனில் ஆயுதம்தயார்செய்யுங்கள்
ஆதிவாரமிரவில்சென்று அழிக்கவேணும்மதுரைதன்னை
வீரனைகொன்றுநாமும் விருந்துசெய்யவேணுமென்று
ஏற்பாடுசெய்தேயிவர் இருந்தார்மலையடியில்

விருத்தம்.

சொக்கலிங்கப்பிள்ளையென்னும் சொல்தவறுவேளாளன்
கொக்கரிக்கும்கள்ளரிட கூட்டத்துளவறிந்து
பக்குவமாகவந்து பணிந்தேமதுரைவீரன்தனை
நெக்குவிட்டுளம்பூரிக்க நிகழ்த்துவனுளவதனை.

விருத்தம்.

கள்ளரிருபதினயிரம்பேர் கலந்தார்மலையருகில்கூடி
கொள்ளையிடமதுரைதன்னை குறித்தாராதிவாரந்தன்னை
துள்ளிளங்கிருப்பவரும் துணைவாகூடியிருக்கிறுர்கள்
கள்ளமில்லாமலென்னை காக்கவேணுமென்றுரைத்தான்.

நடை.

வேளாளனடிபணிந்து விபரமுடன்சொல்லுகிறன்
கலந்தர்மலைக்குமுன்னே காணுதுவெள்ளிகுன்றம்
அடிவாரம்தன்னில் அடர்ந்தபெருந்தோப்புண்டு
இருபதினயிரம்கள்ளர் இருக்கிறுர்கும்புகூடி
உம்மையுங்கொன்றேஇந்த வூரையுங்கொள்ளையிடுவதற்கு
ஆதிவாரமிரவில்வர அய்யாவேஇருக்கிறுர்கள்
என்றுசொல்லமதுரைவீரன் யிக்ஷணம்சேனபதிநீ
படைகளைதயார்செய்யென்று பகவானும்வீடுசென்று
போர்க்கோலம்கொண்டுவீரன் பொம்மியுடன்செலவுபெற்று
திருமலைநாய்க்கரிடம் தெரிவித்துப்புறப்பட்டார்

பஞ்சகல்யாணியேறி படைமுகத்தில்வந்துநின்றார்
வீரமாங்காளிதன்னை வீரப்பன்துதிசெய்தே
ஆலவாசொக்கலிங்க அப்பன்மீனாக்ஷியையும்
வணங்கிவாத்தியமுடனே வருகிறார்படையுடனே
வைகைநதிகடந்தே வந்தார்திருப்பாலையூர்
அசுவத்தைவிட்டிறங்கி அரன்கோயிலுட்புகுந்து
ஈஸ்வரியீசரையும் இருகையினாலேபோற்றி
புரவியின்மீதேறியவர் புறப்பட்டார்தண்டுடனே
வீரன்படைகள்முகம் விசனமாயிருக்கிறதை
முகக்குறிப்பையும் கண்டுமுத்துவீரனே துரைப்பான்
எதற்காகவிசனமுற்று இருக்கிறீர்கள்சொல்லுமென
வீரப்பனடிதொழுது விளம்புவார்சேனைகளும்
கலந்தர்மலைதன்னில்வாழும் கள்ளர்பொல்லாதவர்கள்
அவர்களைஜெயிப்பதற்கு ஆராலுமாகாது
நமதுபட்டணம்சென்று நாலுபக்கம்சூழ்ந்திருப்போம்
கள்வர்கள்அங்குவந்தால் கண்டதுண்டம்செய்திடுவோம்
வீரப்பன்தன்படைகள் விளம்பினதைக்கேட்டுநகைத்து
நல்லவார்த்தைசொன்னீர்கள் நான்போய்ஜெயித்துவாரேன்
என்றுவீரப்பன்சொல்ல எண்ணமெல்லாம்எண்ணி
உயிர்மேலாசையைவிட்டு வொருமிக்கநடந்தார்கள்
வெள்ளிமலையருகே வீரனும்போய்ச்சேர்ந்தான்
கண்ணுக்கெட்டினதுலைவில் காணுதுபெருங்கூட்டம்
நமதுபடைவூளையென்று நன்றாய்மனதிலெண்ணி
குதிரையைதட்டியே கொற்றவனும்போய்புகுந்தான்
வொண்டிகுதிரையுடன் வொருவனாகவருகிறதை
மதுரைவீரனிவன்தானென மடக்கிக்கொல்லவேண்டுமென்று
கவண்டுபட்டாக்கத்தி கட்டாரியெரிசட்டியுடன்
கள்ளர்களெல்லாம்கூடி காவலன்மேலேதிரும்பி

## விருத்தம்.

கண்ணிலானுக்குக்கண் ணளித்ததுபோல்நமக்கு
எண்ணியேயிருந்ததெய்வம் எதிர்வந்தார்ப்போலாய்
புண்ணில்கோலிட்டாற்போய் புறப்பட்டுவருவோன்தன்னை
கொண்ணுநாம்மதுரை ஊரை கொள்ளையேயடிப்போமென்றார்.

நடை.

## கல்லாருக்கும் கற்றவர்க்கும்.

கள்ளர்கள்வருங்கூட்டத்தைகண்டு காசித்துரைமகனும்
கண்களிரண்டும்சிவந்துகுதிரையை காலினால்தட்டிவிட்டான்
கையதனில்கத்தியைஎடுத்துமே கள்ளர்கும்பில்புகுந்து
கண்டதுண்டமாகவெட்டும்போது அந்தகள்ளர்களாற்பரித்து
அவரவர்கள்ஆவியின்மீதினி லாசைகள்வையாமலே
அநேகஆயுதங்களால்வீரனை அதட்டியேவெட்டுகிறார்
எதிரில்வரும்அம்புசட்டி கத்திகளை எம்பெருமான் தட்டியே
ஏகவேஎமனுலகமெல்லோரும் இட்சணம்போங்களென்றான்
ஆட்டுக்கடாவைமடக்குவதைபோல் அப்பெருங்கள்ளர்களை
அப்புறமிப்புறமோடவொட்டாமலே அறுத்தான்கழுத்துகளை
கால்வேறுகைவேறு கண்டதுண்டமாககள்ளருடலதனை
காசிமன்னன்சண்டையைசொல்ல ஆதிசேடனாலாகாது
கள்ளர்களில்சிலதுபேர் தப்பித்து கலந்தர்மலையடைந்தார்
துள்ளியகள்ளர்கள்யாவுமொழியவே துரைகுதிரையைதிருப்பி
தன்னுடையபடையிருக்குமிடம்வர தன்படைகள்பார்த்து
இன்னம்நமதுயிர் இருப்பதேதென்று ஏங்கித்திகில்கொண்டார்
படைகள் இருக்கும்முகக்குறிப்பைகண்டு பயந்திருக்கிறாரென்று
கொடையுடைதிருமலைநாய்க்கனே நீர் கவுரத்தைகாப்பாற்றுவீர்.

### விருத்தம்.

அண்ணலார்உப்பையுண்டு ஆபத்துக்குதவாமல்
ஆவிமேலாசை வைத்தீர்
சண்டையிலிறப்போர்க்கு உண்டுவீரசொர்க்கமெனும்
தனுர்வேத மறிந்திவீர்நீர்
குண்டுணிக்கலக்கமேன்கொள்ளுநீருங்கள்மேல்
குற்றம்நான் நினைக்கவில்லை
எண்ணிடிலரசன்தப்பேயொழிய யாவரும்
இதயத்தில்மகிழ்ச்சிகொள்வீர்.

### விருத்தம்.

என்னடாசொக்கலிங்க காராளனே இன்னம்
இருக்கிறார்களோ கள்ளர்கள்
பன்னடாவுண்டெனிலவர் குடியைவேரோடும்
பற்றியெறிப்பேனென

மன்னவா அக்கலந்தர்மலைதன்னிலே
மடிந்தகள்ளர்க்கு எசமான்
இன்னம்சிலகள்ளரோடிருக்கிருரென்னவே
வந்தனுமேதுரைப்பார்.

## விருத்தம்.

படைகளேபயமது கொள்ளாதேஉங்களை
பாதுகார்ப்பேன் நீங்களும்
புடைசூழ்ந்து அம்மலைதனிலுள்ளகள்ளரை
போக்குவீர் யென்றுரைக்க
உடைத்து அம்மலைதனை யெரிப்பமெனசேனை
வுக்கிரமுட னேர்ப்பரித்து
படைகளம்மலைதனை நாற்பக்கம்சூழ்ந்ததை
பார்த்து அம்மலைகள்ளரை.

## நடை.

கலந்தர்மலைதன்னில்வாழும் கள்ளர்வீரர்படையைபார்த்து
அல்லவர்க்கும்எஜமானும் அழகுகருப்பண்ணனென்போன்
அம்மலைதனில்வாழும் அறுநூற்றெழுபதுபேர்
எல்லோரையும்தானழைத்து ஏதுசொல்வானழகுக்கருப்பன்
சுற்றிலும்சேனையோடு சூழ்ந்துகொண்டான்மதுரைவீரன்
எல்லோரும்வொன்ருய்சாக எழுதினனேபிர்மதேவன்
ஓடிப்பிழைப்போமென்ருல் ஓடவும்முடியாதிப்போ
வேறுகதியில்லைஇப்போ வெட்டிஜெயம்கொள்ளவேணும்
கத்தியீட்டிபல்லியமுடன்கட்டாரிகவுண்டுடனே
தடிகளுடன்புறப்படென்று தானுமாயுதபாணியாக
எதிர்த்துப்போர்செய்யும்போது இளைத்தார்வீரன்படைகளெல்லாம்
கண்டாரேகாசிதுரை கண்களிரண்டும்சிவந்து
தாண்டினர்புரவியை தோத்தரித்தார்காளிதன்னை
கைதனிலேவாளெடுத்து கண்டதுண்டமாகவெட்டி
காக்காயைப்போலே கத்திகதறுதுகள்ளர்படை
திருமலைராஜன்படைகள் தீரமாகவெட்டுகிருர்
அழகுகருப்பன்படைகள் யாவருமொழிந்தபின்பு
சோழியவேளாளன் சொக்கலிங்கனையழைத்து
இன்னமுண்டோகள்ளர்கள்தான் இருந்தால்வுரைப்பாயென்று

என்றுகேட்கவீரனவன் ஏதுசொல்வான்சொக்கலிங்கன்
அனைவருந்தானிறந்தார் அவர்களதுபொக்கிஷங்கள்
இருக்குமிடங்களெல்லாம் எனக்குத்தெரியுமென்றான்.

## விருத்தம்.

கள்ளர்களோடுநீரும் கலந்துமேதிருடிஅந்த
உள்ளுளவறிந்தாய் அல்லால்வுனக்குஅதெப்படித்தெரியும்
உள்ளதுசொல்லாயென்னஉரைப்பான்சொக்கலிங்கன்
வள்ளலேவுரைப்பேனந்த வகையினைக்கேளுமென்றே

## வேறுநடை.

கள்ளர்கள்கொள்ளையாடி வரும்போது
கதிர்பயிர்க்குநீர்கட்டயான் சென்றேன்யான்
கொள்ளையாடியமூட்டை யென்தலைமீதில்
கொற்றவாவைத்துதைத்தார்கள் தூக்கென்று
சாராயக்கள்வெறியினால் கள்ளர்கள்
சகலவைப்பும்என்னெதிரில் திறக்கவே
பூராயமாயவையெல்லாம் போய்பார்த்தேன்
புண்ணியாவெனபுன் சிரிப்புடன்வீரன்
வாருமென்றழைத்து வணக்கமாக
அண்ணலேஇக்கெபிதான் பொன்னகைவைப்பு
பாருமிக்கெபிவெள்ளியில் சேர்ந்தது
பாத்திரம்பித்தளைசயமிக்கெபி யென்ன

## நடை.

படைகளைக்கூப்பிட்டுஇந்த பணம்நகையையெடுமென்ன
பொருள்களையெல்லாம் யெடுத்துபோட்டார்கள்மலைபோல
கள்ளரிடமாட்டுவண்டி கட்டிவரச்சொல்லவீரன்
இருபத்துஎழுவண்டி இட்டார்பித்தளைசாமான்
சயம்ஒன்பதுவண்டியில் இற்றினார்சேனைகள்தான
பொன்னகையிரண்டுவண்டி போட்டார்நிறையவேதான்
வெள்ளிநகைரூபாயும் மிதக்கமூன்றுவண்டிகொண்டு
தன்னுடையசேனைதனை தான்சாப்பிடச்சொல்லவீரன்
பூசைமுடித்துவந்து புண்ணியனும்புசித்தபின்பு
பயணபேரியடித்துபடைகளுடன்வருகிறாரே
காடுவனந்தாண்டிவீர கர்த்தனும்வைகைக்குவந்தார்

திருமலைராஜனறிந்து தீவிரமாயெதிரேசென்று
ஊரை அலங்கரித்து உள்ளத்தில்சந்தோஷங்கொண்டு
எதிர்கொண்டழைத்துவந்தே எல்லோருந்தானமர்ந்தார்
கள்ளரிடசண்டையெல்லாம் கைகலந்துபேசியபின்
கொண்டுவந்தபொருளை எல்லாம் கொற்றவன்தனக்குக்காட்ட
சந்தோஷமாயவனும் சகலமும்உன்னிஷ்டபடி
செய்குவாஎனவீரன் செய்குவன்குடிகளுக்கு
கொள்ளைகொடுத்தவர்க்குபொருள் கொடுப்பதாகதெரிவித்தான்
வந்தகுடிகளுக்குவழங்கினர் பொருளையெல்லாம்
ஏழைக்குடிகளுமே எம்பெருமானைப்பணிந்து
குடிகள்மகிழ்ச்சியுடன் குறையொன்றுமில்லாமல்
மகிழ்ச்சியுடன்வாழ்ந்தார் மாதமும்மாரிபெய்து
கள்ளர்பயமில்லாமல் களிப்புடனேவாழ்ந்திருந்தார்.

## விருத்தம்.

அரசனிடம்மதுரை வீரப்பனும்புகலுவான்
ஐயனேபொருள்க ளின்னம்
அதிகமாயிருந்ததால் அங்கையற்கண்ணம்மை
ஆலயம்விசாலமாக
தரணிதனிலிதைபோலயில்லையெனும்படி
நான்தானேமுடித்தேயாச்சு
தாங்களும்அரசதுபுரிந்திடமாலொன்று
தாணிபர்தான் புகழுவே
கிரமப்படியதனைகட்டியான் முடித்தனன்
கிருபைசெய்ததனைப் பார்க்க
கிஞ்சிற்றுநயைசெய்யவேணுமென நாய்க்கனுங்
கிளைஞருடன் சென்றுபார்த்து
பரமானந்தமாகிநாள்பார்த்து அரசுஅதில்
பகைவரில்லாமலாண்டு
பலதேவதைபூசைதிருவிழாதானமிகு
பலிக்கவேயரசுசெய்தான்.

## விருத்தம்.

ஆப்பணிஆலவாயின் ஆலயம்கட்டிப்பின்பு
செப்பிடுமண்டலாபிஷேகமுஞ் செய்துமேலும்
முப்புறமெரித்த சோமசுந்திரன்முன்னஞ்சென்று
கைப்பிடிபொம்மியோடு கர்த்தனைதொழுகலுற்றான்.

95

மாண்ட மழுவாட.

மூலாதாரப்பொருளே கணேசா என்னை
முற்றுங்கார்த்தருளவேணும் கணேசாநாதா
வல்லபைநாயகா கணேசாமூஷிக
வாகனரேயாளுவாய் கணேசாநாதா
அடியேன்மானிடனாக கணேசாயானும்
அவதரித்ததுபோதும் கணேசாநாதா

வேல்முருகா வேல்முருகா பழனி.

ஆறுமுகவாயென்னை யாளுவாயையா முருகா
அடியேபடும் துயர்தீர்க்க அன்புடன்வாரும்முருகா
போதும்போதும்நான் புவியில் பிறந்தேதான்முருகா
தாருமுந்தன்சேர்வையினி தாளமாட்டேனான்முருகா
சரஹணபவவெனும் சடாக்ஷரமதைமுருகா
சதாவுமுச்சரித்தேனெந்த சாமியேகாப்பாய்முருகா
சோமசுந்தரமெனும் சொக்கலிங்கபெருமா-என்னை
சோதனைசெய்யாதேயின்னம் வாதனைசெய்யாதீர்
காசிராஜனுன்னைநோக்கி கடுந்தபம்செய்ததனால்-என்னை
கர்த்தாவேயளித்தீரிந்த காசியையாளாமல்
அடிமைதொழிலரசருக்கு அடியேன்செய்யதலையில்-என்
அமைப்பதுபோலாச்சுதினி அடியேனாலாகாது
அட்டாங்கயோகம்செய்து அடையேனுந்தருளை
அன்புவைத்துயென்னையாளுவாய் ஆலவாய்சுந்திரேசா.

விருத்தம்.

மடியாதஜெனனமெனும் பெருங்கடல்தன்னிலே
மனமெனும்பெருங்குரங்கு
வாதாடும்காமத் துழன்றலைகைமெய்யென்று
மாயையாம்சுழலில்சிக்கி
முடியாதலையுமென்னை அன்புவைத்தேயுனது
முத்திநகர்தனக்கழைத்து
மூர்க்கனாகியயிந்த நாய்க்குவோர்வழிகாட்டி
மும்மலந்தனையகற்றும்
அடியார்மனத்துள் நடமாடும்நேசா
அருள்புரிகுவாய்சொக்கேசனே

அகிலேசாவிசுவாசா பசுபாசாகல்லாலின்
அரமுபதேசித்தயீசா
அடிமாறிநடனமிடும் சோமசுந்திராவிழிக்
கானந்தமானதேசா
அறுபத்துநான்குதிரு விளையாடல்புரிந்தமரும்
ஆலவாய்சொக்கேசனே.

## விருத்தம்

பூரணிமனோன்மணி தயாபரிபராபரி
புராதனிதராதலமெலாம்
பொற்புடனளித்தசிவ சத்திபாண்டியன்தப
புத்திரியாய்யின்நகரினில்
சீரணித்தமிழ்சங்கத்தோர்துதிமீனாக்ஷி
சேய்துதியுன்செவிக்கு
கேளாததென்னமோ நான்செய்தகர்ம்மமோ
கேட்கவுனையன்றியிலையித்
தாரணியினாசைதனை நீக்கியுன்சேவடி
தந்தாளும்சலசசரணி
தாங்கிசெங்கோல்மதுரை அரசுபுரிமாதேவி
நற்பரானந்தியென்னை
வேரதாய்நினைத்துநீ ஏனென்றுகேட்காமல்
விமலியேயிருந்தாலுனக்
கார்வந்துதூதுயெனை பற்றியுரைப்பாரெனை
யாளுவாயங்கயர்கண்ணே.

## வெள்ளையம்மாள்சொல் விருத்தம்.

ஆலவாய்தனிலமர்ந்த அங்கயற்கண்ணேபோற்றி
ஞாலமெலாம்துதிக்கும் நான்மறைபுகழேபோற்றி
காலனார்கையிலென்னை காட்டியேகொடாய்நீபோற்றி
வோலமிட்டுந்தன்தாளை யுரிமையாய்பணிந்தேன்போற்றி.

### பாராயோ என்னைமுகம்.

தந்தைதாயாரைவேண்டேன் தமக்கைபுருடன்வேண்டேன்
உந்தன்புகழைதினம் வுண்மையாகபோற்றயீவாய்
சங்கரி சங்கரி சங்கரி சாம்பவி

மண்ணுசைபொன்னுசைவேண்டேன் மற்றுமுள்ளபோகம்வேண்டேன்
எண்ணமதிலுந்தன்பாதம் யென்னேரம்துதிக்கயீவாய்
சங்கரி சங்கரி சங்கரி சாம்பவி

உற்றூர்சதமுமல்ல வுடலுஞ்சதமல்லவென்றே
முற்றுமுனைக்கடிமைசெய்ய முழுதருள்தந்தெனையாளுவாய்
சங்கரி சங்கரி சங்கரி சாம்பவி

மும்மலத்தைநீக்கிமூச்சை மூதண்டத்திலேயிருத்தி
அம்மாடிமீனுக்ஷியுனை அசையாமல்துதிக்கவிவாய்
சங்கரி சங்கரி சங்கரி சாம்பவி

நடை.

மதுரைவீரசுவாமியுந்தான் மாதுகுரலோசைகேட்டு
மனதுருகிவெள்ளையெனும் மங்கையின்அழகைபார்த்து
புத்திமாரிபுவியிலிந்த பொற்கொடிபோல்கண்டதில்லை
ஆயவிடகைத்திரத்தை அமைத்தான்யிந்தபெண்ணின்மீது
தையலுடகூந்தல்மேகம் தானல்லால்வேறேயல்ல
சந்திரன்யிவன்முகத்தில் தானகவிளங்குகிறான்
வல்லதைபுருவமாகவைத்தான் யிந்தமாதுக்கேதான்
சேல்கண்டைகண்ணையிந்த சேயிழைக்குவெத்தானேதான்
நீர்க்குமிழிகொண்டுமூக்கை நேமித்தானேபிரமனுந்தான்
கோவைபழமதனல் குவியுமிதழ்தானமைத்தான்
முத்துதான்யிவள்பல்லு மோசம்வரும்வேரேசொன்னல்
சங்கையிவள்கழுத்தினுக்கு சரிசொல்லலாகாது
தங்கத்தைவுருட்டிமார்பில் தையலுக்குவைத்தானயன்
சிற்றுடுக்கைப்போல்யிடுப்பு சிருத்திருக்குத்ததிசயமே
வாழைதண்டாகுமிந்த வடிவழகிதுடையிரண்டும்
தாமரைகமலம்போல் தையல்பாதத்தழகும்
குயிலும்கிளியுமிவள் குரலோசைக்கிடதல்ல
அன்னநடையிவள்நடைக்கு அமைத்திருப்பததிசயமே
பொம்மியைவிடவேவேரே பெண்ணைசேர்வதில்லையென்று
ஏகபத்தினிவிரதனென்று யிருந்தநமதெண்ணமெல்லாம்
காத்தாய்பரந்ததிந்த கன்னியைநாம்யின்றிரவில்
சிறையெடுக்கவேணு மென்றுசிந்தித்துகாவலரை
வெள்ளையம்மையிருப்பிடத்தை வேவுகரால்தானறிந்து

பொம்மியும்தானுமாக போனார்கள்தன்பதிக்கு
போஜனமானபின்பு போய்படுத்தார்பஞ்சணையில்
பொம்மியுறங்கியபின் புறப்பட்டார்வீரகவர்
கைதனிலேவாளெடுத்து கால்தமிர்சால்வையைபோர்த்து
அர்த்தராத்திரிவேளையிலே அங்கயர்கண்ணிகோவில்வந்தார்
மீனாட்சிகாருமென்று முன்கதவுதாள்தரித்து
உள்கதவுதாள்தரித்து வுத்தமிகன்னிகாமாடம்
பஞ்சணையின்மீதில் நித்திரைபண்ணவீரசுவாமிபார்த்து
காளியைநினைத்துரிங்கும் கன்னிமேல்விபூதிபோட
மயக்கமாகினளவளும் மன்னன்தோளில்வைத்தவளை
சாலவையினால்மரைத்து சாமிவீதிவருகும்போது
தலையாரிமார்தான்பார்த்து ஆரங்கேயெனகேட்கக்
ஆரடாயென்றுவீரன் ஆசராய்குரல்கொடுத்தார்
வெள்ளையம்மாள்கண்விழித்து வெருண்டாள்கீழ்விடுத்தாள்
மதுரைவீரனைபார்த்து மங்கையும்கேட்கலுற்றாள்.

## விருத்தம்.

மன்னனேமண்பொண் புருடராசைமாதாபிதா
மற்றுசை யெல்லாம்
கன்னியான்நீக்கி கர்க்ஷாயம்முண்டு
கன்னிகாமாடத்தில் யோகமசைத்து
அன்னமதுவுப் பில்லாமலுண்டு
அங்கயர்கண்ணிக்கு அடிமைசையும்
என்னுடையவிரதமதை கெடுத்துநீரும்
யெடுத்துமேசெல்லவும் தான்நீதியுண்டோ

## நடை.

என்றுவெள்ளைகேட்கையிலே யேதுசெய்தார்தலையாரிமார்
திருமலைராஜனுக்குத் தெரிவிக்கவேயொருவன்
ஒட்டமுநடையுமாகவோடி ராஜன்மாளிகைக்கு
ஆசாரவாசல்கடந்து அரசனையெழுப்பிசொல்வான்
மதுரைவீரராஜாவும் மாதுவெள்ளை தனையெடுத்து
வரவேவெள்ளையம்மாளும் வழிதனிலேயிருவருமாய்
தர்க்கமிட்டுக்கொண்டு அதோதானிருக்கிறார்களென
அந்தமொழிதன்னைக்கேட்டு அரசன்ஆலோசனைசெய்து
வீரப்பனிடஞ்சென்று வேந்தனழைத்ததாகநீரும்

கூப்பிட்டுவாருமென்று கொற்றவனுரைபடியே
தலையாரிவோடிவந்து தாழ்ந்துவீரனடிபணிந்து
அரசனுங்களிருவரையும் அழைத்துவரச்சொன்னரென்றான்
அந்தமொழிகேட்டிருவரு மரசன்கொலுமுன்னேசென்று
திருமலைராசனுக்கு தெண்டனிட்டாரிருவர்களும்

## விருத்தம்.

அப்பனேமதுரைவீரா அடாதகாரியம்நீசெய்தாய்
தப்பிதம்யிந்தமாது தரணியைவெறுத்துமின்னாள்
அப்பணியாணைப்போற்றி ஆலயம்தனிலிருக்க
எப்படிதீண்டலாகும் யிதுநீதியல்லவென்றான்

## நடை.

மதுரைவீரப்பாவுனக்கு மாதுவேணுமென்றால்நானும்
அழகில்சிறந்தபெண்கள் ஆயிரம்பேர்நான்தருவேன்
அரசருடபெண்ணுனக்கு அப்பாநான்கட்டிவைப்பேன்
நாட்டிலுள்ளபெண்களைதான் நாய்தூக்கிபோகவில்லை
கன்னிகாமடத்திருந்து கடுந்தபஞ்செய்யும்பெண்ணை
களவுசெய்துவந்தாயே கண்டவர்களேசுவரே
உன்னைக்கண்டபோதெவரும் ஒடுங்கியவாய்ப்புதைப்பார்
நாட்டிலுள்ளோர்உன்னைக்கண்டு நகைக்கவேபேரெடுத்தாய்
வேறொருவனிக்குற்றம்செய்தால்வீரப்பாயேதாக்கினைசெய்வாய்
அரசருக்குநீதிவேறோ அடிமைக்குநீதிவேறோ
உன்னெதிரில்பேசுவோர்கள் உலகினிலாருமில்லை
என்செய்தாயென்றுகேட்க என்மனதிலில்லையானாலும்
ஊராருனைமதிக்காரென்று வுன்னைக்கேட்டேனல்லாதுநான்
கள்ளம்கபடுயென்மேல் கருத்தினில்வைக்கவேண்டாம்
கோபங்கொள்ளவேண்டாமென்று கொற்றவனுரைக்கையாலே
வீரப்பன்தன்மனதில்வெகுவா யோசனைகள்செய்து
ஈஸ்பரியாளிட்டசாபம் யேகிபூர்வகியானம்வந்து
இனிநாம்உயிருடனே யிருக்கலாகாதிப்புவியிலென்று
கன்னியைதொட்டேனல்லால் காணவில்லையொருசுகமும்
ஆகையினால்எந்தன்மேல் ஆத்தாள்தயைபுரிந்து
இந்ததேகம்நீங்கியேநான் இனியெடுக்கும்தேகமதில்
பொம்மிவெள்ளையுடன்கூடி போற்றசதாகாலமுனை
அங்கையர்கண்மீனாக்ஷிநீ அருள்புரியவேணுமென்று

## விருத்தம்.

அந்தரந்தனிலோராபசன் அம்மைஜங்கரன்முருகன்
இந்ததோர்வீரன்பார்க்க எனதையன்சாபம்நீங்கி
வந்தவூழ்வினையைநீக்கி மாதாவேகாப்பாயென்று
தன்தனிவாளினாலே தன்மார்பில்குத்திக்கொண்டார்

## நடை.

மதுரைவீரன் மண்மீதினில்சாய்ந்திட
பிதுர்கலங்கிபிதற்றி அரசனும்
ஓடிவந்துவீரன்மேல் வீழ்ந்தழுது
வாடியேந்திமார்மீதினில் சாத்தியே
கத்தியைதான்பிடிங்கியே வீரர்க்கு
மெத்தவும்வுபசாரணை செய்தாரவர்
பலவிதபக்குவங்கள் பண்ணவுயிர்
கலங்கயெவரும் கலந்தார்தேவருடன்
முகத்திலும்வாயிலும் மோதியரசன்தான்
பகவானேபாவியிலும் யாகினேன்

## நடை.

விஜயரங்கராஜனிட மேவியென்னநானுரைப்பேன்
ஊரார்யேசுவார்கள்யென்று உந்தனைகேட்டேநல்லாது
இப்படிநீசெய்வாயென்று எண்ணினல்நான்கேட்கமாட்டேன்
கள்ளர்கள்பயமில்லாமல் களிப்பாகனன்வாழ்திருந்தேன்
எந்தன்வாயில்மண்ணைபோட்டு யேகினாயோமதுரவீரா
கள்ளங்கபடில்லாமல்னன் கற்றவன்போல்பேசிவிட்டேன்
எந்தன்குற்றம்தனைபொருத்து என்னைகார்க்கலாகாதோவென்று
பஞ்சணையின்மீதிலிவரை பக்குவமாகவளர்த்தி
இரத்தங்கள்தனைதுடைத்து ருஜனிருக்கும்வேளையிலே
வெள்ளையம்மாளப்பொழுது வீரப்பநழகைபார்த்து
இந்தவிதமாகவோநீ என்னைதொட்டாய்நாயகனே
மன்மதனழகைபழிக்கும் மன்னவனேவுன்னைவிட்டு
உயிருடனேயிப்புவியில் உத்தமனேநானுமிரேன்
யலவராகசொல்லிசொல்லி இந்தபாவையும்அழுகலுற்றாள்
அரசனும்வேவுகரையழைத்து முத்துபல்லக்கெடுத்து
பொம்மியைஅழைத்துவர போகவிட்டான் ஆள்களைதான்

எல்லோரும் இவ்விடத்தில் ஏங்கியழுதேயிருந்தார்
கன்னிகைபொம்மியம்மாள் கண்டாள்கினவு அங்கே
தனியாகமீனாக்ஷிகோவில் தன்புருடன்போககண்டாள்
அழகுடையபெண்ணைகண்டு ஆளன்தூக்கிவந்ததாக
சேவகரிவரைகண்டு சேர்ப்பிக்கஅரசனிடம்
அரசன்சிலநீதிசொல்ல அதைதாளாமல்வீரனவர்
தன்னுடையவாளால்வுயிர் தானிரப்பதாககண்டாள்
கன்னியும்அரசனுமாய் கதரியழகண்டாளவள்
அலறியெழுந்துபொம்மி ஆளன்தன்னைபார்த்தாளவள்
கணவனைக்காணாமல் கலங்கிமனம்திகிலடைந்து
வீரமாங்காளிதாயே விட்டனையோஎங்களைத்தான்
அடியாளைகைவிட்டாயோ அம்மாசக்கம்மாதாயே
எண்ணத்தில்கிலேசங்கொண்டு இருக்குமந்தவேளையிலே
கதவைதட்டினசப்தம் காதினாலேகேட்டவளும்
ஓடிகதவைத்திறந்து வுத்தமியாரென்றுகேட்க
வீரனார்இறந்தாரம்மா வேந்தனைத்தானழைத்தார்
இறந்தாரென்றசொல்லைக்கேட்டு யிடிவிழுந்தாப்போல்விழுந்தா
ஆவென்றகூச்சலுடன் அலறிவிழுந்தாளவள்
மூர்ச்சையாகியவளும் மூச்சுபேச்சில்லாதிருந்தாள்
பாங்கியர்களோடிவந்து பாவையைமடிமீதில்சாத்தி
பன்னீர்க்கொண்டுதெளித்து பலவிதவுபசாரஞ்செய்து
மயிலிறகால்விசிறிவர மங்கையும்மூர்ச்சைதெளிந்து
வாய்தனிலடித்துக்கொண்டு மன்னவாளனைப்பிரிந்து
போனாயோஎன்கணவா புரப்பட்டேன்உன்னுடனே
பாங்கியர்களோடிவந்து பல்லக்கின்மேலேறுமென்றார்

நாமாவளி கல்லார்க்கும்.

பல்லக்குஏறியிந்த பாவியற்குஎன்று
பாங்கியர்கள்சூழ்ந்துவர பைங்கொடியும்நடந்தாள்
கன்னிபொம்மிநடக்கின்ற கஷ்டம்சகியாமல்
கதிரவனும்கீழ்திசையில் கனிவுடனேயுதித்தான்
அழகுரளோசைக்கேட்டு அங்குள்ளோர்வந்துபார்க்க
அருந்தகிபோல்பொம்மியைக்கண் டங்குள்ளோர்பிரமித்தார்
மன்மதனைபோலொத்த மன்னனிறந்ததினால்
மங்கையழுகுரளென்று மற்றோரும்புரப்பட்டார்

பட்டணத்திலுள்ளஜெனம் பாவைபொம்மியழவே
பரதவித்துமனங்கலங்கி பார்க்கமுடியாமல்
ஆண்பெண்குழந்தைமுதல் அனைவர்களும்அழவே
அம்மதுரைநகர்முழுதும் அழகுரளாய்போச்சு
பல்லக்கிலேலாமல் பாவைவரக்கண்டு
பார்த்தரசன்திகில்கொண்டு பதுங்கினனேனேர்புரமாய்
அரசனிடமாளிகையில் அம்மையவள்வந்து
ஆளனைக்கண்டவர்மேல் அலறியேவீழ்ந்தனைத்து
செத்தபிணம்போல்பொம்மி சிலநேரமிருந்தாள்
சேர்ந்திருந்தஜெனங்களெல்லாம் சோர்ந்துபேசாதிருந்தார்
மூர்ச்சைத்தெளிந்து முகத்தோடுமுத்தமிட்டு
மூன்றுலட்சம்பேரையொரு முகூர்த்தத்தில்தான்தீர்த்து
காசியிலேபிறந்து கமலாபுரியில்வளர்ந்தாய்
கன்னியெனைசிறையெடுத்து கமலாபுரியையழித்து
கள்ளரைகருவறுத்த காசிதுரைபுதல்வா
கன்னியெனைத்தனியாய்விட கருத்திலெண்ணினையே
இதோவுன்னுடன்வருவேன் இருக்கேன்உயிர்வைத்து
இரந்தவிதம்தெரிந்து இந்த நகரத்தையுமழித்து
அரசனுக்குநீசெய்த அன்பைமரந்த இந்த
அன்னீத அரசனைநான் அடியாள்சபித்துவருவேன்
என்றுசொல்லகேட்டரசன் எல்லோரும்பயந்து
ஏதும்பேசாமல் ஏங்கிதிகில்கொண்டார்
அப்போதுவெள்ளையவள் அரசனைத்தான்பொம்மி
அன்னீதமாய்சபிப்பாளென்று அச்சங்கொண்டாளவளும்

அகவல்.

அக்காடியென்று அடிதனில்வீழ்ந்து
இக்குற்றம்யாரும் இயற்றியதல்ல
அரனாரன்றியோர் அணுவுமசையாதே
வீரப்பன்தனைக்கொல்ல விண்ணவரால்ஆகாது
விதிவசத்தாலிறந்த விபரத்தையானுரைப்பேன்
சாதியில்யானும் தாசிபெண்ணாகும்
தரணியைவெருத்து சன்யாசம்பூண்டு
உறக்கம்உணவு வுண்மையில்குறைத்து
அம்மைக்குபணிவிடை அடியாளும்செய்து

103

இம்மைசுகம்வெருத்து இருந்தேன்ஆலயத்தில்
வீரனார்எடுத்தென்னை வீதியில்வரும்போது
ஆரப்பாவென்றயான் அலறியேபார்த்தவரை
சன்யாசமாமென்னை தகுமோநீ,தொடுதல்
என்று,வாதாட,நான் எந்தல்காவலர்போய்
அரசனுக்குரைத்தார் ஆனல்அழையுமென்றார்
காவலநழைத்தார் கடுகவாவென்றார்
காவலருடன்சென்றோம் களிப்புடன்அரசன்
பலநீதிகளெல்லாம் பகர்ந்தனரப்போது
கலங்கிடயெவரும் கைவாளெடுத்து
மார்தனில்குத்தி மாண்டாரல்லது
ஆர்மேலும்குற்றம் அக்காவேயில்லையுன்
கோபத்தைபொருத்து கொற்றவன்தனக்கு
சாபமிடவேண்டாம் க்ஷமிப்பாயென்றிடும்
மாதுமுகத்தை மங்கையும்பார்த்து
சாதுகள்வேடம் சமைந்தவெள்ளைக்கு
நம்மிலும்அழகில் நங்கைசிரந்தவள்
செம்மைநூல்கற்று சேர்ந்தாள்பெருவழியென

## விருத்தம்.

மன்னனேஎன துபிராணநாதன் வானுலகாளச்செய்ய
இன்னிமிஷத்தில்வேண்டும் யாவையும்வரவழைத்தென்
மன்னனையடக்கிபின்னற், மணவாளனோடுசேர
முன்னதாய்தீயைமூட்டும், மூழ்கிடவேணுமென்ன

## விருத்தம்.

கரமதைதொட்டபோதென் கணவனுமவர்தானச்சு
பரமனென்தாய்தகப்பன், பண்பூஜ்சையவர்க்கேயல்லால்
விரதம்கெட்,டதன்பின்; தேகம்விட்டுஎன்மூத்தாளோடு
அரசனேதீயில்யானும், அடையதீ,மூட்டுமென்றாள்

## விருத்தம்.

தீயினில்குளிப்பேனென்ற செல்விகாள்கேளுமுங்கள்
ஆயிசுவுள்ளமட்டும் அரசாண்டுவாரும்நீங்கள்
தாயிட்டவேலையாயென் தலையாலேசெய்வேனென்று
வாயைவிட்டலறிவேந்தன் வணங்கிகைகூப்பிநின்றான்.

நடை.

அரசனேகேளுமெங்கள் மொழியை-நீரும்
அட்டிசெய்யாமலே தயைப்புரியும்
புருஷநிறந்தபின்பு நாங்கள்-யிந்த
பூவுலகமாள நீதியுண்டோ
ஆளநிறந்தபின்பு நாங்கள்-யிந்த
அரசுபுரிந்தாலே நரகம்சேர்வோம்
புருஷனுடன் இரந்தாலே நாங்கள்-மேலுலகம்
போகுவோம் வீரசொர்க்கமதனில்
ஆகையினலெங்கள் மொழியதனை-நீரும்
அட்டிசெய்யாமல் செய்யுமென்ன
எங்கள்சொல்போல் செய்யாவிட்டால்நீரும்-நாங்கள்
இப்போதெங்களுயிர் விடுவோமென்ற
அந்தமொழிதனைக் கேட்டரசன்மற்றோரும்-மனதில்
அச்சம்கொண்டு ஆள்களையழைத்து
வைகைதீர்த்தம், பொற்றமறைதீர்த்தம்-யின்னம்
அங்குள்ளதீர்த்தங்களால் குளிப்பாட்ட
சரிகைபட்டுஆடையலங்கரித்து-யின்னம்
சகலவிதபூஷணங்கள்பூட்டி
புஷ்பங்கள்தன்னல் அலங்கரித்து-முத்து
பல்லக்கினில்மதுரை வீரனைவைத்து
பட்டணத்திலுள்ள வாத்தியமுழங்க-படைகள்
வகுத்தணியணியாகச்செல்ல
மந்திரிமார்அரசன்பல்லக்கெடுக்க-பத்தினி
மார்களிருபுரத்து மணைத்தேவரவும்
அந்தரத்தில்தேவதுந் துமிமுழங்க-அப்போ
அவரவர்கள்வாய்விட் டழுதுசொல்வார்
கள்ளர்பயமில்லாம லேநாமும்-மெத்த
களிப்பாயிப்புண்ணியவா னலிருந்தோம்
மதுரைவீரனைகாண்ப தெப்போவென்று-வூரார்
மண்மேல்புரண்டே யழுதார்கள்
காசிதுரையை காண்பதெப்போவென்று-பெண்கள்
கட்டிமயிரிழவு கொடுத்தார்கள்
மார்மீதி லடித்துக்கொண்டுஅப்போ-யெல்லாம்

மதிமயங்கி மூர்ச்சை-போனார்கள்
திருப்பரங்குன்ற மடிவாரம்-அங்கு
திருத்தமானயிட மிதுவேயென்று
பொம்மிவெள்ளை கையிதனல்சடங்கு-வீரர்க்கு
பொருத்தமாக சமாதிகிரியைசெய்து
அடக்கம்செய்து அரசன்முதல்வந்து-மந்திரிக்கு
அக்கினியை மூட்டவேஆள்களையும்
அம்பாளின்கோயிலுக்கு யெதிரில்-துலவில்
அக்கினிகுழியை வெட்டச்சொல்லியதனில்
சந்தணக்கட்டைகளால் அக்கினி-மூட்டி
தயார்செய்யயென்று சொல்லிஅரசன்
அழுதகண்ணும் சிந்தையுமாகவே-பதிக்கு
அவரவர்கள் சென்றபின்புபொம்மி
பல்லக்கினில் வெள்ளையம்மையும்-பொம்மி
பதியில்செல்ல தாதியர்களப்போது

## கும்மி.

பொற்றாமறைவைகை தீர்த்தங்கொண்டு-தாயார்
பொம்மிவெள்ளைக் கபிஷேகஞ்செய்து
சித்தம்களிக்கவே மஞ்சள்நீராட்டியே
சீப்புக்கொண்டு தலைவாரினார்கள்-அதை
சேர்த்துகோடாலி முடியுமிட்டார்
மஞ்சளைவெண்,பட்டிலே, துவைத்து-யிந்த
மாதுவெள்ளைபொம்மி தானுடுத்தி
பஞ்சாட்சரமள்ளி நெற்றியிலணிந்து
பரமனேயெந்தனைக் காருமென்றே-சுவாமி
அரகராயிது, சமயமென்பார்
சந்தணம்பூசி, சவ்வாதுபூசி-எங்கள்
சங்கரிமீனாட்சி காருமென்றே
வந்தனஞ்செய்து குங்குமமிட்டபின்
வகைவகையான புட்பமணிந்து-பொன்
பூஷணத்தால் அலங்காரஞ்செய்து
புட்பத்தால்பல்லக்கு சோடித்தார்கள்-அதில்
பொம்மிவெள்ளையருந் தானமர்ந்து
இஷ்டாள்மனைக்கு, செல்லஅவரவர்கள்

இட்டனர் அன்னமும்பாலுடனே-அதை
மெத்தகளிப்பாக உண்டபின்பு.
வெற்றிலைபாக்குமஞ்சள் புஷ்ப-மிவர்
மின்மடி தன்னிலே வைத்துகட்டி
பக்த்தியுடன்பெரியோர்களும் வாழ்த்திட
பணிந்தார்கள்சிறியவர் பொம்மிகாலில்-இதோ
அணிந்தோம் சிரசிலுன்பாதமென்றார்.
மந்திரிபிரதானிகள்மனைக்கும் - அங்கு
மற்றுமுள்ளபெரியோர் மனைக்கும்
அந்தமதுரைமுழுதும்சென்றே - இவர்கள்
அன்னமும்பாலுமுண்டானபின்பு - வெகு
சந்தோஷமாய் ராஜன்மனைக்கு
பட்டணத்திலுள்ளோர் சூழ்ந்துவர - அப்போ
பலவாத்தியங்கள் முழங்கிவர
இஷ்டத்துடனவர்கள் புஷ்பமிறைத்து - அவர்
இருகையைதூக்கியெதண்டனிட்டார் - இவர்கள்
இக்கலியுகத்து தெய்வமென்றார்.
திருமலைநாய்க்கன் பெண்டுபந்துடன் - வெகு
தீவிரமாகயெதிரில் சென்று
உருக்கமாயந்தபுறத்துக்கழைத்துபோய் - அவர்
உடன்வந்தோருக்குமரியாதைசெய்து - கொஞ்சம்
இருக்கவேணும் என்மேல்தயைபுரிந்து

## விருத்தம்.

ஆரப்பாசாம்சிவ ஐயரேநீருமே
அந்தணஸ்திரீகள் கையால்
அந்தந்ததீர்த்தங்கள்கொண்டு வரச்சொல்லி
யபிஷேகம்செய்துவைத்து
ஈரமஞ்சள் துகிலுடுத்தியே நகைகளும்
இருவாக்ஷ்கூடி மல்லிமருவால்
இருவரையலங்காரம்செய்தவர் தனக்குமே
இட்டனர் அன்னம்பாலும்
ஆரமதுபோட்டவர்கள் மடிதனில்கனிபுஷ்பம்
அக்ஷதைமஞ்சள் தாம்பூலம்
அப்பணிந்தாருக்கு அங்கையர்கண்ணிக்கு

அபிஷேகம்செய்துவைத்து
ஊரது அலங்காரம்செய்திட வேதியர்கள்
ஓதிடவேதமெங்கும்
உமையவள்போல்வாழ்கவென் றரசன்வாழ்த்திட
வொழுக்கமுடனிவர் பணிந்தார்.

## விருத்தம்.

அரசனேகுதிரையுடன் வேட்டைநாயதனையும்
அலங்காரம்செய்து இப்போ
வரவழைத்தெங்களுடன் தீயினிவ்வீழ்ந்திட
மதிமயக்கஞ்செய்யாமல்
தரவேணுமுத்திரவுநாங்களும் இப்போது
தற்பரநருளைபெற்று
திரமாகமதுரையமர் மீனாக்ஷியடிதனை
சேர்த்திட தயவுசெய்யும்.

## தரு.

அரகரா சிவசிவா சொக்கேசா என்றிவர் ஆலயமதனைமுக்கால்
வலம்வந்தார் - அரஹரா.
அத்திமுகனை ஆறுமுகதேவனையும் இவர்-ஆலவாயாள்தனையும்
தான்தொழுதார் - அரஹரா
மரகதமீனாக்ஷியாளடிபோற்றி இவர் மகிக்ஷியாய்
கருப்பண்ணர்கோவில்வந்தார் - அரஹரா.
உண்மையுள்ளதெய்வமே யெங்கள்வுக்கிரகருப்பண்ணா
வுதவிசெய்தென்னுளரோடு சேர்க்கவேணும்-அரகரா
மொட்டைமுனிநாதாயெங்கள் மூர்க்கமுள்ளதபசியே
முக்காலுமுனைத்தொழுதோம் காருமென்பார்-அரகரா
அரகராசிவசிவாயென்றே யெவரும்சொல்லஅப்போ
அந்தணர்வேதமோத வாத்தியமுழங்க-அரகரா
அரசன்மற்றோரும் இவரைபுடைசூழ-எறியும்
அக்கினிகுழியைவலம் வந்தார்கள்-அரகரா

## விருத்தம்.

அரசன்முதல்பெரியோரை பொம்மிவெள்ளை
அடிபணிந்துநின்றார்கள் அவரகர்கள்

கரமதைஎடுத்தா சீர்வாதம்செய்து
கலியூகதெய்வம் வுமையன்றிவேறே
தரணிதனில்அறியோமென்றே துதித்தார்
தாழ்ந்தடிபணிந்தார்கள் சிறியோரெல்லாம்
அரகராயிம்மாதை காக்கவென்று
அந்தணர்கள் வேதாப்பியாசம்செய்தார்.

## தேவாரம்.

ஆதியாம்சொக்கலிங்க அண்ணலேஎங்கள்மீது
சோதியேதயைபுரிந்து சுந்தரவீரப்பனோடு
மாதிருவரையும்சேர்த்து மதிகதிருள்ளநாளும்
நீதியாய்கூடிவாழ நித்யனேயருள்வாய்போற்றி,

## சந்த விருத்தம்.

அம்பிகையேபராபரையே ஆதியான
ஆலவாய்தனிலமர்ந்ததாயே எங்கள்
தும்பிமுகன்தனையீன்ற மீனாட்சிஎம்மை
துணைவருடன்கூடிடவேசெய்து பின்பும்
செம்மையுடன்மூவருமா யொன்றாய்க்கூடி
ஜெகமுள்ளநாளளவும் வுன்னைப்போற்ற
அம்மையேயிந்தவரந்தந்தேஎன்றும்
அடியர்களைகாத்தருளவணுமென்று
வெம்பியுனதடிதொழுதோம்வேதரூபி
வேதாந்தவித்தகியே காப்பாய்போற்றி.

## உனக்கும்.

ஆலவாய்சொக்கலிங்க அண்ணலார்தமையும்
அங்கையர்கண்மீனாட்சிதனை அன்புடன்தொழுதார்
அரகராசிவசிவாவென்று அரசன்முதல்சொல்ல
அந்தணர்கள்வேதமோதி அக்கினியைமூட்ட
பெம்மிவெள்ளை இருவரும் புகுந்தாரக்கினியில்
புஷ்பமாரிதேவர்களும் பொழிந்தார்களப்போ
அரசன்முதல்யாவர்களும் அடைந்தேசந்தோஷம்
அக்கினிகுளிர்ந்தபின்பு அக்குண்டத்தினின்றிறங்கி
கன்னிகளிருவர்மடியில் கட்டினகனிபுஷ்பம்
காலன்,வேகாதிருக்கக்கண்டு கரந்தனிலேயெடுத்து''

கண்களிலொத்தி,வெண்பட்டிலிட்டு கனகபெட்டியில்வைத்து
காவலனோடு,ஊர்கோலம்வந்து கனகபெட்டியதனை
பூசையறைக்குள்வைத்தேதினமும் பூசைபுரிந்தரசன்
ஆசையுடன்அல்லும்பகலுமதனை அன்புடனே துதித்தான்
இதுபரியந்தம்இவ்வுலகினில் யாவரும்தானறிவார்
மீதும்அவர்செய் அதிசயத்தை மெய்மையாறறிவார்

## சந்த விருத்தம்.

மதுரைவீரப்பதுரை இறந்தபின்போர்தினம்
மலையாள அரசன்தானும்
மரிக்காரெனும் சோனகர்தனையழைத்துமே
மாந்தரீகம் கருவுகொண்டு
மதுரையில் மீனாட்சிரதவுச்சவம்தான்
நடக்குமவ்விடத்தில் சென்று
மாந்தரீகமதனில் ரதமதனைநிருத்தியே
மாதுமீனாட்சிகலையை
இதுசமயம்சென்றுநீர் பந்துசெய்தேசிமிளில்
யிவ்விடம் வந்தபின்பு
ஈஸ்பரிதனக்கிங்கு ஆலயம்கட்டியென்
கண்ணெதிர்பார்க்க வேணும்
எதுயெதுவுங்கட்குவேணுமென் றதுகளை
எடுத்தேகுமென்று சொல்ல
எந்தமேலநல்லதென ஏழுபேர்சோனகர்
யேகினார் மதுரைநகர்க்கே

## ஆனந்தம்.

மலையாளஅரசன்சொல்ல சோனகரில்
மாந்திரீகத்தில்வல்லவர்கள் ஏழுபேராம்
மறைப்புமுதல்கருவுகள் அவர்களெடுத்து
மதுரைநகர்வந்து சேர்ந்தார்துடுக்கரவர்கள்
திசைதிசையிலேயிருந்து ஜனக்கூட்டங்கள்
திருவிழாபார்க்கமதுரைவந்து நிறைந்தார்
ஏழாநாள்இரதவுற்சவத்தைப் பார்க்கவே
இருக்கும்போதுஅம்மனை ரதத்திலேயேற்றி
ஊரார்களெல்லாம்கூடி ரதத்தைப்பிடிக்க

ஓதிவேதவேதியர்க ளிருபுரம்போக
பக்தர்கள்தேவாரம் திருவாசகம்பாடி
பஜனைசெய்வோர்கள் கூட்டம்கூட்டமாய்பாட
சம்போசதாசிவாவென சிவனடியர்கள்
சதா ஹராஹராவென்று எங்கும்கோஷிக்க
அங்கயர்கண்ணம்மை ரதம்மேலண்டைவர
அப்போதுசோனகரவர் அவர்களும்
மறப்புமைஎடுத்து நெற்றிதனிலேவைத்து
மற்றோர்கண்ணுக்குதோணமல் ரதத்தண்டைவந்து
கேசறிகருவெடுத்து தேவதைகளை
கிஞ்சித்தெனும்பிசகாமல் ஸ்தம்பனம்செய்து
தேரைநிருத்தி மீனட்சிகலைகளதனை
திக்குபந்துகட்டி சிமிளதனிலிரக்கி

## விருத்தம்.

பாத்தனளே பார்வதியும்
பந்துசெய்யும் சோனகர்கள்
கோத்திரத்துடன் நாளை
கொள்ளையிட வீரன்கையால்
காத்துக்கொண்டிருக்க நாமும்
கட்டவிழ்க்க லாகாதென்று
ஆத்திரத்துடனே அம்மை
அடங்கினள் சிமிளதனில்

## நடை.

அப்போதுசோனகர்கள் ஆனந்தமாகிஅவர்
சிமிளமைமூடியேதான் செய்தார்கள்பந்துதனை
சந்தோஷமாய்துலுக்கர் சரசவார்த்தைகள்பேசி
தேர்நடக்ககட்டவிழ்த்து யேகினர்அவர்பதிக்கு
மலையாளம்சென்றவரும் மன்னனுடனேபுகல்வார்
அம்மனைபந்துசெய்து அரசனேகொண்டுவந்தோம்
என்றுசொல்லமாந்தரீகரும் இனியில்லாதசந்தோஷமாய்
ஆலயம்கட்டுமட்டும் அம்பிகைவுங்களிடத்தில்
இருக்கட்டுமென்றுசொல்லி ஏழுபேர்மறிக்காருக்கு
பொருள்கள்மிகஅளித்து போகவிட்டுராஜனவன்

தபதிகளை தானழைத்து சங்கரிக்குஆலயமொன்று
நல்லநாள்பார்த்துமேதான் நடத்திமுடிக்கவேணும்
சீக்கிரத்தில்ஆலயத்தை செய்துமுடியுமென்று
வேண்டியபொருளவர்க்கு வேந்தனுந்தான்கொடுத்தான்
ஆயாதிபோட்டவர்கள் ஆலயம்கட்டலானார்
இந்தவிதமாகயிவர் யிருக்குமந்தநாளையிலே

சந்த விருத்தம்.

அப்பணிசோமசுந்திரருமே அப்போது
அங்கயர்கண்ணிதன்னை
அடக்கம்செய்தே மலையாளமேகினதால்
அவர்களையழிக்கவெண்ணி
இப்பெருங்கருவு எதிர்சென்றுவெல்லுவதற்கு
எவராலுமாகாதென்று
ஈடருத்தான்மதுரைவீரன் கம்பளக்கருவை
இவனைவிடயில்லையென்று
முப்புறமெரித்தானும் மூஷிகவாகனனும்
முருகக்கடவுளொடு
முத்துவீரப்பனார் சமாதியருகில்வந்து
மூர்க்கவீராவாவென
எப்போதும்போல்வீரன் சமாதிவிட்டேவெளியில்
எழுந்தீசர்மற்றோரையும்
எந்தலேகாருமென இருதாள்பணிந்துமே
இருகரம்கூப்பிநின்றான்.

விருத்தம்.

மைந்தனேமதுரைவீரா மலையாளசோனகர்தான்
உந்தன்தாய்தனைக்கருவால் ஒருமிக்கபந்துசெய்து
அந்தவூர்சென்றார்நீயும் அவ்விடம்சென்றவர்கள்தன்னை
கொந்திடவதைத்துன்தாயை கொடியினிலழைத்தேவாடா

விருத்தம்.

அரகரா இக்கலியுகமதிலெனைக் கண்ட
அடங்காத தேவதையெலாம்
அடங்கிஎன்சொல்போல் நடக்கவேணுமல்லால்
அக்கிறமஞ்செய்கருவுகள்

நிரமாறிபோகவும் மானிடர்களெக்தனே
　　நிலையாய்துதிப்பவர்க்கு
நினேவ்துபோல்வரமும் நானீக்திடவுமென்
　　நேசமாதிருவரோடும்
பரமனேஎன்குதிரை நாயோடிருக்கவும்
　　பலபேர்களென்னேதொழவும்
பகவனேஇவ்வரந் தந்தீராஞல்சென்று
　　பாவிசோனகீர்கள் தன்னே
புறமூன்றெரித்ததை போலவர்குடிகளே
　　பூண்டில்லாமலழித்து
புகழுவேஎன்தாயை இப்போதழைத்துவற
　　போகுரேனெனவீரனும்

நடை.

அப்படியேதந்தேனென அரனவர்வாத்தைதர
ஈசனுடன்வரம்பெற்று எக்காளத்துடனவரும்
சூக்ஷ்சுமதேகத்தைகொண்டு சுந்தரியாளேநினேத்து
மலேயாளம்சென்ருர்வீரர் மட்டபங்காமாந்திரீகரும்
அப்போதுசோனகரும் ஆனந்தமாகியேழுபேர்
சொக்கட்டாஞடுவதை சுந்தரவீரஞர்பார்த்து
உதைத்தாரொருசோனகனே ஓவெனகத்தியவன்
கக்கியேரத்தமதை கண்ணிரண்டும்பிதுங்கிவிட
அதைக்கண்டு ஆறுபேரும் அவரவர்கள்மந்திரத்தை
உச்சரித்துபலவாறுசெய்தார் வுயிர்போச்சுமறிக்கானுக்கு
மற்ரெருசோனகனே மார்மீதிலேயுதைக்க
கக்கியேரத்தத்தைகைகால் உதரலாஞன்
மற்றமாந்திரீகர்தானும் மந்திரித்தார்அவனுக்கும்
அந்தரிக்கும்போதவனும் மாண்டான்காண்சோனகனும்
அடிவயற்றிலொருவனே ஆங்காரங்கொண்டேயுதைத்தார்
ஆசனத்தில்குடல்கள்வந்து அலரிவிழுந்தானவனும்
கருமூதலெடுத்தவர்கள் காட்டிஞர்அவர்மந்திரமெல்லாம்
அஞ்சணத்தைபோட்டவரும் ஆராய்ந்துபார்த்தார்கள்
கட்டுகட்டிபந்துசெய்து காட்டிஞர்அவர்மந்திரத்தை
அப்போதுவீரனவர் ஆங்காரஓங்காரமிட்டு
காலிரண்டும்பிடித்தவரை கதரிட்டகிழித்தெரிந்தார்

மற்றுமுள்ளசோனகரை மாந்திரீகம்கற்றவரை
கண்டதுண்டமாகவெட்டி கருவழித்துகருவத்தான்
தாயார்மீனாட்சிதானிருக்கு மரையில்சென்று
பூமியைதான்கிளரி பெட்டியையுடைத்தெரிந்து
டப்பியைதான்திறந்தார் தாயாரும்வெளியேவந்து
வீரப்பன்தன்னைக்கண்டு வெகுவாய்சந்தோஷங்கொண்டு
இருவருமாகவேதான் எழுந்தார்மதுரைநகர்
ஆலயம்வந்துமீனாள் அரனாரை தான்வணங்கி
அப்பன்சொக்கநாதருடன் ஆறுமுகவிக்கினரும்
கணநாதர்வீரபத்திரர் களிப்புடனே தானும்வந்தார்
அங்கயர்கண்மீனாட்சி அன்பாய்வீரன்தனையழைத்து

## விருத்தம்.

இன்றுமுதலா எனதுகம்பத்தடினி
பிரவுபகலாகவேதான்
என்னேரமுங்காக்க வுனதிருமாதுடன்நீயும்
எத்தேசகாலம் வாழ்வீர்
முன்பூசைமுன்காவு கொள்ளுவாய்
வுனையெவரும் முன்பாகவேதொழுவார்
என்றுமீனாட்சியும் அனேகவரந்தந்தருள
யிகபோகமாக வாழ்ந்தார்

## நாமாவளி.

### கல்லாருக்கும் கற்றவர்க்கும்.

திருமலைராஜனே தெரிந்தாயோவீரப்பன்
வருமானமிதுதானென்று வழுத்தியேவீரப்பன்
கம்பத்தடிதனிலேவீரர் காவலாயிருக்கிறார்
செம்மையாகஅவரை தினம் சேவிப்பாயெனபுகல
அரசன்முதல்யாவர்களும் ஆனந்தமாய்கேட்டு
பரவசமாகிவீரனை பக்ஷமுடன்தொழுதார்
காராளபிரபின்பிள்ளை கன்னிகழியாதவனும்
வீராதிவீரன்பெருமை வினயத்துடன்கேட்டான்
ஆவேசமாகவீரன் அப்பிள்ளைமேல்வந்து
நோவேன்அரசனே எந்தன் நோன்புநீயுங்கொண்டு
கம்பத்தடிதனிலென்னைப்போல் கல்லிக்குறிசெய்து

செம்மையுடன்பூசைபுட்பம் செய்துவாளெந்தனுக்கு
கள்ளர்களால்மற்றவரை கசடுசெய்யும்துட்டர்களை
துள்ளதொழுநோய்தந்து துட்டரையடக்குவேனுன்
பாதுகாப்பேன்வுன்னகரை பயமதுகொள்ளவேண்டாம்.
எதுக்குமஞ்சாதிரென்று எல்லோருக்குஞ்சொல்ல.
அரசன்முதல்மற்றவரும் அடிதொழுதேசுவாமி
வரமதுதந்தேயெமை அப்பனைப்போல்காப்பீர்
என்றுயெவர்களும்தொழுது இருகரத்தால்போற்ற
நன்றுஎனவீரர்போக நாரதரையெல்லோரும்
தவமுனிவோரேவீரர் தலபிறப்பையெல்லாம்
கவனமுடன்கேட்டுயெங்கள் கவலையதைதீர்த்தோம்
என்றுநாரதரைபூசித்து இருதாளதைபணிந்தார்
நன்றாய்வாழ்வீரென்று முனிநடந்தார்தபவனமே.

## விருத்தம்.

தபசியும்போனபின்பு தார்வேந்தன்வீரனைபோல்
கவனமாய்சிலைகள்செய்து கம்பத்திநடியில்வைத்து
எவருமேதொழுதுவாழ்ந்தாரிடையூரில்லாமலென்றும்
புவனத்தோர்மதுரைவீரன் பொற்பாதம்போற்றினரே.

## மங்களம் - வெண்ணிலாவே.

ஆவலாய்சொக்கருக்குமங்களமே - எங்கள்
ஆதியாய்மீனாக்ஷியர்க்கு - மங்களமே
ஆனைமுகநாதருக்கும் மங்களமே - எங்கள்
ஆறுமுகசுவாமியர்க்கு மங்களமே
அயனார்க்கும் மாயனுக்கும் மங்களமே - எங்கள்
அலைமேல்மங்கை சரஸ்வதிக்கும் மங்களமே
அகோரவீரபத்திரர்க்கு மங்களமே - எங்கள்
அஷ்டமாங்காளியர்க்கு மங்களமே
அங்காளஈஸ்பரிக்கு மங்களமே - எங்கள்
அப்பன்பெரியஆண்டவர்க்கு - மங்களமே
பச்சைமலைநாயகிக்கு மங்களமே - எங்கள்
பகவான்மதுரைவீரருக்கு மங்களமே
மாரிமுத்துஅம்மனுக்கு மங்களமே - எங்கள்
மற்றுமுள்தேவருக்கு மங்களமே

தபமுனிக்கும்அண்ணமார்க்குமங்களமே - எங்கள்
தாயார்கிராமதேவியர்க்கு - மங்களமே
பொம்மியம்ணிமவெள்ளேயர்க்குமங்களமே - எங்கள்
புகழ்மதுரைவீரப்பருக்குமங்களமே.

## வாழி விருத்தம்.

வாழிசொக்கநாதம்மை மீனுக்ஷியும்
வாழிஅந்தணர்தேவர் முனிவரும்
வாழிவீரப்னர் வெள்ளேபொம்மியும்
வாழிமானிலத்தோர் வாழ்கவாழ்கவே.

## மதுரைவீர சுவாமி துதி.

சீர்வயிரமணிகொண்ண்ட முடியும்பொன்னுடை
செந்திலகநீற்றுநெற்றி
திருமுகத்தொளிர்கிருக மீசைமகரக்குழைச்
செவியரத்னஹாரமார்புந்
தார்வெற்றிமலர்மாலை கடகபுயங்கதிர்வாள்கை
தனில்வீசிசம்பிரமநிறை
தனகனச்செல்வியெழிற் பொம்மியம்மாளிடஞ்
சார்ந்திடவணைத்திடுப்பிற்
போர்தட்டிஜல்லடங்கட்டி வச்சிரவீட்டி
பூண்டுவீறற்கண்டைதண்டை
புனைபதிப்பதகவயமுடனைங் கதித்திவ்விய
பூஷணவெள்ளசுவமேறி
வேர்சுற்றுவயவீரர் கொடிகுடைபிடிக்கமுன்
விருதூதகையடங்க
வெகுவேகநாய்ப்பின் வரவனவேட்டைவரும்
மதுரைவீரப்பதுரைசாமியே.

### விருத்தம்.

கருணையேயுருவாகி. கதிர்குலத்தவராக
காசியாள்சுதனய்வந்த
கருத்தினிலூரிடும்கற்கண்டு தேனுமாய்
கண்ணிருமணியுமான.
வருத்தமதருக்கின்ற வாளாகிதேவனாய்
வல்வினையெலாமொழிக்கும்
திருத்தமாய்நினைத்தோர்கள் குலதெய்வமாகுந்தென்
மதுரைவீரப்பதுரையே.

கதிரொளிமுடிமுருகுகடுக்கனுடன் கெண்டியும்
கலிக்கத்துராசுட்டியும்
மதியினொளிகண்ட சரம்புஜகீர்த்திபவுத்திரம்
மன்னவுன் காப்புகொலுசும்
அதிரூபமாதிருவர் வேட்டைநாயுடன்வரும்
அசுவத்தி நடையிலொயிலும்
விதியாதகள்ளரை கொடுவாளால்கொல்லும்தென்
மதுரைவீரப்ப துரையே.

ஆடாதபேய்களும் இரிச்சிகாட்டேரியும்
அண்ணமார்கன்னி குற்றம்
வோடாதமுனிகளும் குட்டிமாடன்ஜின்னு
வுதிரகிங்கில்யன் குறளி
ஆடாடும்கருவுக்கும் மாரணமுதர்க்கொண்டு
வுனைபோற்றி நீறுபோட
வாடாமல் அவர்மனக்குறையெலாம்தீர்க்கும் தென்
மதுரைவீரப்பதுரையே.

அன்னையும்தந்தைநீ அல்லால் யெனக்குவேர்
ஆதரவுயில்லையறிகுவாய்
பின்னொருவரெனக்குதவி வுண்டெனிலவரையும்
புகலுவாய்தயை புரிந்து
என்மனத்துள்வுரையும் கவலையகரிந்து
நீயெல்லா முடித்துவைக்க
மன்னவாவுன்னை யனுதினம்துதிக்கின்றேன்தென்
மதுரை வீரப்பதுரையே.

கன்னப்பிளவுவயர் கைகால்வலிகுட்டம்
கண்டமாலை பவுத்திரம்
கன்னிநோய் நிரிழிவுஅண்டவாதம்
மூலம்கண்குத்தல் மண்டையிடியும்
குன்மமொடுகாக கைவலிமற்றநோய்களையெலாம்
கோரிவுன் பேருரைத்து
மன்னனேவெண்ணிரளிக்கவே தீர்க்குந்தென்
மதுரை வீரப்பதுரையே.

மலையாளசோனகர் தன்னையழிக்கநீ
மாதுமீனாக்ஷிதானும்
நிலையானவர் மெலாம்தந்து
முன்பூசையும்நித்தியனே அளிக்கவாங்கி
அலையுமனதுடைய வுனதன்பருக்குதவவே
அண்ணலேவு மதிடத்தில்
மலைபோல்யிருக்கயெனை யாளாதிருப்பதென்
மதுரை வீரப்பதுரையே.

ஆதரவுன்னையன்றி வேறுகெதியில்லையென்றே
அடுத்தடுத்துந்தன் தாளை
பேதகமிலாமலென்னை யாளுவாயென்றுன்னை
பிரியமுடன்தொழுதுநிற்க
ஆதவன்மரபிலுதி நாதனேயென்னைநீயும்
ஆளாதிருப்பதேதென்சொல்
மாதவர்தொழுதிநின்ற நாதனேயென்னையாள்தென்
மதுரைவீரப்பதுரையே.

அத்தனேவுன்னைதினம் அன்புடன்தொழும்
அடியர்அன்புக்கிரங்கிநீயும்
நித்தியனேதயை புரிந்தாளுங்கிர்பாநிதி
நிரஞ்சனமானதேவே
சுத்தனேதினமுந்தன் அடிதன்னைதொழுமெந்தன்
துயரதைதீக்கியென்றும்
மத்தனுக்கின்றறிவு வரவருள்தருவாய்தென்
மதுரைவீரப்பதுரையே.

காசியில் துளசிமகாராஜனுரீன்ற
யென்கர்த்தனே வுன்னைதினமும்
பூசித்தனேகர்குறை போக்கினர்
நான்வொருவன் பொருளிலாவருமைநோயக்கும்
நீசித்தேனுன்னை யென்குறையை
யகற்றவேநினதுயிரு தாளைத்தினமும்
யாசித்துநின்றிடும் அடியேன்குறைதீர்க்குந்தென்
மதுரை வீரப்பதுரையே.

வீரமாங்காளியிடம் வரமெலாம்பெற்றுநீ
வெற்றிபெற்றிடு மனந்த
வீரப்பிரதாபமதை புகலவென்றாலந்த
விண்ணுளோர் தம்மாலாமோ
[illegible] உயிர்க்கெமன்நீ அல்லால்
[illegible]ந்தநின்பிள்ளையானும்
மாரன்தன் [illegible]கை பழிக்கும்மன்னவனே தென்
மதுரைவீரப்ப துரையே.

மதுரைவீர சுவாமி வல்லபம் முற்றிற்று.

170399
சென்னை-600 00
170399